www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

டிசம்பர் - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

இராக்:
போர் இன்னும் முடியவில்லை

திரையுலகின் நாற்காலிக் கனவு



# புரட்சித் தலைவி!

படிப்பகம்




## வாசகர் கடிதம்

● மாட்டின் பயன்பாடுகளை விளக்கி ஒரு பாடமாக வெளியிட்டு பள்ளிகளிலேயே கல்வியளிக்க வேண்டும். ஏனெனில் நீதிக் கதைகள் என்ற போர்வையில் மனுநீதிச் சோழன் கதையில் வருவது போலப் பசுவையோ கன்றையோ கொன்றால் அவனையும் கொல்ல வேண்டும் என்ற பார்ப்பனக் கருத்தியலைப் பிஞ்சு உள்ளங்களிலேயே விதைக்கின்றனர். பசுவதைத் தடைச் சட்டத்தின் பார்ப்பன உள்நோக்கமும், மறுகாலனியாதிக்கச் சதித்திட்டத்தினால் அழகுச் சென்னையை உருவாக்குவதும் ஒரு கலவையாகச் சேர்ந்துள்ளன என்பதைத் தெரிந்து கொண்டேன். தற்போது 17 மாநிலங்களில் முழுமையாகவோ, பகுதியாகவோ பசுவதைத் தடைச்சட்டம் அமலில் இருப்பது குறித்து அதிர்ச்சியடைந்தேன். எப்போதும் நான் பலரிடமும் மாட்டிறைச்சியின் முக்கியத்துவத்தைப் பேசி சில நண்பர்களை உண்ணுவதற்குப் பழக்கப்படுத்தியதுண்டு. ஆனால் தற்போது மிகச்சிறந்த ஆதாரமாக, ஆயுதமாக புதிய கலாச்சாரம் வெளிவந்துள்ளது. மாட்டின் பயன்பாடு இத்தனைப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறதா என ஆச்சரியமாகவும், மலைப்பாகவும் இருந்தது.

**- புரட்சித் தூயன், தருமபுரி.**

● சிறப்பிதழை வழக்கறிஞர்கள், தலித் அமைப்பினர், கே.வி.ஆர். (கர்நாடக விமோசன ரங்கா) அமைப்பினர் உட்படப் பலர் வரவேற்றனர். சி.பி.ஐ. கட்சியினர் மாடு வெட்டிப் பிரியாணி செய்யும் போராட்டத்தை விரைவில் நடத்துவதாகக் கூறியுள்ளனர். சிலர் மாட்டிலுள்ள மருத்துவ குணத்தை தெரியாமல் மாட்டிறைச்சியை உண்ணாமல் இருந்துள்ளேன், இனி தாமதிக்காமல் உணவு எடுத்துக் கொள்வேன் என்று கூறினார்கள்.

**- சுந்தர், கோலார் தங்க வயல்.**

● **பாரதி அவலம்:** ரசிய விவசாயிகளை, ஒடுக்கப்பட்ட மக்களை தனது படைப்புக்களின் மூலம் தட்டி எழுப்பி உணர்ச்சி கொள்ளச் செய்தவர் டால்ஸ்டாய். ரசியப் பாட்டாளி வர்க்கத்திற்கு தனது இலக்கியங்கள் மூலமாகக் கருத்தியல் ரீதியாக ஆயுதங்களை வழங்கியவர் கார்க்கி. தான் கண்ட காட்சிகளை மட்டும் மனதில் புகுத்தி பார்த்த மாத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டுப் பாடிவிட்டு, தான் பார்க்கும் காட்சி நிலவரங்கள் ஏன் உருவானது என்று சிந்திக்காதவர் பாரதி என்பதே உண்மை. டால்ஸ்டாயோடு பாரதியை ஒப்பிடுவது அவலம் என்பதை விட மிகத் தவறானது என்று அறிவுறுத்துவது சாலச் சிறந்தது!

**-செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி.**

● மாட்டுக்கறி உணவை உழைப்போடு உணர்ந்து சுவைத்துத் தொகுக்கப்பட்ட கட்டுரைகள், நேரடித் தகவல், மாட்டுக் கொழுப்பின் மூலம் எண்ணிலடங்கா பொருட்கள் தயார் செய்யப்படுவதைக் கண்டும், அதைத் தொகுத்து வழங்கிய (பின் அட்டையில்) சிறப்பு விதமும் வரவேற்கப்பட்டது. மாட்டுக்கறி சாப்பிடுபவரைக் கண்டு இழிவாகப் பார்க்கும் அத்தனைப்பேரின் வயிற்றுக்குள்ளும் மாட்டுக் கொழுப்பு கலந்திருப்பது கண்டு மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் முழிக்கின்றனர். ஒவ்வொரு விதத்திலும் பத்திரிக்கையில் செயலாற்றிய அனைத்துத் தோழர்களுக்கும் வாழ்த்துக்கள்.

**- பகத்சிங் புத்தகப் பயணம், திருச்சி.**

● ''சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்'' - தொடர் வெளியிட்டது போல், இசுலாம் - கிறித்தவ மதத் தோற்றம் பற்றியும், அவற்றின் முற்போக்கு, பிற்போக்குக் கருத்துக்கள், தற்பாதைய மத நிலவரங்கள் பற்றியும், த.மு.மு.க. போன்ற இசுலாமிய அமைப்புக்களைப் பற்றியும் தொடராக வெளியிட வேண்டுகிறேன். மேலும் தங்களது இதழ்களில் வெளியான ரோஜா, அஞ்சலி, பம்பொய், ஹேராம், டைட்டானிக், விசுவின் பார்ப்பன நீதி, ராஜ்கிரணின் பெண்ணடிமைத்தனம், மகாநதியல்ல கானல் நீர் போன்ற சினிமா விமரிசனங்களைப் புத்தகமாக வெளியிட்டால் இவைகளைப் படிக்காத என் போன்றோர் படித்துப் பயன்பெற உதவியாய் இருக்கும்.

**- ஆனந்தன், கோவை.**

● ''பார்ப்பன மதவெறிக் கும்பல் பசுவிற்கு 'கோமாதா' என்று பட்டம் சூட்டி அதை வெட்டுவது கொலைப் பாதகம் எனப் பிரச்சாரம் மேற்கொண்ட போதெல்லாம் எனக்கு அந்தப் பசு மாட்டை பால் தரும் பசு என்பதற்கு மேல் வைத்துப் பார்க்க முடியவில்லை. *புதிய கலாச்சாரம்* சிறப்பிதழில் மாட்டை வெட்டி கொம்பு முதல் குளம்பு வரை மனிதன் எவற்றிற்கெல்லாம் பயன்படுத்துகிறான் என்பதைத் தெரிந்தபின் அம்மாட்டை வணங்கினால்தான் என்ன எனச் சிந்திக்கத் தூண்டுகிறது'' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார் ஒரு நண்பர். அந்த அளவிற்கு கருத்துச் செறிவுகளை - அறியாத பல விசயங்களை வாரி வழங்கியுள்ளது இச்சிறப்பிதழ்.

''கிடா வெட்டும் போராட்டம் - மூட நம்பிக்கையை வளர்க்குமா?'' என்ற கட்டுரை தி.க. வீரமணி வகையறாவிற்கு மட்டுமல்ல, அவர்களைப் போலவே சிந்திக்கும் சில 'மேதாவி' களுக்கும் நல்ல சாட்டையடி. ''காக்க... காக்க...''வை நன்றாகவே தாக்கியுள்ளார் மதிமாறன். படத்தில் எவ்வளவுதான் போலீசைத் தியாகிகளாகச் சித்தரித்து மக்களை மதிமயக்கக் கனவு கண்டாலும் நிஜத்தில் போலீசின் உண்மைச் சொரூபத்தைச் சுக்கு நூறாகப் போட்டு உடைத்திருக்கிறது, திரை விமரிசனம்.

மொத்தத்தில் ஆட்சியாளர்களின் வெறியாட்டம் நாலுகால் பாய்ச்சலில் அரங்கேறும் இத்தருணத்தில் இச்சிறப்பிதழ் பிறமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இந்தியா முழுவதும் கொண்டு செல்லப்படல் வேண்டும்.

**- பு.க. வாசகர் வட்டம், சிவகங்கை.**

### இந்த இதழுடன் (டிசம்பர் 03) முடிவுறும் சந்தாதாரர்கள்

1, 90, 92, 95, 157, 310, 366, 417, 420, 596, 707, 712, 768, 774, 775, 776, 777

### அடுத்த இதழுடன் (ஜனவரி 04) முடியும் சந்தாதாரர்கள்

4, 55, 141, 229, 778, 779, 780, 781, 782, 783, 784, 785, 786, 787, 788, 789, 790, 791, 792, 793, 794, 795, 796, 797, 798, 799, 800, 801, 802, 803, 804, 805, 806, 807, 808, 810, 811, 812, 823, 824, 825, 826, 827, 857

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 21
• குரல்: 7
• டிசம்பர் - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

அலுவலக நேரம்:

காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

அட்டை ஓவியம்: முகிலன்
அட்டை வடிவமைப்பு: ஸ்பார்ட்டகஸ்

## சிறப்புத் தலையங்கம்:

# புர்ரட்சித் தலைவி!

**டா**ன்சி வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை இரண்டே வரிகளில் இப்படிச் சுருக்கிக் கூறலாம். தி.மு.க. உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்தது; உச்ச நீதிமன்றமோ ஜெயலலிதாவின் மனச்சாட்சியிடம் மேல்முறையீடு செய்திருக்கிறது. ஜெயலலிதா தண்டிக்கப்பட வேண்டுமென விரும்பியவர்களும், நிச்சயம் தண்டிக்கப்பட்டு விடுவாரென நம்பியவர்களும் தீர்ப்பைக் கேட்டவுடன் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். அ.தி.மு.க.வினர் பட்டாசு வெடித்துக் கொண்டாடியதையும், ''நீதி தேவதைக்கு நன்றி'' என அவர்கள் ஒட்டிய சுவரொட்டிகளையும் கண்டு மனம் வெதும்பிய சிலர் ''பெட்டி வாங்கிட்டான்னு நாமும் போஸ்டர் அடிச்சு ஒட்டினா என்ன? நீதிமன்ற அவமதிப்புன்னு கைது பண்ணுவானா? பண்ணட்டும். எத்தனை ஆயிரம் பேரைக் கைது பண்ணுவான்னு பாப்போம்'' என்று குமுறினார்கள்.

''நீதித்துறையைப் பெட்டிக்குள் அடக்க முடியாது'' என்று அவர்களிடம் நாம் வாதாட முடியாது. நீதிபதிகளில் சுமார் 25 சதவீதம் பேர் கறை படிந்தவர்களென்று முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியே 'தீர்ப்பளித்திடும்போது' அவரை மறுத்து வாதாடுமளவுக்கு நம்மிடம் ஆதாரங்களில்லை.

எனினும், ''நீதி பெட்டிக்குள் அடங்கி விட்டது'' என்ற வகையிலான இந்தப் பொதுக்கருத்தை நாம் மறுப்பதற்கு வேறு காரணமிருக்கிறது. இந்த அரசமைப்பு நீதியானதென்றும், அரசியல்வாதிகளும் அதிகாரிகளும், நீதித்துறையும் சட்டத்தைக் கறாராகப் பற்றியொழுகினால் பூலோக சொர்க்கத்தை இந்தியாவில் உருவாக்கி விடலாமென்றும் ஆளும் வர்க்கம் உருவாக்கியிருக்கும் மாயையை இந்தப் பொதுக் கருத்து வழிமொழிகிறது. மாறாக, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்போ மேற்படி மாயைகளைப் பொடிப்பொடியாக நொறுக்குகிறது; பட்டப்பகலில் வழிப்பறி செய்தாலும் ''ஓட்டுக் கட்சிகளையோ, அதிகாரவர்க்கத்தையோ சட்டப்படி தண்டிக்க முடியாது'' என்ற உண்மையை இந்தத் தீர்ப்பு மிகவும் நேர்த்தியான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறது.

•••

**ச**ந்தை விலையை விடக் குறைவான விலைக்குத்தான் டான்சி சொத்து விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்றும், இதனால் அரசுக்கு இழப்பும், ஜெயலலிதா - சசிகலாவுக்கு ஆதாயமும் கிட்டியிருக்கிறதென்றும் சிறப்பு நீதிமன்றம் கூறியது. அதனடிப்படையில் தண்டனையும் விதித்தது. ''ஒரு பொருளின் சந்தை மதிப்பை யார், எப்படி நிர்ணயம் செய்ய முடியும்?'' என்ற தத்துவ ஞானக் கேள்வியை எழுப்பிய சென்னை உயர் நீதிமன்றம் ஜெயலலிதாவை விடுதலை செய்தது.

இதை வழிமொழிந்ததுடன் நில்லாமல், உச்ச நீதிமன்றம் இன்னும் ஒரு படி மேலே சென்றிருக்கிறது. இந்தப் பரிவர்த்தனையில் ஜெயலலிதாவும் சசிகலாவும் தவறான ஆதாயமும் அடையவில்லை; டான்சி நிறுவனம் தவறான நட்டமும் அடையவில்லையெனக் கூறியிருக்கிறது.

அப்படியானால் ஒரு வர்த்தகப் பரிவர்த்தனையில் ''நியாயமான லாபம், நியாயமான நட்டம் என்பனவற்றைத் தீர்மானிக்கும் அளவுகோல் எது?'' என்ற கேள்வி நமக்கு எழுகிறது. நெல்லுக்கும் கரும்புக்கும் நியாயமான விலை கேட்கும் விவசாயி, முதலுக்கு மோசமில்லாத விலையை நியாயவிலை என்று கருதுகிறான். உயிர் காக்கும் மருந்துகளுக்கு விலை நிர்ணயிக்கும் பன்னாட்டு நிறுவனங்களோ 300 சதவீத லாபத்தை நியாயமான லாபமாகக் கருதுகின்றன. இதைத் 'தவறான லாபம்' என்று கூறித் தடை செய்யும் அதிகாரம் அரசுக்கோ நீதிமன்றத்துக்கோ இல்லை.

அதேபோல, 1000 கோடி ரூபாய்க்கு மேல் சொத்து மதிப்புள்ள மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தை வெறும் 120 கோடி ரூபாய்க்கும், பால்கோ நிறுவனத்தை அடிமாட்டு விலைக்கும் விற்பனை செய்த அமீனாத்துறை அமைச்சர் அருண் ஷோரியும் ''இந்த நிறுவனங்களின் சந்தை மதிப்பு இவ்வளவுதான்'' என்று வாதாடுகிறார். ஆகவே ஒரு பொருளின் சந்தை விலையை இன்னதென்று தீர்மானிக்க வியலாது எனும்போது, அதை வாங்கியவர் எவ்வளவு லாபமடைந்தார் என்பதையும் திட்டவட்டமாக யாரும் கூற முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

நன்றி: ''தி இந்து''




இன்னதென்று கூற முடியாத சந்தை விலை, இன்னதென்று கண்டுபிடிக்க முடியாத வழிகளின் மூலம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் உருவாக்கப்படுகின்ற முன்மாதிரி விலை (guiding value) என்ற ஆதாரங்களை வைத்துக் கொண்டு எந்தச் சட்டத்தால்தான் குற்றத்தை நிரூபிக்க முடியும்? அதனால்தான் ''யாரும் தவறான லாபமோ, நட்டமோ அடையவில்லை'' என்று மிகவும் எச்சரிக்கையுடன் வரம்பிட்டுக் கொள்கிறது தீர்ப்பு.

அப்படியானால் ''தவறான முறையில் ஆதாயமடைவது'' என்ற நோக்கமில்லாத புரட்சித்தலைவி, டான்சி நிலத்தை ஏன் வாங்கினார்? முடவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குவதைப் போல, நொடித்துப் போன டான்சி நிறுவனத்துக்கு அம்மா அவர்கள் தாயுள்ளத்துடன் தனது கைக்காசை வழங்கியிருக்கிறார் என்பதைத் தவிர வேறென்ன நோக்கம் கற்பிக்க முடியும்?

●●●

**டா**ன்சி நிலம் அரசுச் சொத்தென்றும் அதை அரசு ஊழியராகிய முதல்வர் வாங்கியது குற்றமென்றும் கூறப்பட்ட குற்றச்சாட்டையும் இத்தீர்ப்பு நிராகரித்து விட்டது. ''அரசுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், ஒரு 'அரசு நிறுவனம்' என்பதற்குத் தனித்த சட்ட அடையாளம் இருக்கிறது. எனவே அரசுச் சொத்தையும் அரசு நிறுவனத்தின் சொத்தையும் ஒன்றெனக் கருதவியலாது. மேலும், 'அரசு நிறுவனத்தின் சொத்தை அரசு ஊழியர் வாங்குவதும் குற்றமே' என்று சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை'' என்று விளக்கமளிக்கிறது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

இத்தீர்ப்பின் விளைவாக அதிகாரிகளும் அமைச்சர் பெருமக்களும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை ஒளிவு மறைவான முறைகளில் திருட வேண்டிய அவல நிலை ஒழிக்கப்பட்டு விட்டது. எடுத்துக் காட்டாக, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் அதிகாரிகளும் வாங்கிக் கொள்ளலாம். அவற்றுக்கான நியாயமான விலையையும் அவர்களே நிர்ணயம் செய்து கொள்ளலாம்.

ஒருவேளை சென்னை கடற்கரை போன்ற நேரடியான அரசுச் சொத்தை வாங்க சசிகலா அம்மையார் விரும்பினால், முதலில் ஒரு அரசு உத்தரவின் மூலம் மெரினா கடற்கரையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமாக்க வேண்டும். பிறகு கடற்கரையை விலைக்கு வாங்கியதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து சுற்றுலாக் கழகத்தை மீட்க புரட்சித் தலைவியவர்கள் தன் சொந்தக் காசைக் கொடுத்து மேற்படி கடற்கரையைத் தன் பெயருக்கே மாற்றிக் கொள்ளலாம்.

அரசுச் சொத்து வேறு, அரசுத்துறைச் சொத்து வேறு என்று கூறும் இத்தீர்ப்பு, ''பொதுத்துறை (Public Sector) பொது மக்களுக்குச் சொந்தமானது'' என்ற மாயையைத் தகர்த்து, ''அது அதிகார வர்க்கத்தின் உடைமை'' என்ற உண்மையை நிலைநாட்டியிருக்கிறது. பொதுத்துறையைத் தனியார்மயமாக்கும் மறுகாலனியாக்க நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றம் / சட்டமன்றத்தின் ஒப்புதல் கூடத் தேவையில்லை என்பதற்கும், அத்தகைய முடிவுகளை அதிகாரவர்க்கமே மேற்கொள்ளலாம் என்பதற்கும், ஏற்கெனவேயுள்ள சட்டத்தில் பொதிந்திருக்கும் வாய்ப்புகளை இத்தீர்ப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

●●●

**ச**ந்தை விலை அரசுச் சொத்து என்ற இரு கருத்தாக்கங்களையும் நிராகரித்ததுடன் உச்ச நீதிமன்றம் நிற்கவில்லை. ''இந்தச் சொத்தைக் குறைந்த விலைக்கு வாங்க ஜெ, சசி மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட ஆறு பேர் **சதித்திட்டம் தீட்டினர்**'' என்ற குற்றச்சாட்டையும் ஏற்க மறுத்திருக்கிறது. ''முதல்வர் விரும்பும் வகையில் இந்த விற்பனை இடையூறின்றி நடந்து முடிய வேண்டுமென்பதில் அதிகாரிகள் பேரார்வம் காட்டியிருப்பார்கள்'' என்று ஒப்புக் கொள்ளும் இத்தீர்ப்பு வேறொரு கேள்வியை எழுப்புகிறது. ''குற்றம் சாட்டப்பட்டவர்களுடைய சிந்தனைகள் வெவ்வேறு கட்டங்களில் எவ்வாறு சந்தித்தன, அவர்களுடைய பொதுத்திட்டம் என்ன என்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை'' என்பதால் சதி (குற்றப்பிரிவு 120-B) என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கிறது.

சதியை எப்படி நிரூபிப்பது? தீவிரவாதிகளின் சதியை நிரூபிப்பது சுலபம். அவர்கள் பாலத்தின் அடியிலோ புதர் மறைவிலோ பாழடைந்த மண்டபத்திலோ நள்ளிரவில் காடா விளக்கொளியில் ஒன்று கூடுவார்கள்; ''சட்டபூர்வமாக அமைந்த இந்த அரசை, செக்ஷன்: 120-Bயின் கீழ் தூக்கியெறிவோம்'' என்று பத்தடி தூரத்தில் ரோந்து போகும் ஏட்டின் காதில் விழும்படி சபதம் செய்வார்கள். அந்த நேரத்தில் அதே இடத்திற்குச் சிறுநீர் கழிக்க வரும் கிராம நிர்வாக அதிகாரியைச் சாட்சியாக்கி குற்றம் நிரூபிக்கப்பட்டு 'தீவிரவாதிகள்' தண்டிக்கப்படுவார்கள்.

ஆனால் ஜெ-வும், அதிகாரிகளும் தீவிரவாதிகள் அல்ல என்பதுடன் அவர்கள் பாழடைந்த மண்டபத்திலும் சந்திப்பதில்லை என்பதால் ஏட்டுகளால் அவர்களை வேவு பார்க்க முடியாது. குறிப்பாக, சட்டபூர்வமாக அமைந்த

www.padippakam.com

அரசின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் கோட்டையில் சந்தித்துப் பேசும்போது அது வளர்ச்சித் திட்ட விவாதமா, சதியாலோசனைக் கூட்டமா என்று சோதித்தறியும் .அதிகாரமும் யாருக்கும் வழங்கப்படவில்லை. மேலும், காதலர்களின் உள்ளம் குறிப்பறிந்து செயலாற்றுவதைப் போலவே களவாணிகளின் உள்ளமும் குறிப்பறிந்து செயல்படுகிறது. இத்தகைய செயல்பாடுகளுக்கான ஆதாரங்களோ, சாட்சியங்களோ அரிதாக ஓரிரு வழக்குகளில் சிக்கலாம். அது சீப்பில் சிக்கிய முடியைப் போன்றது. எனவே விளைவிலிருந்து சதியை ஊகிக்க முடியுமேயன்றி, சதித்திட்டத்தின் கூட்டக் குறிப்பைக் கண்டுபிடிக்க ஒருக்காலும் முடியாது. எனினும் ஊகத்தின் அடிப்படையில் குற்றம் சாட்ட முடியாது என்கிறது உச்ச நீதிமன்றம். ''பாபர் மசூதியை இடிக்கும் சதித்திட்டத்தில் அத்வானியின் பங்கை நிரூபிக்க ஆதாரமில்லை'' என்று கூறி விடுவித்ததைப் போல!



**வெறும் மனச்சாட்சியினால் உச்ச நீதிமன்றத்தையே வீழ்த்திய ஜெயா - கற்சிலை அம்மனுக்கு நன்றி சொல்கிறார்!**

●●●

அடுத்ததாக, ''டான்சி சொத்தை வாங்கியதன் மூலம் அரசு ஊழியர்க்கான நன்னடத்தை விதியை ஜெயலலிதா மீறியிருக்கிறாரா? ஆம், எனில் அந்த நன்னடத்தை விதி மீறல் என்பது இ.பி.கோ. 169வது பிரிவின்படி தண்டிக்கத் தகுந்த குற்றமாகுமா?'' என்ற கேள்வியைப் பரிசீலிக்கிறது இத்தீர்ப்பு.

''அரசு ஊழியர் நன்னடத்தை விதி என்பது கனவான்கள் ஏற்கும் ஒரு ஒப்பந்தம்; அதனை மீறுவது நீதிமன்றத்தால் தண்டிக்கப்படக் கூடிய கிரிமினல் குற்றமாகி விடாது. மேலும், நன்னடத்தை விதியின் சொற்களை ஜெயலலிதா மீறவில்லை (டான்சி நிலம் நேரடியான அரசுச் சொத்தல்ல என்ற காரணத்தினால்); அதன் உணர்வைத்தான் மீறியிருக்கிறார்'' என்று விளக்கமளிக்கிறது உச்ச நீதிமன்றம்.

நன்னடத்தை விதியை மீறுவது கிரிமினல் குற்றமாகி விடாது என்ற தீர்ப்பு ஒருபுறமிருக்கட்டும்; 1968-ம் ஆண்டு சேர்க்கப்பட்ட அந்த விதி என்ன கூறுகிறது தெரியுமா? ''அசையாச் சொத்து எதையும் அரசிடமிருந்து வாங்குவதையோ விற்பதையோ அமைச்சர்கள் **தவிர்க்க வேண்டும்''** என்கிறது.

இதனை 'விதி' என்று பெயரிட்டு அழைக்கவியலுமா? இது ஒரு நல்லொழுக்க போதனை, அவ்வளவுதான். இந்த விதி ஜெயலலிதாவால் உருவாக்கப்பட்டதல்ல; எனவே இதற்காக அவரை நாம் குற்றம் சாட்ட முடியாது.

நன்னடத்தை விதி மட்டுமல்ல, குற்றப்பிரிவு: 169-உம் மேம்போக்காகவே உள்ளது. எவையெவை அரசுச் சொத்துக்களாகக் கருதப்படும் என்பதை இச்சட்டத்திலேயே தெளிவுபடுத்தியிருக்க முடியும். இது கவனக்குறைவாக நேர்ந்த தவறல்ல; கவனமாகச் செய்யப்பட்டிருக்கும் சூழ்ச்சி. சட்டத்தின் சொற்களையும் வாக்கியங்களையும் அமைக்கும் ஆளும் வர்க்கச் சட்ட வல்லுநர்கள் ஒவ்வொரு சொல்லின் பொருளையும் ஆராய்ந்து தேவையான சொற்களுக்கு அடிக்குறிப்பும் பொருள் விளக்கமும் அளிக்கிறார்கள்.

**''டான்சி வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கி உள்ள தீர்ப்பை இரண்டே வரிகளில் இப்படிச் சுருக்கிக் கூறலாம். தி.மு.க. உச்ச நீதிமன்றத்திடம் மேல் முறையீடு செய்தது; உச்ச நீதிமன்றமோ ஜெயலலிதாவின் மனச்சாட்சியிடம் மேல்முறையீடு செய்திருக்கிறது.''**

வெள்ளையனால் உருவாக்கப்பட்டு இன்னும் அமலில் இருக்கும் தேசத்துரோகச் சட்டம் (பிரிவு: 124-A) முதல், பொடா வரையிலான சட்டங்கள் கூறுவதென்ன? செயலால் மட்டுமல்ல, பேச்சு - எழுத்து - சைகை ஆகிய எந்த வடிவில் இருந்தாலும் 'தேசத்துரோக - பயங்கரவாதக் குற்றங்களை' அவை அடையாளம் காட்டுகின்றன. ஜெயலலிதாவின் 'டெஸ்மா'வோ போராட்டத்தை ஆதரித்துக் கருத்து கூறுவது, தொழிற்சங்க உண்டியலில் காசு போடுவது உள்ளிட்ட அனைத்தையும் குற்றமாக இனம் காண்கிறது. ஆனால் இத்தகைய சட்டங்களை உருவாக்கிய மேதைகளால் அரசாங்கச் சொத்துக்கள் எவையெவை என்பதை மட்டும் தெளிவாக இனம் காட்ட முடியவில்லையாம்! ஒரு வேளை சுண்டெலிகள் தப்பிச் செல்வதற்காக வேண்டுமென்றே விடப்பட்டிருந்த சட்டத்தின் ஓட்டையாக அது இருந்திருக்கக் கூடும்! ஆனால் அதையே குடைந்து பெரிதாக்கி, பெருச்சாளி தப்பிவிட்டது. ஓட்டையை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் அதை அடைக்குமாறு உத்தரவிடவில்லை; 'நன்னடத்தை விதியின் உணர்வு' என்று அந்த ஓட்டைக்குப் பெயரிட்டிருக்கிறது.

ஜெயலலிதா 'விதி'யை மீறவில்லை; விதியின் உணர்வைத்தான் மீறியிருக்கிறார். விதியும், சட்டமும் அறிவுபூர்வமானவை; எனவே அவற்றை மீறுவது தண்டனைக்குரிய குற்றம். உணர்வோ மனம் சார்ந்தது. எனவே ஜெயலலிதாவின் மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுகிறது உச்ச நீதிமன்றம். தீர்ப்பின் இரண்டாவது அத்தியாயம் இங்கே தொடங்குகிறது.

●●●

சட்டப்படி ஜெயலலிதா குற்றவாளியல்ல என்றபோதிலும், அவர் வகிக்கும் பதவி கோருகின்ற நடத்தையும், அவரது உண்மையான நடத்தையும் முரண்படுவதை உச்ச நீதிமன்றம் சுட்டிக்



படிப்பகம்

www.padippakam.com

காட்டுகிறது ''...நிபந்தனையற்ற முறையில் டான்சி சொத்தைத் திருப்பிக் கொடுப்பதன் மூலம் தனது தவறுக்கு அவர் பிராயச்சித்தம் தேடவேண்டும்... அதுமட்டுமல்ல, 'சொந்த ஆதாயத்திற் காக விதிகளை வளைக்கிறார்' என்ற சந்தேகம் எழும் வகையில் நடந்து கொண்டதும், நன்னடத்தை விதிகளின் உணர்வை மீறியதும் சரிதானா' என்று ஆழ்ந்து சிந்தித்து அவர் தன்னுடைய மனச்சாட்சிக்கே பதில் சொல்ல வேண்டும்'' என்று உருக்கமாக வேண்டிக் கொள்கிறது நீதிமன்றம்.

சாட்சிகளை மிரட்டிப் பல்டியடிக்க வைத்ததன் மூலம் சொத்துக் குவிப்பு வழக்கை கர்நாடகத்துக்கு மாற்றக் கார ணமாயிருந்த மனச்சாட்சியிடம், சிறைத் தண்டனை பெற்றதால் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்த போதும் நேரடியாக முதல்வர் நாற்காலியில் அமரத் தயங்காத மனச் சாட்சியிடம், டான்சி ஒப்பந்தத்தில் தான் போட்ட கையெழுத்தையே 'போர்ஜரி' என்று கூண்டிலேறிப் பொய்ச் சத்தியம் செய்யத் தயங்காத மனச்சாட்சியிடம் தான் தாம் வேண்டுகோள் விடுக் கிறோம் என்ற உண்மை நீதிமன்றத் துக்குத் தெரியாமலிருக்க வாய்ப் பில்லை. எனினும் இந்த மனச்சாட்சிக் குள்ளே இன்னொரு உண்மையான மனச்சாட்சி ஒளிந்திருக்கக் கூடுமென நீதியரசர் நம்பியிருக்கலாம். சரியாகச் சொன்னால், அத்தகையதொரு நம்பிக் கையை நமக்கு உருவாக்க அவர்கள் முனைந்திருக்கலாம்.

எவ்வாறு இருப்பினும் அந்த முயற் சியை முளையிலேயே கிள்ளி யெறிந்தார் ஜெயலலிதாவின் வழக்கு ரைஞர் வேணுகோபால். ''புரட்சித் தலைவி அவர்கள் மேற்படி சொத்தை டான்சி நிறுவனத்துக்கு ஏற்கெனவே தானமாக வழங்கிவிட்டார்'' என்ற உண்மையை நீதிமன்றத்தின் முன் எடுத்துக் கடாசினார். இதன் மூலம் மேற்படி வழக்கின் நிலவரம் குறித்த உச்ச நீதிமன்றத்தின் அறியாமையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி யது மட்டுமல்ல, ''தீர்ப்பு வழங்கப்படுவ தற்கு முன்பே புரட்சித் தலைவியின் மனச்சாட்சி முன் தேதியிட்டு அதனை அமல்படுத்தி விட்டது'' என்ற உண்மை யையும் அவர்களுக்கு உணர்த்தினார்.

●●●

புரட்சித் தலைவியின் மனச்சாட் சிக்கு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருக்கும் அதே தருணத்தில், இத்தீர்ப்பில் துருத்திக் கொண்டு நிற்கும் முரண்பாடுகள் நீதிபதிகளின் 'மனச் சாட்சி'யைக் குத்தத் தொடங்குகின்றன போலும்! ''சாதாரண அரசு ஊழியர் களுக்கு ஒரு சட்டம், முதலமைச்சருக்கு வேறொரு சட்டமா? நன்னடத்தை விதி என்பது என்ன? அது சும்மா அருங்காட் சியகத்தில் வைத்து வேடிக்கை பார்க்கத் தக்க புராதனக் கலைப் பொருளா? இந்த விசயங்கள் எங்கள் மனச்சாட்சியை கவலைக்குள்ளாக்குகின்றன'' என்று அங்கலாய்க்கிறார்கள்.

**''உச்ச நீதிமன்றம், அரசியல் சட்டம், பத்திரிக்கைகள் போன்ற 'சர்வ வல்லமை' பொருந்திய இந்திய ஜனநாயகத்தின் தூண்களையெல்லாம் தன் காலால் மிதித்து அப்பளம் போல நொறுக்கிய புரட்சித் தலைவி, உலகளந்த பெருமாளாய் உயர்ந்து நிற்கிறார்.''**

''அவை கலைப் பொருட்களல்ல, கொலைப் பொருட்கள்'' என்று கதறு கிறார்கள் தமிழகத்தின் அரசு ஊழி யர்கள். எந்த நன்னடத்தை விதியை ''தண்டனைக்குரிய கிரிமினல் குற்ற மல்ல'' என்று இந்தத் தீர்ப்பு கூறு கிறதோ, அதே விதிகளின்படிதான் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒப்புக் கொண்ட ஊதியத்தைத் தர மறுக்கும் தமிழக அரசின் 'ஒப்பந்த மீறல்' (Breach of Contract) உச்ச நீதி மன்றத்தால் அன்று கேள்விக்குள்ளாக் கப்படவில்லை; மாறாக, வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டதன் மூலம் அரசு ஊழி யர்கள் நன்னடத்தையிலிருந்து வழுவி யதைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றம் எச்சரித்தது. ''வேலை நிறுத்தம் செய்வ தற்கான தார்மீக உரிமையோ சட்டபூர்வ உரிமையோ அரசு ஊழியர்களுக்குக் கிடையாது'' என்று மிரட்டியது. ஆனால் அரசு நிறுவனத்தின் சொத்தை முதல மைச்சர் விலைக்கு வாங்குவது சட்டப் படி குற்றமல்ல என்றும், அது தார்மீக ரீதியில் தவறு என்பதால் முதல்வர் மனம் வருந்தித் தனது சொந்த மனச்சாட் சிக்குப் பதிலளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுகிறது. மனம் வருந்தி மன்னிப்புக் கேட்ட ஊழியர் களையோ நீதிபதிகள் இரக்கமின்றித் தண்டிக்கிறார்கள்.

**''இத்தீர்ப்பின் விளைவாக அதிகாரிகளும் அமைச்சர் பெருமக்களும் பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்களை ஒளிவு மறைவான முறைகளில் திருட வேண்டிய அவல நிலை ஒழிக்கப்பட்டு விட்டது.''**

''சாதாரண அரசு ஊழியர்களுக்கு ஒரு சட்டம், முதலமைச்சருக்கு ஒரு சட்டமா?'' என்ற கேள்வி பாதிக்கப் பட்ட அரசு ஊழியர்களிடமிருந்து வெடித்துக் கிளம்பும் கேள்வி. அந்தக் கேள்விக்கு விடை சொல்ல வேண்டிய உச்ச நீதிமன்றமோ புரட்சித் தலைவி யின் பாதாரவிந்தங்களில் மேற்படி கேள்வியை சமர்ப்பிக்கிறது. உச்ச நீதி மன்றம், அரசியல் சட்டம், பத்திரிக் கைகள் போன்ற 'சர்வ வல்லமை' பொருந்திய இந்திய ஜனநாயகத்தின் தூண்களையெல்லாம் தன் காலால் மிதித்து அப்பளம்போல நொறுக்கிய புரட்சித் தலைவி, உலகளந்த பெரு மாளாய் உயர்ந்து நிற்கிறார்.

ஒரு தத்துவஞானக் குறிப்புடன் தீர்ப்பு முடிவடைவதாகக் கூறுகிறது 'இந்து' நாளேடு. அதன் சாரம் பின்வரு மாறு: ''பொதுவாகக் கிரிமினல் சட்டம் என்பது கிரிமினல்களைக் கையாள் வதற்கானது; உயர் பதவிகளை வகிப்ப வர்களிடமோ நாம் அதியுன்னதமான நாணயத்தை எதிர்பார்க்கிறோம்.''

அவலச்சுவை ததும்பும் இந்தத் தத்துவக் குறிப்பு வெளிப்படுத்தும் உண்மை இதுதான். சூத்திரனுக்குத் தண்டனை; பார்ப்பானுக்குப் போதனை; ஆளப்படும் மக்களுக்குப் பாசிசம்; ஆளும் வர்க்கங்களுக்குப் பரிகாரம்! அசுரர்களுக்கு நஞ்சு, தேவர்களுக்கு அமிழ்தம்! இந்திய ஜனநாயகம் எனும் பாற்கடலை டான்சி வழக்கெனும் மத்தால் எட்டாண்டுகள் இடையறாது கடைந்து, இந்த தேவரகசியத்தை உலகறியச் செய்த 'புரட்சி'த் தலைவிக்கு நன்றி சொல்வோம்!

இனி, உண்மையானதொரு புரட்சிக்கு ஆகவேண்டிய வேலை களைக் கவனிப்போம்!

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

## திரைஉலகம்:

# பொய் நாயகர்களின் நாற்காலிக் கனவுகள்

"கனவுத் தொழிற்சாலைகள்" என்று சினிமாத்துறையை அதன் இளைய பங்காளியான செய்தி ஊடகம் செல்லமாகச் சித்தரிப்பது உண்டு. கனவுகள் என்னும் சரக்குகளை உற்பத்தி செய்து விற்கிறது "சினிமா உலகம்" என்ற பொருளில் அப்படிச் சொல்லப்படுகிறது.

ஆனால், வெறுமனே பொழுது போக்கிற்கான சரக்குகளை உற்பத்தி செய்து விற்பதோடு இந்தச் சினிமாவும் செய்தி ஊடகமும் நின்று விடுவதில்லை. இவை இரண்டும் கைகோர்த்துக் கொண்டு சமூக விரோதச் செயலிலும் ஈடுபட்டுள்ளன. ஒட்டு மொத்தச் சமூகத்தையும் ஒருவித மயக்கத்திலும், ஒரு பெரிய இளைஞர் கூட்டத்தை ஒருவித போதையிலும் தள்ளுவதன் மூலம் ஆதாயம் அடைவதுதான் சினிமா, செய்தி ஊடகம் இரண்டினது குறியாக இருக்கிறது.

எந்தவிதப் பொது அறிவோ, அரசியல் அறிவோ, சமுதாய அறிவோ இல்லாத தார்மீக ஒழுக்கமற்ற, பண்பாடற்ற, சமூக மதிப்பீடற்ற 'வெத்துவேட்டு' சினிமா நாயகர்களை (ஹீரோக்களை) சகலகலா வல்லவர்களாகச் சமூகத்தில் உலவ விடுவதே சினிமா, செய்தி ஊடகம் இரண்டினது வியாபார உத்தியாக உள்ளது.

சினிமா நாயகர்களைப் பொருத்த வரை அவர்கள் படங்களில் பேசும் வசனத்துக்கோ, வாயசைக்கும் பாடல்களுக்கோ, காட்டும் முகபாவங்களுக்கோ, சில சமயம் அவர்களின் குரலுக்கும் முகங்களுக்கும் தோற்றங்களுக்குமோ கூட அவர்கள் சொந்தக்காரர்கள் அல்ல. இருந்தாலும் ஒட்டுமொத்தச் சமுதாயத்துக்கும் வழிகாட்டும் தலைவனாகத் தன்னை நினைத்துக் கொண்டு, சினிமாவில் தான் பேசிய வீர வசனங்கள் எல்லாம் தனக்கே சொந்தமான, நிஜமானவை தாம் என்பதைப் போலப் பீற்றிக் கொள்கிறார்கள். தாங்கள் வெளியே காரில் பவனி வந்தால் இரு புறமும் மக்கள் திரண்டு நின்று மலர் தூவி வரவேற்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள், இந்தக் கனவுலக நாயகர்கள். சினிமாச் சந்தையில் இரண்டு மூன்று படங்கள் தொடர்ந்து வெற்றி பெற்றவுடன் அவற்றின் நாயகர்கள் தங்களை வருங்கால முதலமைச்சர்கள் என்று பாவித்துக் கொள்கிறார்கள். தேர்தல் என்று வந்தால், தங்கள் படங்களை வெற்றி பெறச் செய்த-ரசிகர்கள் மட்டுமல்ல, அவற்றைக் கண்டு களித்த மக்கள் கூடத் தங்களையோ, தாங்கள் கைகாட்டும் கட்சியையோ ஆதரித்து வெற்றிபெறச் செய்வார்கள் என்று கனவு காண்கிறார்கள்.

சினிமாத்துறையில் நுழையும் எல்லோரும் எப்படிப்பட்ட எண்ணங்களோடு அடியெடுத்து வைக்கிறார்கள்? ஆரம்பத்தில் எதற்காக ஏங்குகிறார்கள் என்பதற்கு மிகச் சமீபத்திய எடுத்துக்காட்டு, தொடர்ந்து மூன்று பெரிய வசூல் சாதனைப் படங்களில் நடித்த "இளம்புயல்" என்று செய்தி ஊடகம் கொஞ்சும் நடிகர் தனுஷ்.

இவரைப் பேட்டி எடுக்கப்போன செய்தியாளர் அந்தச் சூழல் குறித்து எழுதுகிறார். "வீட்டில் நடிகர் தனுஷின் அறையில் பேச்சிலரின் அறைக்கான சகல இலக்கணங்களையும் பார்க்க முடிகிறது. படுக்கையில் குட்டி ஸ்பீக்கர்கள், கட்டியணைத்துக் கொள்ள சற்றே பெரிய சைஸ் பொம்மை (இடைக்கால நிவாரணம்?), வீடியோகேம் கேட்ரிட்ஜ்கள் இறைந்து கிடக்க, குட்டித்திரை இணைந்த சோனி டிஸ்க்மேனில் ஒரு படம் ஃப்ரீஸ் செய்யப்பட்டிருந்தது. அறை தாறுமாறாக இருந்தது."

இந்த நிருபர் "பேச்சிலரின் அறைக்கான இலக்கணம்" என்று வரையறுத்திருப்பதைப் பாருங்கள். ஒரு பழைய இரும்புப் பெட்டிக்குள் தனது உடைகள், பாடப்புத்தகங்கள், சோப்பு சீப்பு கண்ணாடி, பவுடர் எல்லாம் வைத்துப் பூட்டி அதற்கு மேல் ஒரு கிழிந்த தலையணை-பாயைச் சுருட்டி வைத்து விட்டு காலையில் வகுப்புக்கும் மாலையில் பகுதி நேரக் கூலி வேலைக்கும் போகும் அரசு விடுதி மாணவர்களும் பேச்சிலர்கள் தாம் என்பது ஏனோ இவருக்குத் தெரியவில்லை.




இந்த விவகாரம் ஒருபுறம் இருக்க... தனுஷிடம் இருக்கும் "ஹைடெக் அயிட்டங்கள்," அவரது விருப்பங்களைப் பற்றி செய்தியாளர் கேட்கிறார். "ஜீன்ஸ் பிடிக்கும். அதில் 'லீவைஸ்'. அப்புறம் 'லீ'. ஷர்ட்டில் 'ப்ரோவோக்', 'ஸோட்', இப்போ ஓட்டற கார் 'ஸ்கார்பியே' பிளாக் கலர். ஆனா கனவுக் கார் மிட்ஷூபிஸி 'பஜேரோ'. கூலர்ஸ்னா 'ரேபான்', ரால்ட் லாரேன். காலுக்கு 'நைகி'யின் 'ஷாக்ஸ்' மாடல். வாட்ச்: ஜியோர் டானோ. செல்போன் இரண்டு: சோனி எரிக்ஸன் பி-800 மற்றும் டி-610.

தனுஷ் சொல்வது கோடிக்கணக்கான இளைஞர்களுக்குப் புரியவே புரியாது. தனுஷ் வகையறாக்கள் நமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் வேறு உலகத்தினர். நுகர்வு வெறிபிடித்தவர்கள். இங்கே கிழிந்த பிளாஸ்டிக் பையைத் தைத்துக் கூரையாக வேய்ந்து சாக்கடையோரம் வாழும் மனிதர்கள், கஞ்சித்தொட்டி வரிசையில் நிற்கும் மனிதர்கள் உள்ள சமுதாயத்தில் இப்படி நுகர்வு வெறிபிடித்து அலைவது சமூகக் குற்றமெனக் கருதாதவர்கள். தனுஷ் வகையறாக்களின் தரிசனத்துக்குக் காத்துக் கிடக்கும் செய்தியாளர்களோ வேறுவகைக் குற்ற உணர்வுக்கு ஆளாகிக் கிடக்கிறார்கள். "தனுஷ் கசங்கிய துணிபோல சோர்ந்திருக்கிறார் ("இன்னிக்கு பாட்டு சீன்ஸ் எடுத்தாங்க அதான்") தமிழகத்தின் மிகப் பிசியான 21 வயது இளைஞரின் இரவு ஓய்வைக் கலைத்த குற்ற உணர்வுடனே சந்தித்தார் செய்தியாளர்", என்கிறது அவரது பத்திரிக்கை.

சினிமாவில் நுழையும்போது தனுஷ் வகையறாக்கள் 'உழைப்ப

www.padippakam.com

தெல்லாம்' பணம், புகழ் பெறுவதற்குத்தான். இதையே கொச்சையாக, சினிமாக்காரர்களின் வார்த்தைகளில் சொல்வதானால் சாராயம் - சாப்பாடு - சதை, அப்புறம் முகத்துதிபாடும் ஒரு கும்பலுக்குதான். ஓரளவு இலாபம் தரக்கூடிய ஒன்றிரண்டு படங்களில் நடித்ததும் நாயக நடிகர்கள் இவற்றைப் பெற்றுவிடுகிறார்கள். பிறகென்ன? எந்தத் தகுதியும், திறமையும் இல்லாத (இதை ஒரு போதும் அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை) நாயக நடிகர்கள் திடீரென்று ஏராளமான பணமும், பிரபலமும் வந்து குவிந்ததும் அவர்களே பிரமித்துப் போகிறார்கள். ஒன்று கடவுள் கடாட்சத்தால் இவையெல்லாம் தனக்கு வந்து சேர்ந்ததாக மூட நம்பிக்கை கொள்கிறார்கள். அடுத்து, மேலும் மேலும் முன்னேறுவதற்கான 'அதிர்ஷ்டமும்' 'திறமையும்' ஏதோ 'அதீத சக்தியும்' தனக்கு இருப்பதாக ஒரு பிரமையில் ஆழ்ந்து போகிறார்கள். எனவே, பணம், புகழுக்கு அடுத்து அரசியல் பதவி என்னும் அதிகாரத்தை எட்டிவிட எத்தனிக்கிறார்கள்.

சினிமாத் துறையில் முன்னணி நாயகர்களாக உள்ளவர்கள் சினிமாவில் ஒரு நீண்ட காலத்துக்குத் தன்னிலையைத் தக்கவைத்துக் கொள்ளவே சினிமாவுக்கு வெளியே ஒரு தோற்றத்தையும் ரசிகர்மன்ற அமைப்பையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். சினிமாவில் மட்டுமல்ல, நிஜத்திலும் தாம் நல்லவர்கள், வல்லவர்கள் என்று காட்டிக் கொள்வதற்காக தம்மிடம் குவிந்துள்ள கறுப்புப் பணத்தில் ஒரு சிறு அளவு செலவிடுகிறார்கள். ஒரு அரசியல் கட்சியைப் போலவே தமது ரசிகர் மன்றங்களை முறைப்படுத்தி இயக்குகிறார்கள்.

ஏற்கெனவே, அரசியலைவிடச் செய்தி ஊடகத்துக்கும் சினிமாவுக்கும் இடையிலேதான் நெருக்கமான உறவு இருக்கிறது. குறிப்பாக, விஜய், பிரசாந்த முதல் இளம் வரவுகளான சிம்பு, தனுஷ் வரையிலான வாரிசு நடிகர்களின் அப்பன்மார்கள் நேரடியான அவர்களின் மக்கள் தொடர்பு அதிகாரிகளாகவே செயல்படுகிறார்கள். இவர்கள் சினிமா பாத்திரங்களைத் தெரிவு செய்வது, பணவரவு செலவுகளைக் கவனிப்பதோடு நின்று விடுவதில்லை. தமது வாரிசுகளைப் பற்றிய துணுக்குச் செய்திகளைச் செய்தி ஊடகம் மூலமாகப் பரவ விடுவதிலிருந்து, ரசிகர் மன்றங்களைக் கட்டி நிர்வகிப்பது வரை முக்கியப் பங்காற்றுகிறார்கள்.

சினிமாவுக்கு வெளியே, நல்லவன், வல்லவன் என்கிற தோற்றத்தை முன்னணி நடிகர்கள் ஏற்படுத்திக் கொள்ளவும் அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் சினிமாவுக்கும் செய்தி ஊடகத்துக்கும் உள்ள நெருக்கமான உறவு பயன்படுத்தப்படுகிறது. ஏழைகளுக்கு மருத்துவ வசதி, பள்ளி மாணவர்கள், ஊனமுற்றவர்கள், கைம்பெண்களுக்கு உதவி, இலவசத் திருமணங்கள், அன்னதானங்கள், முதலமைச்சரின் திட்டங்களுக்கு உதவித் தொகை போன்ற சிறு அளவிலான 'சமூகத்தொண்டு' செய்தி ஊடகத்தால் ஊதிப் பெருக்கித் தரப்படுகிறது.

எம்.ஜி.ஆர் காலத்திலேயே வெள்ள நிவாரணம், போர் நிதி போன்றவை பொய்யாக அறிவிக்கப்பட்டு, உண்மையில் ஈடேறாத பல செய்திகளை வெளியிட்டு அவருக்கு வள்ளல் தோற்றம் தருவதில் பத்திரிக்கைகள் முக்கியப் பங்காற்றின. இப்போது தனது ஆரம்ப காலச் சகபாடியாக இருந்து, 'நலிந்து' போன சினிமாக்காரனை நினைவு வைத்துக் கொண்டு நிதி உதவி செய்வது, எதிரே வரும் ஏழைகளுக்கு நூறோ, இருநூறோ ''தர்மம்'' வழங்குவது போன்று செய்திகளை வெளியிட்டு சினிமா நாயக நடிகர்களுக்கு வள்ளல் தோற்றம் உருவாக்கப்படுகிறது.

**''மேலும் ''துணிந்து'' அரசியலில் குதித்து விட்டால் நாயக நடிகனது செல்வாக்கு இவ்வளவுதான் என்று தெரிந்துவிடும். அப்படி எதுவும் நடந்து விட்டால் உள்ளதும் போச்சு நிலையில் அரசியலில் இருந்து துரத்தப் படுவதோடு சினிமாவுக்கும் திரும்ப முடியாது. இதற்குத்தான் அரசியல் நுழைவைக் குறித்துத் திட்டவட்டமாகப் பேச மறுக்கின்றனர்.''**

எம்.ஜி.ஆரைப் போல, சினிமாப் பிரபலத்தோடு, வெளியே வள்ளல் தோற்றமும், வலுவான ரசிகர் மன்றமும் உருவாக்கி விட்டால் அரசியலில் குதித்து மாநில முதலமைச்சர் பதவியையே பிடித்துவிட முடியும் என்று முன்னணி நடிகர்கள் கனவு காண்கிறார்கள். இப்படிக் கனவு கண்டவர்கள் வரிசையில் சிவாஜி கணேசன், பாக்யராஜ், டி.ராஜேந்திரன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் போன்றவர்கள் ஏற்கெனவே மண்ணைக் கவ்விய அனுபவம் உண்டு. பாக்கியராஜும் சத்தியராஜும் எம்.ஜி.ஆரைப் போல வேஷங்கட்டிக் கொண்டு 'டூப்ளிகேட்டு எம்.ஜி.ஆராக'த் திரையில் தோன்றினாலே போதும், அவரைப்போல வெற்றி பெற்றுவிடலாம் என்று நம்பினார்கள். கடைசியில் கோமாளிகளைப் போல முடிந்து போனார்கள்.

இருந்தபோதும், மிதமிஞ்சி கறுப்புப் பணமும், புகழும் (பிரபலம்) சேர்த்துவிட்ட மிதப்பில் திளைக்கும் முன்னணி நடிகர்களின் அடுத்த குறியாகப் பதவி ஆசை தொற்றிக் கொள்கிறது. வெறும் பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்ட மசாலாப் படங்களில் இருந்து சற்று விலகி 'சூப்பர் ஸ்டார்' தகுதிக்கான எம்.ஜி.ஆர் பாணிப் படங்களைத் திரும்பத்திரும்ப எடுக்கிறார்கள். ஆபாசக் கூத்துக்கள், பெண்களைக் கவரும் ''சென்டிமெண்டு''களோடு அநீதியை எதிர்த்துப் போராடும் ஹீரோ சூரத்தனங்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். குறிப்பாக, எம்.ஜி.ஆரின் ரசிகர்களான முதிர்ப் பாட்டிகளைக் கவருவதற்காகப் பொறுக்கிகளின் தலைவனாக - போலீசு அதிகாரியாக இருந்தால் கூட கிரிமினல் பொறுக்கிக்குரிய பண்புகளுடன் - சினிமாவில் வேடங்கட்டிக் கொள்கிறார்கள்.

பிறகு சினிமாவுக்கு நெருக்கமான செய்தி ஊடகம் மூலமாக தனது அரசியல் ஆசையை வதந்திபோலப் பரவ விடுகிறார்கள். செய்தியாளர்களின் கேள்விக்கு மழுப்பலாகப் பதில் சொல்கிறார்கள். ஆனால், சினிமாவில் ஏழை எளிய மக்களுக்காக வீரவசனம் பேசும்போது அரசியல் நெடி வீசச் செய்கிறார்கள். அப்புறம் போட்டி நடிகர்களுக்கு எதிராக அனல் பறக்கும் சவால் விடுகிறார்கள். நடிகர் ரஜினிகாந்த், ஜெயலலிதாவை மறைமுகமாகத் தாக்குகிறார்; கேலிகிண்டல் செய்கிறார்; குத்திக்காட்டுகிறார்; ஜெயலலிதாவைப் போன்ற அகம்பாவம் பிடித்த வில்லிப் பாத்திரத்தைப் படைக்கிறார். விஜயகாந்த், ரஜினிகாந்துக்குச் சவால் விடுகிறார்; ரஜினியைக் குறிவைத்து நக்கலான கருத்து தெரிவிக்கிறார்.

அரசியலுக்கு வருவார்களா, இல்லையா என்ற ஊக நிலையிலேயே வைத்திருப்பதும் கூட சில காரணங்களுக்காகத்தான். திரும்பத் திரும்ப தனது நாயக நடிகனின் படத்தைப் பார்க்கும் ரசிகனுக்குக் கூட மனதில் இருத்தி நினைவில் வைத்துக் கொள்ளும் விஷயம் எதுவும் சினிமாவில் இல்லை. அரசியல்வாதியோ, சினிமாக்காரனோ

www.padippakam.com

தொடர்ந்து செய்தி ஊடகத்தில் ஏதாவது ஒரு வகையில் பெயர் அடிபட்டுக் கொண்டே இருக்கவேண்டும். அப்படித்தான் இவர்கள் மக்கள் மனதிலும் ரசிகர் மனதிலும் பதிக்கிறார்கள். தனது அரசியல் நுழைவை ஒரு நெகிழ்வான நிலையிலேயே நடிகர் வைத்திருப்பதும் அவனுக்கு ஆதாயம்தான்.

மேலும் ''துணிந்து'' அரசியலில் குதித்து விட்டால் நாயக நடிகனது செல்வாக்கு இவ்வளவுதான் என்று தெரிந்துவிடும். அப்படி எதுவும் நடந்து விட்டால் உள்ளதும் போச்சு நிலையில் அரசியலில் இருந்து துரத்தப்படுவதோடு சினிமாவுக்கும் திரும்ப முடியாது. இதற்குத்தான் அரசியல் நுழைவைக் குறித்துத் திட்டவட்டமாகப் பேசமறுக்கின்றனர். நீரில் இறங்காமல் கானல் நீரிலேயே நீச்சல் கற்றுக் கொள்ளக் கனவு காண்கிறார்கள் இந்தச் சூரப்புலிகள்.

இன்னொன்று, தனது உண்மையான செல்வாக்கு இதுதான் என்று தெரிந்து விட்டால், 'அரசியல் நுழைவு' என்ற பூச்சாண்டி காட்டியே அதிகாரத்திலுள்ளவர்களிடம் பேரங்கள் பேசி, ஆதாயம் அடையமுடியாது.

''இதோ வருகிறேன், அதோ வருகிறேன் என்று ரஜினி காலங்கடத்திக் கொண்டிருக்கக் கூடாது. இரண்டு திராவிடக் கட்சிகளும் தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டன. ஏற்கெனவே உள்ள தேசியக் கட்சிகளின் மாநிலத் தலைமையும் மக்களை ஈர்க்கக் கூடியவையாக இல்லை. எனவே, முற்றிலும் ஒரு புதிய தலைமையாக மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவர் ரஜினி. அவர் உடனடியாக அரசியலில் குதிக்கவேண்டும்'' என்று ப.சிதம்பரம், ஆர்.எம். வீரப்பன் போன்ற அரசியல் அனாதைகளும், சினிமாக்காரர்களும் அழைக்கிறார்கள்.

ஜெயலலிதாவை தமிழக மக்கள் ஒதுக்கிவிடும் பட்சத்தில், மாற்று ஏற்பாடாக ரஜினியை வைத்துத் தமது சாதி நலன்களைக் காத்துக் கொள்ளலாம் என்று ''சோ'' முதலிய பார்ப்பனச் சாணக்கியர்கள் அவரிடம் ஓதிக் கொண்டே இருக்கிறார்கள். ரஜினி ஒரு தேசியவாதி என்பதால் காங்கிரசும், அவர் ஒரு ஆன்மீகவாதி என்பதால் பா.ஜ.கவும் தத்தம் பக்கம் இழுப்பதற்கு முயன்றுவருகிறார்கள். 1996 தேர்தலுக்குப் பிறகு தான் ''வாய்ஸ்'' கொடுத்தால் மக்கள் அப்படியே கவிழ்ந்து விடுவார்கள் என்று நம்பினார். 2001 தேர்தலில் ரஜினி கொடுத்த ''வாய்ஸ்'' செல்லாக் காசாகிப் போனபிறகு, அரசியலில் குதிப்பது குறித்து ஊசலாட்டமாகவே இருக்கிறார்.

2000-ஆம் ஆண்டில் வெளிவந்த ''சிம்மாசனம்'' படத்தைத் தொடர்ந்து அரசியல் வாடை அதிகமாக வீசும் காட்சிகளையும் வசனங்களையும் அடுத்தடுத்த படங்களில் விஜயகாந்த் புகுத்தி வருகிறார். ''அரசியலுக்கு வர்ற துன்னா நேரடியா வருவேன். சிலபேர் மாதிரி இப்ப அப்பன்னு இழுத்துக் கிட்டு இருக்க மாட்டேன்.'' என்று நரசிம்மா படத்தில் வசனம் பேசுகிறார்.




அடுத்து வந்த ''ராஜ்ஜியம்'' படத்தில், புதிதாக உருவாக்கப்பட்ட கறுப்பு, சிகப்பு, மஞ்சள் கொடியைத் தூக்கிக் கொண்டு எல்லா ஊர்களிலும் பெரும் கும்பலோடு ஊர்வலங்கள் நடத்திக் காட்டுகிறார். அதற்கடுத்து, ''ரமணா'' வில் ஊழலை எதிர்த்துத் தலைமறைவு இயக்கம் கட்டி, குற்றவாளிகளைத் தண்டிக்கிறார். கடைசியாக வந்த ''தென்னவ''னில் தேர்தல் தில்லுமுல்லுகளை ஒழிக்க முயன்று முதல்வர் பதவியைப் பிடிக்கும் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வருகிறார். இதெல்லாம் அரசியலில் குதிப்பதற்கான தயாரிப்புக்களாகவே உள்ளன.

இப்படி அரசியல் நுழைவு பற்றிய தனது நிலையை ஊகமாகவும், வதந்தியாகவும், கிசுகிசுவாகவும் வைத்திருப்பதே மக்களை மதியாது அவமானப் படுத்துவதாகும். அரசியலில் நுழைவது என்றால் தமது கொள்கை, இலட்சியத்தை பகிரங்கமாக அறிவித்துச் செயல்படுவதுதான் நேர்மையானதும் மக்களுக்குப் பொறுப்பானதும் ஆகும். ஆனால், இவர்களது வசனம், பாடல், நடிப்பிலிருந்து மக்களாகவே இவர்களின் கொள்கை - இலட்சியங்களைப் பொறுக்கி எடுத்துத் தெரிந்து கொள்ளும்படி விட்டுவிடுகிறார்கள்; கொள்கை விளக்கமளிக்கும் பொறுப்பை ரசிகர்மன்றத் தலைவர்களிடம் விட்டுவிடுகிறார்கள்.

வழக்குரைஞர், மருத்துவர், பொறியியலாளர் என்று மற்றபிற தொழில் செய்பவர்கள் அரசியலுக்கு வருவதை ஏற்றுக்கொள்ளும்போது, சினிமாக் காரர்கள் மட்டும் ஏன் அரசியலுக்கு வரக்கூடாது என்று எதிர்க் கேள்வி கேட்கிறார்கள். அவர்கள் ஏதாவது ஒரு அரசியல் இயக்கத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, கணிசமானகாலம் அரசியல் அனுபவத்தோடு பதவிக்கு வருகிறார்கள். ஆனால், நாயக நடிகர்களோ சினிமாவில் இருந்து ஓய்வு பெறும்வரை அதன் சொகுசுகளை அனுபவித்துவிட்டு, சினிமாவில் இருந்து ஓய்வு பெறும்போது, திடீரென்று அரசியலில் குதித்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள, மக்கள் மீதுள்ள கரிசனையென்று நடிக்கிறார்கள். தாங்கள் அரசியலில் குதிக்கும் நாள்வரை மக்களைப் பாதிக்கும் எந்த ஒரு பிரச்சினைக்காகவும் - போராடுவதை விடுங்கள் - குரல்கொடுப்பதும் கிடையாது.

மக்கள் மிகவும் கரிசனப்படுவதாக நடிக்கும் இந்த 'அரசியல்' நடிகர்கள் எல்லாம் பிற்போக்கு, சமூக விரோத, ஜனநாயக விரோத, பாசிஸ்டுகளாகவே இருக்கிறார்கள். பொதுவான மனிதாபிமான, தேசப்பற்று - தீவிரவாத எதிர்ப்பு - அதேசமயம் வன்முறை வெறியாட்டத்துக்கு ஆதரவு, அரசியலற்றவாதம், போலீசு அதிகார வர்க்கத்துக்கு வக்காலத்து வாங்குவது போன்றவைதான் அரசியல் நடிகர்களின் கண்ணோட்டமாக இருக்கிறது.

எந்தத் தொழில் செய்பவருக்கும் சொந்த அரசியல் கண்ணோட்டம் வைத்துக் கொள்ளவும், அரசியலில் ஈடுபடுவதற்கும் உரிமை உண்டு. என்றாலும், ஏற்கெனவே எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற சேடிச (பிறர் துன்பத்தைப் பார்த்து இன்பங்காணும் குணம்), வக்கிர, பாசிச ஆட்சியாளர்களின் கொடூர ஆட்சியை அனுபவித்துள்ள போதும், மீண்டும் அவர்களின் மறுஅவதாரங்களையும் தமிழக மக்கள் அதிகாரத்துக்குக் கொண்டுவர வேண்டுமா?

● சாத்தன்

www.padippakam.com

நாடகம்:

# நழுவல்

● துரை. சண்முகம்

காட்சி - 1

(மேசை முழுக்க புத்தகங்கள் கலைந்து கிடக்க குறிப்பெடுத்துக் கொண்டிருப்ப வரை நலம் விசாரித்துக் கொண்டே உள்ளே நுழைகிறார் தோழர்.)

**முனைவர்:** வாங்க வாங்க பாத்தீங்களா என நிலமைய. 'நாட்டார் இலக்கியம்'னு தலைப்ப எடுத்தாலும் எடுத்தேன். 'சப்ஜக்ட்' கடல் போல போவுது, ஆள அப்டியே இழுத்துட்டுப் போவுது தோழர். அதான் எங்கயும் நகர முடியல. 'நாட்டார்'னு யாராவது தலைப்ப தொட்டா நம்ம ஆய்வத் தொடாம மேற்கொண்டு போவ முடியாது. அப்டி ஒரு ஆழமா வெறியோட வேல செஞ்சிக்கிட்டிருக்கேன். ஹி... ஹி...

**தோழர்:** எடுத்துகிட்ட சப்ஜக்ட்டுக்காக ஆழமா உழைக்கிறது சரிதான், அதே நேரத்துல நாட்டாரோட கொஞ்சம் நம்ம நாட்டவரையும் பாருங்க. பல பிரச்சினை நாட்ல நடக்குது. நம்மளப் போல உள்ளவங்கல்லாம் நம்ம விருப்பத் தோட கூடவே மத்த பிரச்சினைகளிலும் ஊக்கத்தோட வேல செஞ்சாத்தானே நிலைமை மாறும்.

**முனைவர்:** அடடே, அதுல ஒண்ணும் மாற்றமில்ல தோழர். நம்ம படிப்பு அது இதுன்னு எங்க சுத்தி வந்தாலும் அடிப் படைக் கருத்து அதான். சமூக மாற்றங் கறது அடி மனசுல ஆழமா பூமத்திய ரேகை மாதிரி தோழர். அத எதுவும் அழிச்சிட முடியாது. நேத்துக் கூட பாருங்க பசங்க மத்தில இலக்கண விதிகள் பத்தி விளக்கிப் பேசிக்கிட்டிருக்கிறப்ப நைசா புரட்சிங்கிற வார்த்தைய வச்சிக்கிட்டு பேசுனம் பாருங்க, 'கைடே' ஒரு மாதிரியாப் பாத்தாரு. அப்புறம் அவருகிட்டேயே ''ஏன் சார் நம்ம வீடுகள்ல சாமி கும்பிடுறத விடலன்னா கூட பாலாஜி, சரஸ்வதின்னு பார்ப்பனமயமாக்கல விட்டுட்டு முனீஸ்வரன், ஐயனார்னு படத்த மாட்டலாம்''னு 'ஷார்ப்பா' ஒரு போடு போட்டன் பாருங்க. கைடே வில்லங்கமா பாக்க ஆரம்பிச்சிட்டாரு.

**தோழர்:** சரி.. ஷார்ப்பா விதவிதமா கையில அரிவா இருந்தா போதுமா? எல்லாத்தையும் கைல வச்சிகிட்டு ஐயனார் மாதிரி ஒரே எடத்துல முடங்கிட்டா சமூக மாற்றம் வருமா? ஒங்கள மாதிரி கொஞ்சம் சிந்திக்கத் தெரிஞ்சவங்க அங்க இங்க நகர்ந்து போயி அடுத்தவங்கள்ட்ட அரசியல் பேசி வேல செஞ்சா தான எதுவும் நடக்கும்.

**முனைவர்:** ஆமாந் தோழர், நேத்து கூட தெருமுனைக் கூட்டம்னு வரச் சொல்லியிருந்தீங்க. கௌம்பிட்டிருந்தேன். திடீர்னு பசங்க வந்து ''புதிய தரவுகள்லாம் இருக்கு, 'கைடு' வந்து 'கலெக்ட்' பண்ணிகிட்டுப் போகச் சொன்னார்''னு சொல்லிட்டாங்க. சரி, அப்படியே போய்ட்டு அப்படியே வந்துடலாம்னு போனா தரவுகள பாக்கப் பாக்க அதிர்ச்சியிலேயே நேரம் பெய்டுச்சி. நாட்ல பாதிக்கு மேல ஜனங்க கூழுக்கு வழியில்லாம செத்துக் கிட்டிருந்திருக்காங்க. மன்னர்களும், புலவர்களும் திருத்தலப் பெருமையப் பாடிக்கிட்டு பூவுக்கு மனமிருக்கு, வச்சிகிட்ட கூந்தலுக்கு மனமிருக்கான்னு ஆராய்ச்சிகள பண்ணிகிட்டு கேவலமா இருந்திருக்கானுவ தோழர். தரவுகள படிக்கப் படிக்க அதிலேயே மூழ்கிட்டேன் தோழர். அப்புறம் லேட்டாயிடுச்சின்னு அப்படியே வீட்டுக்கு வந்தேனுங்களா அப்டியே சாப்ட்டு 'மார்க்ஸ் பிறந்தார்' நூல ஒரு புரட்டு புரட்டுனங்க. பயங்கரமான நூலுங்க. உலகத்துலயே சிறந்த நூலுன்னு அதுக்கே ஒரு ஆய்வு பண்ணலாம் போங்க.

**தோழர்:** உங்க உணர்வு சரிதான். வரலாற்றுத் தரவுகளப் படிக்கிறது எதுக்கு? நேற்றைய துயரங்களிலிருந்து பாடம் கத்துகிட்டு இன்னக்கி நம்ம மக்கள்ட்ட நேராம இருக்க என்ன செய்யணுமோ, அப்படி இயங்குறதுக்காகத்தான் படிக்கிறதே. இன்னைய நடைமுறையோட படிப்ப இணைச்சிப் பாக்கலன்னா மூழ்கிறது முடங்குறதும்னே செயலற்றுப் போய்டுவோம். நேத்துப் பாருங்க இந்தப் பகுதிப் பிரச்சினை பத்தி பகுதில உள்ள ஒரு தோழர் வாழ்க்கைத் தரவுகள்லேர்ந்து எடுத்து பேசப் பேச எந்த வர்க்கத்தத் தூண்டணுமோ அந்த வர்க்கத்த தூண்டும்படி பேசினாரு.

இத்தனைக்கும் அவரு பெரிய ஆய்வாளரோ, வரலாற்று ஆசிரியரோ கெடையாது. ''பகுதியில கழிவறை கட்டலன்னா அதிகார வர்க்கமே நாறிப் போய்டும். செஞ்சி தரலேன்னா உங்க ஆபீஸ் வாசலையே கழிப்பறை ஆக்கிடுவோம்''னு மனிதனுடைய காலைக் கடன்லயே எளிமையா ஒரு அரசியல் கடனை இணைச்சாரு பாருங்க. இதாங்க ஒரு அரசியல் ஆய்வோட பயன்பாடு. இதுக்கு வெறும் படிப்பறை மட்டும் போதுமா? போராட்டக் களத்துக்கு வந்தாத்தான் சிந்தனைக்கே மொதல்ல கால் மொளைக்கும். 'மார்க்ஸ் பிறந்தார்' படிச்சீங்க. அதுல பாருங்க... மார்க்ஸ் எப்படி ஒரு மாணவராயிருந்து ஏதோ தனிப்பட்ட ஒரு ஆய்வுக்காக படிக்காம சமுதாயத்தையே ஒரு ஆய்வுக் களமா எடுத்துக்கிட்டுப் புரட்சிகர மாறுதலுக்கெதிரான எல்லாப் போக்கோடையும் மோதித் தகர்த்து ஒரு செயல் வீரரா மாறுறாரு பாருங்க. இந்த மாதிரி நீங்களும் மாற முடியாதா என்ன. மொதல்ல நம்ம பத்திரிகைகள் வெளியீடுகள் எல்லாம் நீங்கள் படிக்கிறதோட இல்லாம மத்தவங்கள்ட்டயும் எடுத்துக்கிட்டுப் போங்க தோழர்.

**முனைவர்:** அதாவது தோழர், அது ஐரோப்பியச் சூழல். சில விஷயங்கள டாண்... டாண்னு... அடிக்க முடியும் அங்க. இங்கு உள்ள சூழல் இருக்கு பாருங்க. நாம கொஞ்சம் நிமிந்து பார்த்தாலே கைடு பழிவாங்கிடுவான். ''நிலப்பிரபுத்துவப் பண்ணையடிமை எச்ச சொச்சம் இருக்குன்னு'' லெனின் சொல்வாரு பாருங்க, அதப்போல மோசமான சூழல் நிலவுது. நேருக்கு நேர் மோதணும்னு வச்சிகிங்க ஏகலைவன், ராவணன் போல நம்மள

> ''மனைவியகூட சும்மா பழையபடி கட்டுபெட்டித்தனமா ''பொம்பளன்னா வீட்லயே முடங்கி இருக்கக் கூடாது''ன்னல்லாம் சொல்லி ''நீயும் வெளில போயி சமுதாயத்தைத் தெரிஞ்சுக்கணும்''னு சொல்லி சாயந்தரம் கம்ப்யூட்டர் கிளாசுக்கு அனுப்பறேன்.''


www.padippakam.com

தீத்துடுவானுவ தோழர். பெரியார், அம்பேத்கர் போல அதிகாரத்துக்கு வந்துட்டு அந்த 'பிராஸஸ்லயே' போயி அப்டி ஒரு போடு போட்டாதான் இங்க ஜெயிக்க முடியும். நேத்துகூட பாருங்க 'கைடு' கிட்ட பேசி முடிச்சிட்டு அப்டியே நைசா அவரு டேபிள்ள வேணும்னே நம்ம பத்திரிக்கய வெச்சிட்டு வந்தேன். ஏதோ பத்திரிகைனு நெனச்சிப் படிச்சார்னு வச்சிக்கிங்க. அவருக்கு ஏதாவது ஒரு தாக்கத்த கொடுக்குங்க. அப்டியே அப்பப்ப ஏதாவது பண்ணிகிட்டுத்தான் இருக்கேன்.

**தோழர்:** இப்டி நைசா அரசியல் பேசறது மார்க்சியம் இல்லீங்க. பிரச்சினைகள நம்முடைய விருப்பு வெறுப்பில்லாம அணுகி முற்போக்கான அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போறதுதான் நாம சொல்ல வர்ற அரசியல். அப்டி போறப்ப நாம நம்ம வர்க்க நிலைபாட்ட மறைக்க முடியாது. அடையாளப்பட்டுத்தான் ஆவணும். அதுல தயக்கப்படாம நீங்களும் அரசியல் பேசுங்க. மக்கள் மத்தியில வேல செய்யிறதுக்கு வாங்க. உங்க முனைவர் பட்டத்துக்கேகள ஆய்வு இருக்குதுல்ல... புரட்சிக்குகள ஆய்வு வேணாமா? காரல் மார்க்ஸ் அவரது புரட்சிகர உணர்வுகளையும் கருத்துகளையும், யார் டேபிள்ளயாவது நைசாவா வச்சாரு. தன்னுடைய ஆய்வு, படிப்பு காலத்துலேயே சமுதாயத்துக்கான கருத்துக்களைப் பகிரங்கமாகத் தாங்க பேசினாரு. அதப் போல நீங்களும் முன்னேறுங்க.

**முனைவர்:** கரெக்டா சொன்னீங்க தோழர். என்னக்கி இருந்தாலும் அமைப்பு, செயல்பாடு இல்லாம ஒரு மனுசன் மாற முடியாது. மெயினா இந்த முனைவர் பட்ட ஆய்வு முடியட்டுந் தோழர். அப்புறம் ஃபுல்லா அமைப்பு வேலைல எறங்கிட வேண்டியதுதான். ஏன்னா இப்ப குறுக்க பூந்தோம்னு வச்சிகிங்க. வீட்லயும் அம்மா, அப்பா இவங்கள்லாம் படிக்காதவங்க. புரிதல் மட்டம் கம்மி. ரெண்டாவது சில சொந்தகாரங்க, சில பேர்லாம் என்ன இவன் பெரிசா படிச்சிடப் போறான்னு கொஞ்சம் ஏப்ப சாப்பையா நெனக்கிறானுவ. இவங்க மூக்க ஒடைக்கிற மாதிரி மொதல்ல இந்த ஆய்வ முடிச்சிடுறேன். அப்புறம் என்ன தோழர் ஃபுல்லா நம்ம வேலைதான்.

**தோழர்:** ஒரு விசயத்த ஃபுல்லா முடிச்சிட்டு அடுத்து இன்னொன்ல ஃபுல்லா எறங்குறதுதான் மார்க்சியம்னா - கம்யூனிசம் ஒன்னும் சுய முன்னேற்றக் கல்வி இல்லீங்க. சமுதாயக் கல்வி. சிந்தனை



நடைமுறை, சிந்தனை நடைமுறை இப்டி மாறி மாறி ரெண்டையும் இணைச்சிப் போறதுதான் முற்போக்கு. யோசிச்சுப் பாருங்க, சமுதாயத்துல பல பேரு சொந்த வேலையோட இணைச்சுத்தான் அரசியல் வேலையும் செய்யறாங்க. ஒரு விவசாயி அறுப்பு முடிஞ்சித்தான் அரசியலே பேசத் தொடங்குவேன்னா சரியா? ஒரு தொழிலாளி ரிட்டையர்டு ஆன பெறகுதான் அரசியல் பேசுவேன்னா ஏத்துப்பீங்களா? அதுபோல மாணவர்களும் படிப்புக்கான நேரம்போக கூடவே வர்க்கத்துக்கான கடமையச் செய்யிறதுதானே நியாயம்? சின்னச் சின்ன வேலைகள் செய்யிறதுனாலேயே படிப்புக்கு இடையூறுன்னு நீங்களே ஏன் நெனக்கிறீங்க? வேல செய்ய செய்யத்தான சமுதாயத் தேவையும், நம்ம படிப்போட பயனும் ஒத்து வருதான்னு உணரவே முடியும். என்ன சொல்றீங்க? சொந்தக்காரங்க மூக்க ஒடைக்கிறத விட இந்த மாதிரி அதிகார வர்க்கம், ஆளும் வர்க்கம்னு எதிரிங்க மூக்க உடைக்கிறதப் பத்தி யோசிங்க.

**முனைவர்:** அதிலெல்லாம் ஒண்ணும் கொழப்பம் கெடையாதுங்க. மாவோ சொல்றது மாதிரி நட்பு முரண்பாடு எது, பகை முரண்பாடு எதுங்கறதுல தெளிவா இருக்கு. அதான் தோழர், முனைவர் ஆய்வ மொதல்ல முடிச்சிடுறேன் தோழர். அது ஒரு பெரிய வேலையாயிருக்கு. இந்த சப்ஜெக்ட் எடுத்ததே கூட அடித்தட்டு மக்கள் வாழ்வியலைப் புதிய கோணத்துல பதிவு செய்யணுங்குற விருப்பத்துல தான். அதான் தோழர் இத 'கம்ப்ளீட்டா' முடிச்சிட்டு... வேறென்ன... நம்ம சிந்தனைக்கு ஏத்த மாதிரி வேல செய்ய வேண்டியதுதான். சிரமப்பட்டு ஒங்க வேலைகள உட்டுட்டு அலைய வேண்டாங்க. முடிச்சிட்டு நானே வந்து பாக்குறேன். அதே அட்ரஸ்தானே தோழர்.

**தோழர்:** நீங்க... (தோழர் முடிப்பதற்குள் மாணவர் ஒருவர் குறுக்கிடுகிறார்.)

**முனைவர்:** அப்புறந் தோழர் 'ஏங்கெல்ஸ்சோ'ட 'இயற்கையின் இயக்கவியல்' படிச்சேன் பாருங்க. பிரமிச்சுப் போய்ட்டேங்க... ஒரே நேரத்துல இயற்பியல், சமூகம், வரலாறு... பல துறையில வந்து பயங்கரமா ஆய்வு பண்ணிருக்காருங்க. படிச்சிட்டு அப்புறம் அப்படியே வெளில போனேன். நடைபாதைக் கடையில ரெண்டு மூணு புத்தகம் கெடைச்சதுங்க தோழர். மாஸ்கோ வெளியீடு... அதெல்லாம் இப்ப கெடைக்காது. 'மார்க்ஸ்சோ'ட மனப்போக்கப் பாத்து



படிப்பகம்

www.padippakam.com

அவங்க அப்பா கவலையாயிருந்தார்னு 'மார்க்ஸ் பிறந்தார்'ல படிச்சிருக்கேன். அதுபோல எங்க வீட்ல எங்க அப்பா நம்ம பத்திரிகையெல்லாம் படிக்கிறதப் பாத்துட்டு கொஞ்சம் பயந்துகிட்டுதான் இருக்காரு. என்னக்கிருந்தாலும் ஒரு அதிர்ச்சி இருக்கு. சரி தோழர் பாக்கலாம். முடிச்சிட்டு நானே வர்றேன் பாருங்க.... ஹா... ஹா...

**காட்சி 2**

(பல ஆண்டுகள் கழித்து தோழரும் முனைவரும் ஒரு பொது இடத்தில் பார்த்துக் கொள்கிறார்கள்)

**தோழர்:** ஏங்க... நீங்க... வெற்றிவேல் தானே...

**முனைவர்:** ஓ! தோழர் நீங்களா.... எவ்ளோ நாளாகுது. இந்த ஊர்லயா இருக்குறீங்க. நம்ம கடைசியா சந்திக்கிறப்ப வெளியூர் போறதா சொல்லியிருந்தீங்க. இங்க சந்திப்பம்னு எதிர்பார்க்கவே இல்ல. என்ன தோழர் எப்டி நல்லாருக்கீங்களா?

**தோழர்:** நல்லாருக்குறங்க. ஒங்களப் பத்திதான் ஒன்னும் சேதியே தெரியல. நம்ம ஏரியா தோழர் மூலமா அப்பப்ப விசாரிப்பேன். அந்த மாதிரிதான் இருக்கிறாரு... எங்கேயோ வெளியூருக்கு குடும்பத்தோட மாறிடுவோம்னு சொல்லிகிட்டிருந்தார்னு சொன்னாரு. என்னங்க ஆச்சி... என்ன விவரம்?

**முனைவர்:** அதஏங் கேக்குறீங்க தோழர். நம்ம சிந்தனைதான் உங்களுக்குப் படிக்கிற காலத்திலேயே தெரியுங்களே... எல்லாம் முடிச்சிட்டு இப்படி யோசிச்சிகிட்டு இருந்தேன். திடீர்னு சொந்தக்காரங்க என்ன பண்ணிட்டாங்கன்னா நம்ம 'டீப் ரிலேஷன்ல' ஒரு தனியார் கல்லூரி தாளாளர் தெரிஞ்சவரு, புடிச்சி அப்டியே ஒரு போஸ்டிங் வாங்கிடலாம்னு எங்க அப்பாகிட்ட படையெடுத்து வந்துட்டாங்க. எங்கப்பாவும் டப் டுப்புன்னு பூந்து வேலைய ரெடி பண்ணிட்டாரு. ''எனக்கே தீராத நோயிருக்கு. தங்கச்சி, குடும்ப கடனெல்லாம் இருக்கு. அப்படி இப்படி''ன்னு வேலைக்கு போயே ஆகணும்னு புடுங்கி எடுத்துட்டாரு தோழர், அப்பயும் நான் லேசுல நகரல. அப்புறம் அதே சீக்கான மாதிரி ''பொறுப்பில்ல.. அது இது''ன்னு பெனாத்த ஆரம்பிச்சிட்டாரு. எவ்ளோ சொன்னாலும் புரிஞ்சிகிற அளவுக்கு அவருக்கு உணர்வு மட்டம் கம்மி. சே.. பெத்த கடன தீத்துடறேன்னு போயி வேலைல சேரும்படியாயிடுச்சி. அதாவது, மனிதன் வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்குதுன்னு

> "இப்டி நைசா அரசியல் பேசறது மார்க்சியம் இல்லீங்க. பிரச்சினைகள நம்முடைய விருப்பு வெறுப்பில்லாம அணுகி முற்போக்கான அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போறதுதான் நாம சொல்ல வர்ற அரசியல். அப்டி போறப்ப நாம நம்ம வர்க்க நிலைபாட்ட மறைக்க முடியாது. அடையாளப் பட்டுத்தான் ஆவணும்."

மார்க்ஸ் சொல்வாரு பாருங்க. அது போல நாம எவ்ளோதான் முயற்சி பண்ணினாலும் வாழ்க்கைச் சூழல் வந்து நம்மள பலமாதிரி ஆக்கிடுதுங்க.

**தோழர்:** என்னங்க புரட்சித் தத்துவத்த தலைவிதித் தத்துவ வரிசைக்குத் தரை மட்டமாக்கிட்டீங்க. சமூக உணர்வுக்குப் பொருத்தமில்லேன்னா குடும்ப உணர்வு கொஞ்சம் குப்புறத் தள்ளித் தான் ஆவணும். அய்யோ ரத்தம் வருதே கண்ணீர் வருதேன்னு அதப் பாத்து எரக்கப்பட்டோம்னா பல குடும்பங்களக் கொண்ட சமுதாயத்துக்கு நாம எப்படிங்க பொறுப்பா இருக்க முடியும்?

**முனைவர்:** ஏதோ வேலைக்குப் போயிட்டோமே ஒழிய மத்தபடி நம்ம கருத்த யாராலயும் மாத்த முடியாதுன்னு வச்சிக்கிங்க. பசங்களுக்குப் பாடம் நடத்துறப்பக் கூட அப்டியே எடையல ஃபுல்லா நம்ம கருத்ததான் வுடுறது. மரம் ஓய்வை நாடினாலும் காற்று விடுவதில்லைன்னு மாவோ சொல்வாரு பாருங்க. அந்த மாதிரி... நம்ம நினைச்சாலும் நம்மால புரட்சிங்கிற உணர்வை இழக்க முடியாது. (நீங்கல்லாம் ஃபீல்டுல நின்னு போராடறீங்க. உங்க அளவுக்கு இல்லைன்னாலும்) எங்க இருந்தாலும் நம்ம சிந்தனை அதான்.

**தோழர்:** சரிங்க, போன வாரம் கூட அரசு ஊழியர் பிரச்சினைக்காகக் கூட ஆர்ப்பாட்டம் வெச்சிருந்தோமே... போஸ்டர், சுவரெழுத்து பாத்தீங்களா?

**முனைவர்:** போஸ்டர், சுவரெழுத்து சிறப்பாயிருந்தது. பாத்தேன் தோழர். ஆனா நான் இப்ப தனியார் கல்லூரியில இருக்குறேன். ஏற்கெனவே எப்படா இவன ஏதாவது ஒன்னு சொல்லி வெளிய அனுப்பலாம்னு நிர்வாகம் கண்ணுகொத்திப் பாம்பாட்டம் பாத்துகிட்டிருக்கு. இந்த மாதிரி இதிலெல்லாம் ஈடுபட்டு எவனாவது போட்டுட்டான்னு வெச்சிக்கிங்க, இத ஒரு சாக்கா எடுத்துக்குவான். ச்சூ... வேல போறத பத்தி ஒண்ணும் இல்ல. நாம இப்ப அங்க இருக்குறதால சில வேலைகள் நடந்துகிட்டிருக்கு. அப்டியே 'ஒரு செட் ஆஃப் பீப்புள' நம்ம சிந்தனைப் பக்கம் திருப்பிக்கிட்டிருக்குறோம். இப்ப வுட்டுட்டு வந்தோம்னா நல்லா இருக்காது. குறிப்பிட்ட பீரியட் வரைக்கும் ஓரளவு மேக்கப் பண்ணிட்டு வந்துட்டோம்னு வச்சிக்கிங்க. நமக்கும் நல்லது, பசங்களுக்கும் நல்லது, அமைப்புக்கும் நல்லது.

**தோழர்:** ஏங்க? அடுத்தவங்கள உருவாக்கி வளக்குறதுக்கு நீங்க ஒரு அமைப்பு, திட்டம் இதெல்லாம் எடுத்துக்கிட்டு வேல செஞ்சா எவ்ளோ நல்லா இருக்கும்? நீங்க தனிநபரா யோசிக்கிறத விட பல பேரைக் கொண்ட ஒரு அமைப்பு, அதனோட செயல்பாடு அந்தத் தேவைகளை ஒட்டி வேலைன்னு உற்சாகமா ஒங்கள மாதிரி ஆள் வந்தா எவ்ளோ பிரயோஜனமா இருக்கும் தெரியுங்களா? பழைய இதெல்லாம் வுடுங்க. இனிமேலாவது அந்தக் கோணத்துல வாங்க.

**முனைவர்:** யோசிக்கிறதுக்கில்ல... அதெல்லாம் தெரிஞ்சதுதான். எடையில வேல கெடச்சொன்ன எங்க அப்பா அம்மா வேற ''நாங்க சாவப்போற வயசு எங்க கண்ண மூடுறதுக்குள்ள ஒரு கல்யாணத்த பண்ணிப்புடுறா'' அப்பிடி இப்பிடின்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி சொந்தக்காரப் பொண்ண கட்டிக்கும்படியாயிடுச்சி. படிச்சவங்கதான். ஆனாலும் வீட்ல நம்ம அளவுக்கு நாலேஜ் கெடையாது. அமைப்பு, அது இதுன்னா பயப்படுவாங்க. எனக்கு ஒரே பொண்ணுதான், அஞ்சாவது படிக்குது. இருந்தாலும் குடும்பம் நமக்கு எதிரா போய்டாதுன்னு வச்சிக்கிங்க. மனைவியகூட சும்மா பழையபடி கட்டுபெட்டித்தனமா ''பொம்பளன்னா வீட்லயே முடங்கி இருக்கக்கூடாது''ன்னல்லாம் சொல்லி ''நீயும் வெளில போயி சமுதாயத்தைத் தெரிஞ்சுக்கணும்''னு சொல்லி சாயந்தரம் கம்ப்யூட்டர் கிளாசுக்கு அனுப்பறேன். பொண்ணுக்குக்கூட ஜீன்ஸ் கீன்ஸ்ஸெல்லாம் போட்டுட்றது. இப்பவே கராத்தே கிளாஸ் எல்லாம் அனுப்பி வுடுறது. இருந்தாலும் தோழர் படிச்சிகிட்டிருந்தோம் பாருங்க. அந்த சூட்டோட அப்பவே வந்துருக்கணும். என்ன தோழர் சிரிக்கிறீங்க.

**தோழர்:** அதுக்கில்லீங்க, நேத்து உங்க காலேஜ் காம்பவுண்டுக்கு வெளிலதான் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் பெருசா


படிப்பகம்

www.padippakam.com

நடந்திச்சி. நம்ம அமைப்பு சார்பாகூட பல பேர் கலந்துக்கிட்டாங்க. உங்களப் பாத்தேன் காணோம். படிக்கிற காலத்த வுடுங்க, இப்ப கூட நீங்க வரலாமே.

**முனைவர்:** அப்படீங்களா... நேத்து ஈவினிங் லைப்ரரில இருந்தேன் தோழர். அதாவது தெரிதா, ஃபூக்கோ, இவங்க புக்கெல்லாம் புதுசா வந்திருக்குது. கடையில வில கொடுத்து வாங்கிப் படிக்க முடியாது. புதுப் போக்குகளா இருக்கே தெரிஞ்சிக்கணும்னு அப்படியே படிச்சிகிட்டிருந்தேன். நிறைய மீள் பரிசோதனைக்குரிய விசயங்கள் நிறைய இருக்கு.

**தோழர்:** அப்ப தெருவுல நடக்குற விசயத்த மறக்கடிக்கிற அளவுக்கு தெரிதா, ஃபூக்கோ உங்க மேல வினையாற்றிட்டதா சொல்லுங்க?

(முனைவர் கவனம் சிதறுகிறது. அவர் மனைவி, பெண்ணுடன் தொலைவில் வருதல்)

**முனைவர்:** தோ... கடையிலேர்ந்து வர்றாங்க பாருங்க, அவங்கதான் எம் மனைவி. கையில பலூனோட வர்றது பாருங்க அதான் எம் பொண்ணு. விசயம் புரியுது. அதாவது தோழர், குடும்பம், குழந்தை, புதிய சில பிரச்சினைகள்லாம் இருக்கு. புரட்சி சமூக மாற்றம் இதுக்காகவெல்லாம் எப்படி குடும்பத்த ஒத்து கொண்டு வர்றதுங்கறது நுட்பமான விஷயம். அதுக்காக நாம மத்தவங்க மாதிரி குடும்பமே கொள்கைன்னு போய்ட முடியாதுன்னு வெச்சிகிங்க. இப்ப நாமளும் அப்படி சமூக உணர்வற்று வாழல. அதான் தோழர். இப்ப உள்ள சூழ்நிலை வேலை வாய்ப்பும் ரொம்ப நாள் ஓடாது. இன்னும் ஒரு அஞ்சாறு வருசத்துல குடும்பம் நம்மளச் சார்ந்து இருக்காத அளவுக்கு ஒரு செட்டில் பண்ணிட்டு அப்புறம் ஃபுல்லா அமைப்புதான். என்னகிருந்தாலும் நம்ம சிந்தனை அதான்.

(நெருங்கி வந்து கொண்டிருக்கும் முனைவர் மகளின் கையிலுள்ள பலூன் காற்று போய் எகிறி விழுகிறது)

**முனைவர்:** ஏய்... பலூனைப் பிடி.... பலூனைப் பிடி... தோழர் அப்புறம் பாக்கலாமா. காலேஜுக்கு வர்றீங்களா... பலூன் வேற வெடிச்சிடுச்சி... இனிமே அழ ஆரம்பிச்சுடும்.

**தோழர்:** சரி வாங்க... பலூன்களுக்கு சுவாசம் ரொம்ப நாளு கெடையாது.. பாவம் குழந்தைக்குத் தெரியாது... வாங்க... வாங்க... ●

# பைத்தியம்

எல்லீசு ரோடு கரீம் என்றால் யாருக்குத் தெரிய போகிறது? தன்னைப் பிறருக்குக் கட்டாயமாகத் தெரியப்படுத்தும் அளவுக்கு விதவிதமாக யோசித்துப் பல வண்ணங்களில் சுவரொட்டி மூலமாகத் தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்ள அவன் உழைக்காத அரசியல்வாதியோ, செல்வந்தனோ இல்லை. இன்னும் சுருக்கமாகச் சொன்னால் தன்னைப் பற்றியே தனக்குத் தெரியாமல் சாலையில் தனக்குத் தானே பேசிக் கொண்டும், முனகிக் கொண்டும் டீக்கடைக்கு தண்ணீர் ஊற்றும் சாதாரண அடிமட்டத் தொழிலாளி அவன்.

அதுமட்டுமில்லாமல் சின்னச் சின்ன டிபன் கடைகளுக்கு வடைக்கு மாவு அரைத்து வருவது, ஆதாம் மார்க்கெட்டில் காய்கறி வாங்கி வருவது, சில நேரங்களில் பத்து ரூபாய் பிரியாணிக் கடைக்காக மாட்டுக்கறி, ரத்தம், குடல் என கைகளில் பேச்சி ஆயியைப் போல பல அசைவ அயிட்டங்களை சில்வர் வாளிகளில் தூக்கிய படி தனக்குத்தானே பேசிக் கொண்டே வருவான். அன்றைக்கும் அப்படித்தான், கரீம் ஒரு வாளி நிறைய ஆட்டுக்கறி, ரத்தம் இவைகளைத் தூக்கிக் கொண்டு அண்ணாசாலையிலிருந்து எல்லீசு ரோட்டிற்கு தேவி தியேட்டரின் பக்கவாட்டில் வந்து கொண்டிருந்தான்.

காலைக்காட்சி தொடங்கி படம் ஓடிக் கொண்டிருந்ததால் வெளியே அவ்வளவு கூட்டமில்லை. 'பிளாக்கில்' டிக்கெட் விற்று முடித்த பெண்களிடம் சில போலீசுகாரர்கள் அன்றைய வரவு செலவுக் கணக்கைப் பேசியபடியும், நயந்தபடியும் நின்று கொண்டிருந்தார்கள். கரீம் கறி வாளியுடன் 'காக்க காக்க' பேனரைப் பார்த்தபடியே ஏதோ முனகிக் கொண்டு தன் வழியே நடந்து கொண்டிருந்தான். தியேட்டரின் முன் பக்க வழியே திடீரெனப் பளபளப்புடன் ஒரு கார் வந்து நிற்க பின்னாலேயே தலையில் கட்டு கட்டிக் கொண்டு ஒரு கும்பல் 'சூர்யா வாழ்க சூர்யா வாழ்க' என கலவர பீதி ஏற்படுத்துமளவுக்குக் குரல் கொடுத்துத் திபுதிபுவென வந்தார்கள். மின்சார அதிர்ச்சி போல அது அப்படியே பின்பக்க எல்லீசு ரோடு இளைஞர்கள் வரை செய்தி பரவியது. '....சூரியாடா, ... சூரியாடா' என்று அலறியபடியே அந்தக் கும்பல் பின்பக்க கேட் வழியே புகுந்து தியேட்டரை நோக்கி ஓடியது.

சினிமா நாயகன் சூர்யாவின் தரிசனத்துக்கு முன்னே அவர்கள் கண்ணுக்கு எதுவுமே ஒரு பொருட்டாகப்பட வில்லை. எதிரே வந்து கொண்டிருந்த பெண்கள் குழந்தைகள் அனைவருமே மிரண்டு தடுமாறும்படிக்கு அவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். ஒருவனுக்கு அவன் உயிரே பொருட்டாகப் பட வில்லை. எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் போய் மோதி காளையை அடக்குவதுபோல அதைப் பிடித்து சாய்த்துவிட்டு '... சூரியாடா' என்று ஓடிக் கொண்டிருந்தான். அடுத்த நொடி மடார் என ஒரு சத்தம். கரீம் கீழே விழுந்து கிடந்தான். அவன்மீது ஓடியவன் எவனோ மோதி விட்டான். அவன் கையிலிருந்த எவர் சில்வர் வாளி பிடி பிய்த்துக் கொண்டு ஆட்டுக் கறியும் இரத்தமும் ஒரு படுகளத்துக் குரிய காட்சி போல சிதறிச் சின்னாபின்னமாகிக் கிடந்தது. கரீமின் முழங்கையும் சிராய்ந்து ஆட்டு ரத்தத்தோடு அவன் ரத்தமும் கேட்பாரின்றி வழிந்தது. ''... சூர்யாவ பாக்கப் போறேன், மேல ரத்தத்த ஊத்திட்டான் பாரு, ஏ பாடு, உன்னை வந்து வச்சிக்கிறேன். பைத்தியக்காரா... பைத்தியக்காரா... வந்தான் பாரு ஆட்டிக்கினு'' தள்ளியது மட்டுமல்லாமல் திட்டி விட்டும் அவர்கள் ஓடினார்கள்.

பக்கத்தில் பார்த்துக் கொண்டிருந்த அந்த ஏரியாவாசிகளும் ஒரு 'ச்சு' கொட்டிவிட்டு இவனே பைத்தியக்காரன் இவன்கிட்ட போயி கறி வாங்க அனுப்புறாங்க பாரு. ஏன்டா நீ ஓரமா போறதில்ல... ஆளாளுக்கு கீழே கிடந்ததின் அருவருப்பை அவன் மீது கொட்டித் தீர்த்தார்கள். கீழே கிடந்த கறியையும் ரத்தத்தையும் வாரி வாளியில் போட்டுக் கொண்ட கரீம் முழங்கையை மடக்கி சிராய்ந்த இடத்தில் எச்சில் தொட்டு வைத்துக் கொண்டே ''... நீங்க தாண்டா பைத்தியக்காரன், ... நீங்க தாண்டா பைத்தியக்காரன்'' என்று தனக்குத்தானே தொடர்ந்து முனகிக் கொண்டு நடந்தான். இதைக் கேட்பார் யாருமில்லை. இருந்தாலும் அவன் பேச்சை ஆமோதிப்பது போலத் தெருநாய் ஒன்று கூட்டமாய் ஓடுபவர்களைப் பார்த்துக் குரைத்துக் கொண்டிருந்தது.

● சுடர் விழி


படிப்பகம்

www.padippakam.com

## ஈராக் :

# போர் இன்னும் முடியவில்லை...!

ஈராக்கில் அமெரிக்காவின் போர் இன்னமும் முடியவில்லை. ''ஒரு போரின் முடிவு இன்னொரு போருக்கு வழி திறக்கிறது'' என்று சொல்வார்கள்; ஆக்கிரமிப்புப் போர் முடிந்திருக்கிறது என்று ஒருவர் சொன்னாலும், அடிமைத் தனத்திற்கு எதிரான போர் உடனே தொடங்கிவிட்டது. வீதிகளில் மக்கள் 'அமெரிக்காவே வெளியேறு!' என்று முழக்கமிட்டுத் திடீர் திடீரென ஊர்வல மாக வருகிறார்கள். கவசவண்டிகளில், ஜீப்புக்களில் துப்பாக்கிகளோடு வரும் அமெரிக்கப் படையை நேருக்குநேர் எதிர்த்து நின்று பேசுகிறார்கள். இதுதான் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல். ''பயங்கரவாதிகள்தான் இதற்குக் காரணம், அவர்களை வேரோடு பிடுங்கி எரிக்கும் வரை நான் ஓயமாட்டேன்'' என்று புஷ், செனி, ரம்ஸ் ஃபீல்டு, காலின்பாவெல், உல்ஃபோவிட்ஸ் ஆகியோர் மாறி மாறியும், மாற்றி மாற்றியும் பேசு கிறார்கள்.

மக்களின் கண்களில் வெறுப்பும் கோபமும். அமெரிக்கக் கொலைகாரப் படை எவ்வளவுகாலம் நீடிக்கிறதோ அந்த வெறுப்பும் கோபமும் கூடிக் கொண்டே போகும்; அமெரிக்கச் சிப்பாயின் கண்களிலோ ஒருவித அச்சம், வெறுமை, தங்கள் மேலதிகாரி களை நோக்கித் திரும்பத்தொடங்கி யுள்ள கோபம். ஓர் அமெரிக்க சார்ஜெண்ட் சொன்னார்: ''எங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை நிறை வேற்றுகிற அளவு உடலில் தெம்பு இருக்கிறது. ஆனால் நாங்கள் மன ரீதியாக, தார்மீக ரீதியாகச் செத்துக் கொண்டிருக்கிறோம்.'' இப்போது அமெரிக்கப் படைகளிடம் உற்சாகம் இல்லை; ஒழுங்கு கட்டுப்பாடு இல்லா மல் கண்டபடி சுடுவது அடிக்கடி நடக் கிறது; படைகளில் ஒழுங்கு குறைந்தி ருக்கிறது. ஆக்கிரமிப்பு நீடித்தால் வியத் நாமில் நடந்தவை மறுபடி ஒருமுறை நடக்கும்; இப்போதே உலகெங்கும் சொல்கிறார்கள் - ''வியத்நாமுக்கு அராபிப்பெயர்தான் ஈராக்'' என்று.

அது ஈராக் மக்களின் வெறுங் கோபம் அல்ல; தங்கள் மக்களை, குழந் தைகளை இழந்த போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அது உருத் திரண்டு கனன்று வளர்ந்துவரும் நெருப்பு; தார்மீக ஆவேசம். அது அவர் களின் கரங்களில் - ஆண், பெண், குழந்தை, முதியவர் என்று பேதமே பார்க்காமல் போர் ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறது.

கடந்த நவம்பர் 21 அன்று மூன்று நிலைகள் மீது தாக்குதல் நடத்தினார்கள் அமெரிக்க எதிர்ப்புப் போராளிகள். ஒன்று 'பாலஸ்தீன் ஓட்டல்'; இரண்டா வது 'ஷெரடான் ஓட்டல்'; மூன்றாவது 'எண்ணெய் அமைச்சகக்' கட்டிடம். மூன்று கட்டிடங்களுமே பாக்தாதில் மையமான இடத்தில் இருக்கின்றன. இந்த ஓட்டல்களில்தான் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், அந்நிய நிறுவன ஒப்பந்தக்காரர்கள் தங்குவார்கள். அங்கே எப்போதும் பலத்த பாதுகாப்பு இருக்கும். அதையும் மீறி, போராளிகள் கழுதை இழுக்கும் பாரவண்டியில் சரக்கு தள்ளிவருவது போல வந்தார்கள். வண்டியில் ஏவுகணைகள் இருந்தன. மூன்று இலக்குகள் மீதும் எடுத்து வீசினார்கள்.

கடந்த 7 மாதங்களுக்குள் தொடர்ச் சியான நகர்ப்புறக் கொரில்லா தாக்குதல் களை நடத்திவருகிறார்கள் போரா ளிகள். அவர்களைப் 'பயங்கரவாதிகள்' என்றே புஷ்கும்பல் விவரிக்கிறது. 'அந்நியர்கள்' என்றும் சொல்கிறது. ''அப்படியானால், 2,00,000 பேரில் 1,46,000 பேர் அமெரிக்கர்களே. அவர் கள்தாம் அந்நியர்கள்'' என்றார் ஓர் ஈராக்கியர்.

அது 'சதாமின் உதிரி அடியாட்கள்' என்றும், 'சிறுகும்பல்' என்றும் சொல்லிப் பார்த்தது புஷ் கும்பல். கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் நூற்றுக் கணக்கான அமெரிக்கர்கள் அவர் களால் கொல்லப்பட்டதைப் பார்த்த பிறகு ''அவர்களுக்கு மக்களின் ஆதரவு இல்லை'' என்று சமாளிக்கிறது. புஷ்ஷின் சொற்களை நகல் எடுத்து வெவ்வெறு மாதிரி எழுதியும், பேசியும் சர்வதேசச் செய்தி ஊடகங்கள் கூட இப்போது 'எதிர்ப்புச் சக்திகள்' என்று மாற்றி எழுதுகின்றன. அமெரிக்க அதி காரிகளே 'எதிர்ப்பு இயக்கம்' என்று ஒரு ஓரமாகச் சொல்லி வைக்கிறார்கள்.

ஈராக் போராளிகள் பலவிதமாக இருக்கிறார்கள். பல இடங்களில் மக்கள் தன்னெழுச்சியாகப் போராடுகிறார்கள். சின்னக் குழந்தைகளை வைத்து எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள், எதிர்த்துத் தாக்கவும் செய்கிறார்கள். ஒற்றைத்தனி நபராய் அர்ப்பணிப்போடு 'வேட்டைக் காரன்' (HUNTER) என்ற பெயரில் கூட தாக்குதலில் ஈடுபடுகிறார் ஒருவர். முக்கியமாக, சதாம் ஆட்சியின் கீழ் மதப்பள்ளிகளாக அனுமதிக்கப்பட்டுப் பல குழுக்கள் இருந்துவந்தன. 'நம்பிக் கையாளர் அமைப்பு' என்று அவை அழைக்கப்பட்டன. அவை இப்போது போராளிக்குழுக்களாக மாறியுள்ளன. இவர்கள் தவிர கணிசமான தாக்குதல் ஆயுதங்கள், ஏவுகணை வைத்துள்ள சாதாமின் ஆதரவாளர்களும் போராடு கிறார்கள். இவர்கள் உதிரிக்கூட்டம் அல்ல; சதாம் தான் இயக்குகிறாரா என்றும் தெரியாது. இவர்கள் அத்தனைப் பேரையுமே, 'நாடு நம் கையிலிருந்து பிடுங்கப்பட்டுவிட்டது' என்ற உண்மையான பயமும், சொர ணையும் தான் இயக்குகின்றன.

கண் எதிரே தெருக்களிலும், மருத்து வமனைகளிலும் ஈராக்கியரின் ரத்தம் ஆறுபோல ஓடுகிறது. ஓர் ஈராக்கியர் குறிப்பிட்டதுபோல - ''ராஹெல்சானி, இஜா ஏல் உஸ்தா'' (எடுபிடி வேலையாள் போனான், எசமான் வந்தி ருக்கிறான்); அதாவது, சதாம் ஆட்சிபோய் அமெரிக்கா வந்திருக் கிறது. இவர்களைவிடச் சதாம் எவ்வ ளவோ மேல் என்று பொதுப்புத்தியில் மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கச் சிப்பாய்களின் அட்டூழியங்கள் அவ்வாறு மக்களைப் பேச வைக்கின்றன. உசுப்பிவிட்டு, எதிர்க்க வருபவர்களைக் கொலைசெய்து எரிப்பது, சவத்தைத் தூக்கிக் கொண்டு போய் வேறெங்காவது எறிந்துவிட்டுப் போவது அவர்களின் விளையாட்டு.

''போராளிகள் சாதாரண மக்கள் உடையில் வருகிறார்கள். அப்படிச் சிவி லியன் உடையில் வருபவர் எல்லாம் போராளிகள்தான்'' என்று வாதாடுகிறது அமெரிக்கப்படை பச்சைக் கொலை களை நியாயப்படுத்த இப்படி ஒரு வாதம். (சிவிலியன் உடையிலும்


படிப்பகம்

www.padippakam.com

போராளிகள் வருவார்கள்தான்; அதுவும் ஒரு போர்முறைதான்.)

குழந்தைகளே ஆனாலும் சாலையின் குறுக்கே வந்தால் கவசவண்டி ஏற்றி, ஜீப் ஏற்றிக் கொள்ளவது, சந்தேகப்படும் எவரையும் உடம்பில் துளி இடம் கூட மிச்சம் இல்லாமல் சல்லடையாய்ச் சுடுவது, மக்கள் கூட்டமாக வந்தாலே தங்களைத் தாக்குவதற்காகவே வந்திருக்கிறார்கள் என்று சொல்லி ஆண் - பெண் பேதமில்லாமல் எல்லோரையுமே நிர்வாணப்படுத்திச் சோதனை போடுவது, கிராமப்புறங்களில் 'சதாம் ஒளிந்திருப்பார்' என்று சொல்லி சந்கேப்படும் எல்லோரையுமே சுடுவது - வீடுகளை அழிப்பது - இவையெல்லாம் அவர்களின் வாடிக்கை.

இவர்கள்தான் அமைதிப்படை! இவர்களை எப்படி மக்கள் தாங்குவார்கள்?

''அமெரிக்கர்கள் அடிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை; எனவே, திருப்பி அடிப்பதைத் தவிர எங்களுக்கும் வேறுவழி இல்லை'' என்கிறார்கள் ஈராக்கியர்கள்.

●●●

கடந்த இரு மாதங்களில் நடந்த கொரில்லாத் தாக்குதல்களைப் பாருங்கள்:

■ பாக்தாத் — 9-10-2003:

ஸ்பானிய ராணுவ அதிகாரி தங்கியிருந்த வீட்டுக்கு 4 பேர் சென்றனர். ஒருவர் ஷியா மதகுரு போல வேடம் போட்டிருந்தார். கதவைத்தட்டியவுடன் அதிகாரி கதவைத் திறந்தார். அவரை வெளியே இழுத்தார்கள் வந்தவர்கள். அவர் தப்பி ஓடிய போது மண்டையில் நேருக்கு நேர் சுட்டு அங்கேயே வீழ்த்தினார்கள்.

■ பாக்தாத் — 9-10-2003:

பாக்தாத் காவல் நிலையத்தின் மீது காலை 8.30 மணியளவில் வெள்ளைக் கார் ஒன்றில் வைத்த வெடிகுண்டு வெடித்து 8 போலீசார் கொல்லப்பட்டனர். அங்கே சம்பளம் வாங்குவதற்காகக் கூடியிருந்த அதிகாரிகள் உட்பட 45 பேர் படுகாயம் அடைந்தனர்.

(இச்சம்பவத்திற்குப் பிறகு தெருக்களில் வேகமாக வந்து நிறுத்தச் சொல்லியும் நிறுத்தாத கார்கள் மீது அமெரிக்க ராணுவம் குண்டு அடித்து பல ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.)



வயதான ஈராக்கியப் பெண்மணியைச் சோதிக்கும் அமெரிக்கச் சிப்பாய். தற்கொலைப் போராளிகள் உருவாக்கியிருக்கும் மரண பீதி.

■ கர்பாலா நகரம் — 16,17-10-2003:

ஷியா முசுலீம் பிரிவினரில் மத அடிப்படையிலான போராளிகள் ராணுவத்தோடு இரவுச்சண்டை போட்டதில் 3 அமெரிக்கச் சிப்பாய்களும், போலீசாரும் கொல்லப்பட்டனர். இதில் 9 ஈராக்கியப் போராளிகளும் இறந்தனர். ஷியா இளைஞர்கள் 17-10-03 அன்று காலை வெட்ட வெளிச்சத்தில் நடந்த மோதலில் கைகளில் கத்திகளோடும், துப்பாக்கிகளுடனும் அமெரிக்க ராணுவத்தோடு சண்டையிட்டனர்.

அதே நாளில் ஹடீதா நகரில் (பாக்தாதுக்கு 200 கி.மீ வடகிழக்கில்) எண்ணெய்க் குழாய்கள் குண்டுவீசித் தகர்க்கப்பட்டன. வடக்கு எண்ணெய்க் கிணறுகளையும் அல்டௌரா எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையையும் இணைக்கும் குழாய்கள் உடைந்தன.

■ பாக்தாத் — 26-10-2003:

அமெரிக்கத் துணை ராணுவச் செயலாளர் பால் உல்ஃபோவிட்ஸ் தங்கியிருந்த அல்ரஷீத் ஓட்டலின் மீது சுமார் 10 ராக்கெட்டுகள் வீசப்பட்டன. இவன் ஈராக்கில் அமெரிக்க எடுபிடி ஆட்சி அமைக்க அனுப்பப்பட்டவன். ஏவுகணைகள் இவனது பக்கத்து அறையில் சிதறி விழுந்ததால் உயிர் தப்பிவிட்டான். குறி அவனுக்கே வைக்கப்பட்டது. அந்த ஓட்டலில் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் மற்றும் அமெரிக்க வியாபாரிகள் தங்கியிருந்தனர். ஒரு அமெரிக்கப் படைத்தளபதி கொல்லப்பட்டார்; 7 அமெரிக்க ராணுவ அதிகாரிகள், 4 அமெரிக்க சிவிலியன்கள், 4 வெளிநாட்டு சிவிலியன்கள் படுகாயமடைந்தனர். இருசக்கர வண்டியில் ஜெனரேட்டர் வைத்து ஒரு டிரெயிலர் வண்டியால் இழுத்து வரப்பட்டது - இது ஒரு ஏற்பாடு. அந்த வண்டிக்குள் வைத்திருந்த ராக்கெட்டுகளே ஓட்டல் மீது வீசப்பட்டன.

■ பாக்தாத் — 27-10-2003:

செஞ்சிலுவைக் குறியிட்டு வந்த ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று அச்சங்கத் தலைமையகத்தின் மீது மோதப்பட்டு உள்ளிருந்த குண்டுகள் வெடித்தன. அது செஞ்சிலுவை ஆம்புலன்ஸ் அல்ல. போராளிகள் அவ்வாறு சாதாரண வண்டியை மாற்றிப் பயன்படுத்தினர். இதில் 12 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். ஒரு அமெரிக்கச் சிப்பாய் உட்பட 28 பேர் 1/2 மணி வித்தியாசத்தில் குண்டுவெடிப்பில்


படிப்பகம்

www.padippakam.com




'ஈராக் நாடு - ஈராக் மக்களுக்கே': பாக்தாத் அமெரிக்க நிர்வாக அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம்.

கொல்லப்பட்டனர். அதே இரவில் மேலும் 4 இடங்களில் குண்டுவெடிப்புகளில் 230 பேர் காயம் அடைந்தனர்.

■ பாக்தாக்கு மேற்கே ஃபலூஜா — 28-10-2003:

வட ஈராக்கில் 4 அமெரிக்கர்கள் படுகாயம் அடைந்த செய்தி ஃபலூஜாவை எட்டுவதற்குள் கார் வெடிகுண்டு வெடித்து 4 பேர் கொல்லப்பட்டனர்.

■ பலாது நகரம், பாக்தாதுக்கு 70 கி.மீ. வடக்கே — 29-10-2003:

68 டன் எடைகொண்ட அமெரிக்க அப்ராம்ஸ் டாங்கி நிலக் கன்னிவெடி ஒன்றினால் வீழ்த்தப்பட்டு 2 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். டாங்கி நொறுக்கப்பட்டது. அதே நாளில் பல நாடுகளின் கூட்டுப்படையில் சிப்பாய்கள் 7 பேர் போராளிகளோடு மோதலில் படுகாயம் அடைந்தனர்.

■ ஃபாலூஜா நகருக்குத் தெற்கே — 3-11-2003:

அமெரிக்க எதிர்ப்பு கொரில்லா இயக்கத்தின் ஆணையின்பேரில் அமெரிக்க சினூன் ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது. 15 அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்: 21 பேர் படுகாயம் அடைந்தனர். அதே நாளில் ஈராக்கின் பல பகுதிகளில் 5 அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்; பிளாக் ஹாக் (கரும்பருந்து) எனப்படும் சிறு போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

■ மோசூல் - வட ஈராக் — 5-11-2003:

அமெரிக்க ராணுவத்தளம் தாக்கப்பட்டது. கை எறி குண்டுகள் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டன.

■ பாக்தாதிற்கு வடக்கேயும், தெற்கேயும் — 8-11-2003:

'ஈராக் ஈராக்கியருக்கே' என்று முழக்கமிட்டு பல்லாயிரம் மக்கள் பங்கேற்ற பிரும்மாண்டமான அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. நோக்கம்: ஆக்கிரமிப்பை முறியடிப்பது. அதே நாளில் டிக்ரிட்டில் (மத்திய ஈராக்) அமெரிக்க F.16 ரகச் சண்டை விமானம் குருவி போலச் சுடப்பட்டது.

■ நசிரியா — 12-11-2003:

இத்தாலியின் கராபினியரி துணை ராணுவப் போலீஸ் குவிந்துள்ள தலைமையகத்தின் மீது டிரக் குண்டுகள் வெடித்து 14 போலீசு கொல்லப்பட்டனர். சுமார் 2300 இத்தாலியப் படைகள் ஈராக்கில் குவிந்துள்ளன. (இத்தாலியின் பிரதமமந்திரி பெர்லூச்கோனி புஷ்ஷின் ஆதரவாளன் என்பது குறிப்பிடத்தக்கது.) இச்சம்பவத்தால் கிளர்ந்த இத்தாலிய மாணவர்கள் 'அமெரிக்காவே ஈராக்கிலிருந்து வெளியேறு!' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

●●●

இப்படி 2 மாதங்கள் தொடர்ந்து நகர்ப்புறக்கொரில்லாக்களால் தாக்கப்பட்டதும் புஷ் கும்பல் காலுக்குள் வாலை நுழைத்துப் பசப்பல் ஊளையிடுகின்றது. காலின் பாவெல் ''ஈராக்கில் அமைதி கொண்டுவந்து சீர்திருத்தங்கள் செய்யவே விரும்புகிறோம் ''என்று அறிக்கை விடுகிறான்; ரம்ஸ் ஃபீல்டு பீதிகலந்த அறிக்கையில், ''தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்துகொள்ள அவர்களுக்கு அதிகபட்சப் பொறுப்புக்கள் கொடுக்க இருக்கிறோம்'' என்று நைச்சியம்பேசி அடிவருடிகள் தேடி வலையை வீசுகிறான்.

அவை ஒருபுறமிருக்க, ஃபல்லூஜாவில் போராளிகள் ஒவ்வொரு நாளும் போராடுகிறார்கள். 5,00,000 மக்கள் தொகை கொண்டது ஃபல்லூஜா நகரம். பாக்தாதுக்கும் ஃபல்லூஜாவுக்கும் இடையே உள்ள சாலையில்தான் அருவெறுக்கத்தக்க சதாமின் - அபுகாரேப் சிறைக்கூடம் உள்ளது. அது அன்று சதாமின் சித்திரவதை முகாம்; இன்றோ, அமெரிக்க அடக்குமுறைக் கூடம்.

செப் 17 அன்று ஃபல்லூஜாவிலேயே வேறொரு சம்பவத்தில் திருமண நிகழ்ச்சியின் மீது குண்டுபோட்டதில் 14 வயசுச்சிறுவன் கொல்லப்பட்டான். ஆறு பேர் படுகாயம் அடைந்தார்கள். மணவிழா மரணச் சடங்கானது.

ஃபல்லூஜாவில் போர் ரணகாயங்களும் உண்டு; எதிர்ப்புப் போர் இயக்கமும் உண்டு. 1991 போரின்போது அதன் பிரதானச் சந்தை மீது அமெரிக்கா குண்டுகள் போட்டு அழித்தது. அப்போது அருகில் குடியிருந்தவர்கள் காயம் பட்டவர்களுக்கு உதவச் சென்றபோது அவர்கள் மீதும் குண்டுபோட்டது அமெரிக்கா. அது பல ஆயிரம் பேர் கூடும் சந்தை. 200 பேர் கொல்லப்பட்டார்கள்; 500 பேர் படுகாயம் அடைந்தார்கள். அப்போது ராணுவத்தின் நோக்கம் ஈராக் மக்களின் நெஞ்சுரத்தை அழிப்பது என்றார்கள். ஆனால், ''அமெரிக்காவின் போர் ஈராக்கியருக்குச் செய்த ஒரே நன்மை எங்கள் நெஞ்சுரத்தைப் பல ஆயிரம் மடங்கு கூட்டியதுதான்'' என்கிறார்கள் ஃபல்லூஜா மக்கள்.

அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க இனியும் ஒரு ஃபதாயீன் வேண்டாம்; அல்கொய்தா அவசியமில்லை. பாத் கட்சி கூட உடன் நிற்க வேண்டாம். அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகக் குடும்பங்கள் குடும்பங்களாகத் தாங்களாகவே போராடுகிறார்கள்.

இதுவரை 20,000 ஈராக்கியர் கொல்லப்பட்டு விட்டார்கள். 'போர் முடிந்ததெ'ன்றார்களே, அதற்குப்பிறகு 10,000 பேர் தெருக்களிலே கொன்று வீசப்பட்டு ரத்தக் கவிச்சி நிரந்தரமாக மக்களின் நெஞ்சை ஆக்கிரமித்து அரிக்கத் தொடங்கி விட்டது; ''எப்போது பழிதீர்ப்பீர்கள்?'' என்று கேட்கிறது.

''எத்தனையோ நூற்றாண்டுகளாக நாங்கள் ஆக்கிரமிப்பாளரைப் பழிதீர்த்துப்புதைத்து வருகிறோம்.... ஈராக் மீது படை எடுத்து இங்கே கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சர் ஸ்டேன்லி மாட் என்ற பிரிட்டிஷ் காலனிய லெஃப்டினன்ட்டும் புஷ் போலவேதான் சொன்னான். 'நாங்கள் வென்றடக்கவோ, எதிரிகளாகவோ வரவில்லை, உங்களை விடுதலை செய்ய வந்திருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறோம்' என்றான். அது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம். இப்போது அந்த ஜெனரல் 'மாட்'டுக்கு அருகே நிறைய இடம் காலியாக இருக்கிறது. அமெரிக்கர்கள் வரட்டும், அங்கே புதைக்கிறோம்'' என்கிறார் ஓர் ஈராக்கியப் பெண்.

இது ஃபல்லூஜா நகரின் சபதம். முன்பு இந்நகரை 'மசூதிகளின் நகரம்' என்பார்கள்; இன்று அது 'வீரர்களின் நகரம்'! — ஈப்ரைடிஸ் நதிக்கரையில் பெண்கள், 9 வயதுச் சிறுவர்கள் கைகளில் துப்பாக்கிகளோடு அமெரிக்க ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

இந்த நகர்ப்புறக் கொரில்லாப் போரின் இலக்கு என்ன? எதிரிகளின் தலைவர்களை வீழ்த்துவது; மற்றும் எதிரிகளின் மனவலிவை வீழ்த்துவது. இது பலவிதங்களில் செயல்படுகிறது. உல்ஃபோவிட்ஸ் மீதான தாக்குதல் அதில் முக்கியமான ஒன்று. நகருக்குள் அமெரிக்க ஆயுதங்கள் சப்ளை செய்ய வந்த ரயிலை அழித்தார்கள்; அது - சப்ளை வழிகளை அடைப்பதற்காக. மிகப்பெரிய சக்தி நாங்கள் என்று சொல்பவனின் நெஞ்சுரத்தை அடித்துப் பொடிப்பொடியாக்குவதற்காக.

'கை அசைத்து ஈராக்கியர் எங்களை வரவேற்றார்கள்' என்றான் ஒரு அமெரிக்க கேப்டன் - அது சதாம் வீழ்ந்த போது. இன்று ஆணோ, பெண்ணோ - சிவிலியன்கள் வெளியே வந்து சந்தேகமாக நின்றாலே சுடப்படுகிறார்கள். இன்று அறியாமல் கை அசைக்கும் சிறுவர்களின் தலையைப்பலமாகப் பெண்கள் தட்டி அடக்குகிறார்கள். இதைப் பார்த்த புதிய அமெரிக்கப் படைகள் ''நம்மை அவர்கள் விரும்பவில்லை; பின் எதற்காக இங்கே இருக்கிறோம்?'' என்று தங்கள் தலைவர்களைக் கேட்கத் தொங்கிவிட்டார்கள்.

வீடுகள், தெருமுனைகளில், சிறுவர்கள், சிறுமிகள் நகரும் அமெரிக்க ராணுவத்தின் மீது கற்களை, மண்கட்டிகளை வீசுகிறார்கள்; அவர்களின் பின்னால், வீசச் சொன்ன பெண்களின், பெரியவர்களின் தலைகள் தெரிந்து மறைவதை அமெரிக்கச் சிப்பாய்கள் பார்க்கிறார்கள். ''போ, வெளியே போ!'' என்ற மவுனமான குரல் அவர்களை ஈராக் முழுக்க விரட்டுகிறது; ஈராக் மக்கள் விரட்டுகிறார்கள். ஆனால் தன்னந்தனியாக ''சதாமின் மிச்ச சொச்சமும்,'' ''முட்டுச்சந்துகளும்'' (இவை அமெரிக்கத் தலைவர்களின் வசவுகள்.) கொரில்லாப்படையாக உருவெடுப்பதாகக் கற்பித்துக் கொண்டு ''பிடியுங்கள் அவர்களை, உடனே கொண்டுவாருங்கள் இங்கே!'' என்று நாடகவசனம் பேசுகிறான் புஷ். அவன் மூக்குக்கு வெகு அருகே பல லட்சம் அமெரிக்க மக்கள் வாஷிங்டன் (டி.சி)யில் ''அமெரிக்க வீரர்களைப் பலியாக்காதே. அப்பாவி ஈராக்கியரைக் கொல்லாதே. அமெரிக்கப் படையை **இப்போதே கொண்டு வா இங்கே''** (Bring them Home Now) என்று எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்கள்.

ஈராக்கின் உள்ளே கேட்கும் குரல் எதிரிகளைப் பழிவாங்க - அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்ற. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் கேட்கும் குரல் தங்கள் சகோதரர்களும், மகன்களும், தந்தைமார்களும் செத்து பையில் சுருட்டப்பட்டுச் சவமாக வரக் கூடாதே என்பதற்காகவும், ஈராக் மீதான அநியாயமான போருக்கு எதிராகவும். உலகெங்கும் கேட்கும் குரல் - அமெரிக்க மோசடிகளுக்கு எதிராக.

> **''அது ஈராக் மக்களின் வெறுங்கோபம் அல்ல; தங்கள் மக்களை, குழந்தைகளை இழந்த போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அது உருத்திரண்டு கனன்று வளர்ந்துவரும் நெருப்பு; தார்மீக ஆவேசம். அது அவர்களின் கரங்களில் - ஆண், பெண், குழந்தை, முதியவர் என்று பேதமே பார்க்காமல் போர் ஆயுதங்களைக் கொடுத்திருக்கிறது.''**

வெளியே கேட்கும் குரல்கள் அமெரிக்க மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரானதாக அரசியல் ரீதில் குவிய வேண்டும்; ஈராக்கின் உள்ளே கேட்கும் குரல் இயல்பாக, உறுதியாக, எழுச்சி பெற்று தேசவிடுதலைப் போர்க்குரலாக வளர வேண்டும்.

●●●

எதிரிகள் ரம்சான் தொடக்கத்தில் தங்கள் குழந்தைகளின் தலைகளைச் சீவியதையும், பெண்கள் கற்பழிக்கப் பட்டுக் குரல்வளை பிளக்கப்பட்டதையும் பார்த்த ஈராக்கியர்கள் ரம்சான் பெயராலேயே பழிக்குப் பழி எனும் சபதம் எடுத்திருக்கிறார்கள். அது நியாயமானது; அந்தச் சபதம் - நூற்றுக்கணக்கான எதிரிகளைக் கொன்று, ஆயிரக் கணக்கில் அவர்களைக் காயப்படுத்தி ரத்தத்தில் நனைந்திருக்கிறது.

ஈராக் மண்ணில் நடக்கின்ற ஆக்கிரமிப்பு முடிவுக்கு வரும். அது அந்த மண்ணின் வரலாறு தரும் பாடம். நீண்டநாள் அந்த மண்ணை யாரும் அடிமைப்படுத்தி வைத்தது கிடையாது. துருக்கி ஆட்டோமான் பேரரசு தன் கொடுங்கரத்தால் நசுக்கியது - நீண்ட நாள் போராடி அதிலிருந்து விடுபட்டது ஈராக்; பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் அரசின் கீழ் நசுக்கப்பட்டது - பிரிட்டிசாரை விரட்டியடித்து , அன்று பிரிட்டிஷ் படை என்று சொல்லி அவர்களோடு சேர்ந்து போரிட்ட இந்திச் சிப்பாய்களைத் தனியே இனம்கண்டு அழித்து மண்ணை மீட்டது ஈராக்கின் சொந்தப் போராட்டம்; இன்றும் ஒரு மீட்புப் போர் அங்கே நடக்கிறது. இப்போது அந்தப் பாரம்பரியத்தைப் பற்றி, கிறித்து பிறப்பதற்கு முன்பே நாகரீகம் கண்ட அந்த மண்ணின் மரபைப்பற்றி நாம் சொல்லவேண்டாம்; அமெரிக்கப் படையின் வீரர்களே சொல்கிறார்கள். இங்கிலாந்திலிருந்து வெளியாகும் 'தி இன்டிபெண்டெண்ட்' என்ற நாளேட்டின் மத்தியக்கிழக்குச் சிறப்புச் செய்தியாளர் ராபர்ட் ஃபிஸ்க்கிடம் ஈராக்கில் உள்ள சக் என்ற அமெரிக்கச் சிப்பாய் சொன்ன ஒரு சில வரிகள் போதும்: ''அந்த நாட்டின் மிகமிக அரிய அற்புதமான செல்வம் என்ன தெரியுமா? அந்த மக்கள். ஈராக்கிய மக்கள். உயிர்ச்சத்து (புரோட்டோபிளாசம்) நிரம்பியுள்ள கற்பனை வளம் உள்ள மக்கள். அருமையான போராளிகள்!''

இருபதாம் நூற்றாண்டை அமெரிக்க ஆளும் வர்க்கம் எப்படிக் கொலைவெறி, இனவெறி கொண்ட காலனியப் போர்களோடு தொடங்கியதோ, அதே வழியில்தான் 21-ஆம் நூற்றாண்டையும் தொடங்கியுள்ளது. எனவே, ஏகாதிபத்தியம் என்றால் போர்; அதற்கெதிரான விடுதலைப் போராக, மக்கள் போராக ஈராக்போர் தொடங்கிவிட்டது!

முதலில் அது *எதிர்ப்பு இயக்கமாக* வலுக்கும், பிறகு விடுதலைப் போராக மாபெரும் வடிவெடுத்து வெடிக்கும். அமெரிக்காவின் தற்காலிக வெற்றி, தற்காலிகத் தோல்வியாகவும், பிறகு நிரந்தரத் தோல்வியாகவும் மாறும்.

● புதூர் இராசவேல்



படிப்பகம்

www.padippakam.com

## *உண்மைச் சம்பவம்:*

# ஒரு உதவி இயக்குநரின் ஒருநாள் கதை!

அன்றைக்கு திங்கட்கிழமை. அறையில் யாருமில்லை. சனிக்கிழமை இரவே அனைவரும் வேலைக்குப் போய் விட்டார்கள். நான் சனி இரவு, ஞாயிறு காலை, மதியம், இரவு என்று நான்கு வேளையும் சாப்பிடவில்லை. வாழ்க்கையிலேயே முதல், முதலாக அன்றுதான் அப்படிப் பட்டினி கிடந்தேன். கையில் சுத்தமாகக் காசு இல்லை. அறையில் உள்ளவர்கள் வேலைக்குப் போகாத நாட்களில் அந்தப் பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்களில் நுழைந்து சாப்பிட்டு விட்டு வருவார்கள். என்னையும் அழைப்பார்கள். கல்யாண வேலைக்குப் போவதையே இழிவாகக் கருதிய நான் சாப்பிடப் போவேனா, போகவில்லை.

ஆனால் திங்கட்கிழமை காலை பசியால் குடல்கள் எல்லாம் வறண்டு, சுருங்கி புரள்வது போன்ற வலி. எதை யாவது சாப்பிட்டாக வேண்டும் என்கிற நிலையில் பைத்தியம் பிடித்தவன் போல அறை முழுவதும் ஏதாவது சில்லரை கிடைக்குமா என்று தேடினேன். அந்த அறையே மூன்று பேர் படுக்கும் அளவு ஒரு அறையும், ஒரு சமையலறையும் கொண்டது தான். அந்த அறைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தேன். தேடிய இடங்களிலேயே மீண்டும் மீண்டும் தேடினேன்.

கடைசியாகக் கிடைத்தது வெறும் இருபத்தைந்து பைசா மட்டுமே. சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டேன். கொஞ்ச நேரம் அமைதியாக யோசித்துக் கொண்டிருந்தேன். உடனே எழுந்தேன். வேகவேகமாகக் குளித்தேன். நீட்டாக ஜீன்ஸ் பேன்ட், ஷர்ட், ஷூ என்று போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியேறினேன். குளித்தது மேலும் பசியைக் கிளறி விட்டது. ஏதாவது ஒரு மண்டபத்தில் நுழைந்து சாப்பிட்டு விடவேண்டியது தான் என்று முடிவெடுத்தேன்.

என்.எஸ்.கே. சாலை விஜயசேஷ மகாலுக்கு எதிரில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு மண்டபத் தையே பார்த்துக் கொண்டிருந்தேன். ஏதோ ஒரு வேகத்தில் வந்த தைரியம் அருகில் வந்ததும் பறந்து விட்டது. போகலாமா, வேண்டாமா, மாட்டிக் கிட்டா என்னாகும், பயங்கர அவமான மாகிவிடுமே, இந்த ஒருவேளை மட்டும் சாப்டுட்டா அடுத்த வேளைக்கு எப்படியும் பார்த்துக்கலாம், நைட்டுக் கூட சாப்டுக்கலாம், போகலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்ததிலேயே பத்து நிமிடம் போய் விட்டது.

மறுபடியும் வயிறு வலிக்க, மறு படியும் ஒரு குருட்டுத் தைரியம் வந்தது. என்ன ஆனாலும் சரி, போய் வயிறு முட்டச் சாப்பிடப் போகிறேன். கேட்டா, சாப்பிடத்தாங்க வந்தேன்னு உண்மைய சொல்லிட்டா அடிக்கவா போறாங்க, அடிச்சா அடியையும் வாங்கிக்குவோம், கொலையா பண்ணிடுவாங்க, நாலு அடி அடிப்பாங்க அவ்வளவு தானே. போவோம் என்று துணிந்து விட்டேன். அப்போது தான் பாபு என்கிற தெரிந்த பையன் வந்தான். அவனைப் பார்த்த தும் இன்னும் தைரியம் கூடிப் பல மடங்கு பலம் வந்தது போலாகி விட் டது. இவனையும் கூட்டிட்டுப் போயிட வேண்டியதுதான் என்று கூப்பிட்டேன். பயமாயிருக்கு வரவில்லை என்றான். நான் முன்னாடியே பலமுறை போயி ருக்கேன், ஒன்னும் பயப்படாத நான் பாத்துக்கறேன். வா... என்று பொய் சொல்லி அவனையும் அழைத்துக் கொண்டு சாலையைக் கடந்து அந்தப் பக்கம் போனேன்.

> **"என்ன ஆனாலும் சரி, போய் வயிறு முட்டச் சாப்பிடப் போகிறேன். கேட்டா சாப்பிடத்தாங்க வந்தேன்னு உண்மைய சொல்லிட்டா அடிக்கவா போறாங்க, அடிச்சா அடியையும் வாங்கிக்குவோம், கொலையா பண்ணிடுவாங்க, நாலு அடி அடிப்பாங்க அவ்வளவு தானே."**

●●●

வாசலிலேயே வாட்ச்மேன் உட்கார்ந்து கொண்டிருந்தார். கல்யா ணத்திற்குப் போகின்ற இரண்டு பேர் எப்படிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டு உள்ளே போவார்களோ அப்படிப் போக வேண்டும். எதையா வது பேசு என்றேன் பாபுவிடம். என்ன பேச ஒன்னும் வரல என்றான். எதையா வது பேசு. சினிமா பத்தி என்றதும் சினி மாவைப் பற்றிப் பேசினான். ரொம்ப சீரியசாகப் பேசுவது போலப் பேசிக் கொண்டு உள்ளே போய்விட்டோம். கேட்டைக் கடந்தது கடலைக் கடந்தது போலாகி விட்டது. உள்ளே போனதும் திக்கென்றாகிவிட்டது. முகூர்த்த ஹாலில் சிலபுரோகிதர்களும், பார்வை யாளர்கள் வரிசையில் சிலரையும் தவிர அங்கு வேறு யாரையும் காணவில்லை. நாங்கள் இருவர் மட்டுமே நின்று கொண்டிருந்தோம். வாசலில் விழித்துக் கொண்டு நிற்கக் கூடாது என்பதால் டைனிங் ஹாலுக்குள் நுழைந்து விட் டோம். இரண்டு வரிசையில் வெறும் இருபத்தைந்து பேர் மட்டுமே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். தாம திக்காமல் காலியாக இருந்த சேரில் போய் உட்கார்ந்து கொண்டோம்.


இலை போட்டு கேசரி, அல்வா, இட்லி, வடை, பொங்கல் என்று அனைத்தும் வைக்கப்பட்டது. நாங்கள் யாரையுமே பார்க்கவில்லை, சாதாரண மாகச் சாப்பிட முடியவில்லை. பயங்கர மான பசியிலும் கூட அள்ளி, அள்ளி விழுங்க முடியவில்லை. அவர்கள் சாப்பிடுவது போலவே துளி, துளியாக 'நாகரீகமாக'வே சாப்பிட வேண்டி யிருந்தது.

இப்பொழுது பசியால் வயிறு வலிக் கவில்லை. குருட்டுத் தைரியத்தில் தூக்கிப் போட்டுவிட்டு வந்த பயமும், அவமானமும் இப்பொழுது மீண்டும் வந்துவிட்டது. மாட்டிக்கிடுவோமா, எழுந்து போய்விடலாமா என்று பல வாறு யோசித்தேன். பயத்தினால் என்ன சாப்பிடுகிறோம் என்பதே தெரிய வில்லை. இலையைப் பார்த்தபோது வைத்த இரண்டு இட்லி காலியாகி யிருந்தது. பொங்கல் ஒரு வாய்கூடத் தொண்டையில் இறங்கவில்லை. என்னுடைய இடது தோளில் விழுந்த கரத்தினால் திரும்பிப் பார்த்தேன். வாட்ச்மேன். எனக்குப் பகீர் என்றது, பயம் அதிகமாகிப் பயஉணர்ச்சியில் என்ன செய்வது, என்ன பேசுவது என்று ஒன்றும் புரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



பாபு மாட்டிவிட்டுட்டியேடா பாவி என்பது போலப் பார்த்தான். கொஞ்சம் வெளிய வாங்க என்றார் வாட்ச்மேன். ஒன்றுமே பேசாமல் இருவரும் எழுந்து போய் வாஷ்பேசினில் கையைக் கழுவிக் கொண்டோம். அந்த இடத்தில் யாருமேயில்லை. அங்கு எனக்கு ஏற்பட்ட பயத்தையும், படபடப்பையும் விவரிக்க இயலவில்லை. எப்படி யாவது தப்பிக்க முடியுமா என்று பார்த்தேன். ஒரு வழியும் இல்லை என்பதால் வாட்ச்மேன் முன்னால் வந்து நின்றோம்.

சாதாரணமாகத்தான் விசாரித்தார். கல்யாணத்துக்கா வந்தீங்க, நான் ஆமாம் என்றேன். யார் அனுப்புனது? தைரியமாக, எங்கப்பா என்று பொய் சொன்னேன். வீடு எங்க. கே.கே. நகர். அப்பா பேரு, உடனே வாயில் வந்த நமச்சிவாயம் என்ற பெயரைச் சொன்னேன். சரி இங்க பொண்ணு வீட்ல, மாப்ள வீட்ல யாரையாவது தெரியுமா? தெரியும். எங்க இருக்காங்க காட்டுறீங்களா என்று உள்ளே கூப்பிட்டார். உள்ளே போனால் அவ மானமாகிவிடும். எப்படியாவது தப்ப வேண்டும். எனவே உள்ள இல்ல வெளிய கேட்கிட்ட நிக்கிறாரு என்றேன். வெளிய யாருமில்லயே. எல்லாம் உள்ளதானே இருக்காங்க என்றார். இல்ல நாங்க வரும் போது அவரு வெளிய தான் நின்னாரு என்றேன்.

வாட்ச்மேனுக்குச் சந்தேகம் வலுத்து விட்டது. சரிவாங்க என்று என்னுடைய வலது கையையும், அவனுடைய இடது கையையும் அவருடைய இரண்டு கைகளில் இழுத்து அடக்கி நடுவில் நின்றுகொண்டு கேட்டை நோக்கி நடந்தார். வலது பக்கமாக வந்த பாபுவைப் பார்த்து ஓடிவிடலாம் என்று முகத்தில் பாவனை காட்ட முயற்சி செய்தேன். அவன் கவனிக்கவில்லை. பசி இப்போழுது பறந்து போய் விட்டது. அவன் வந்தாலும், வரா விட்டாலும் நாம் எப்படியாவது ஓடி விடவேண்டும் என்று முடிவு செய்தேன்.

கேட்டை நெருங்க நெருங்க வாட்ச்மேனின் பிடி தளர்ந்தது. தப்பி யோட இதுதான் சரியான சமயம் என்றெண்ணி என் வலது கையை வாட்ச்மேனின் தாடையில் ஓங்கிச் சாத்திவிட்டு வாசலை நோக்கி ஓடினேன். நான் தப்பியதும் உஷாரான வாட்ச்மேன் பாபுவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கேட்டில் நின்ற மற்றொரு வாட்ச்மேனுக்கு விசிலை ஊதிக் கொண்டே கத்தினான். அவனப் புடி அவனப்புடி விடாத... ஓடிய நான் பாதி கேட்டை தாண்டிவிட்டேன். கேட்டில் நின்றவன் கைக்கு என் சட்டை காலர் மாட்டிவிட்டது. பிடித்து இழுத்து வயிற்றில் ஒரு குத்துவிட்டான். காலர் கிழிந்து தொங்கியது இதற்குள் அந்த வாட்ச்மேன் ஓடிவந்துவிட்டான். வந்த வேகத்தில் என் முகத்தில் மாறி, மாறிக் குத்திவிட்டு திருட்டு.... பையா ஓடவாப் பாக்குற, நீ பேசும் போதே நெனச்சேன் ...த்தா வாடா என்றான்.

அப்போது தான் நான் வெளியே சாலையைப் பார்த்தேன். எதிரில் உள்ள பேருந்து நிலையத்தில் கல்லூரிக்குப் போகும் வண்டிகளுக்காக மாணவர் களும், மாணவிகளும் நின்று கொண்டி ருந்தார்கள். அவமானமாக இருந்தது.

சாப்பிட்டு விட்டு வந்தவர்கள் முகூர்த்த ஹாலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தார்கள். நான் தலையைக் குனிந்து கொண்டேன். எங்களைக் கூட்டி வருவதைப் பார்த்து தங்க ளுக்குள் பேசிக்கொண்டார்கள். அந்தப் பெண்கள் என்ன பேசிக்கொள் வார்கள்? இவ்வளவு டீசன்டா டிரஸ் பண்ணிகிட்டு, எவ்வளவு கேவலமான காரியம் செஞ்சிருக்காங்க பாரு என்று பேசிக் கொள்வார்களோ? முகம் சிவந்து, காதுகள் சூடாகிவிட்டது. அவமான உணர்ச்சியில் அம்மணமாக நிற்பது போன்றிருந்தது.

உடனடியாக மேனேஜர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். சட்டையைக் கழட்டச் சொல்லி விசாரணை நடந்தது. எதுக்குடா வந்தீங்க என்றார் மேனேஜர். இப்பொழுது, சாப்பிடத்தான் வந்தோம் என்ற உண்மையையும் வெட்கமின்றிச் சொன்னேன். பொய் சொல்லாத, உண்மையச் சொல்லிட்டா விட்டு டுவோம், இல்லன்னா நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போகணும் என்றார். எனக்குத் திகைப்பாகவும், அதிர்ச்சியாவும் இருந்தது. உண்மையச் சொன்னா பொய்யிங்கிறாங்க, போலீசுங்கிறாங்க என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் கெஞ்சும் தொனியில் சார் சத்தியமா நாங்க சாப்பி டத்தான் வந்தோம் என்றேன். சாப்பிட வந்தா ஏன் ஓடுன? தெரியாம ஓடிட்டேன் சார். இனிமே இந்தப் பக்கமே வரமாட்டேன் என்றேன். பக்கத்தில் நின்ற வாட்ச்மேன் முந்திக் கொண்டு சார் இவனுங்க நிச்சயமா திருடத்தான் வந்திருக்கானுங்க, இப்படிக் கேட்டா சொல்ல மாட்டா னுங்க, முட்டியப் பேத்தாதான் தெரியும், போலீசுக்குப் போன் பண்ணுவோம் என்றான். அவன் முகத்தில் ஓங்கி ஒரு அறை விட வேண்டும் போலிருந்தது. திருடன்னு வேற சொல்றாங்க என்று குழப்பத்தில் பயம் அதிகமாகிவிட்டது. அதற்கு மேல் எதையும் பேசாத மேனேஜர் வடபழனி காவல் நிலையத் துக்குப் போன் செய்து அழைத்தார்.

சற்று நேரத்தில் மூன்று காவலர் களுடன் ஆட்டோ வந்து நின்றது. உடனே வாட்ச்மேன் 'இவன்தான் சார் ஓடினான்' என்று என்னைக் காட்டினான். ஒரு கான்ஸ்டபிள் எனக் கருகில் வந்து உட்கார்ந்தான். எதுக்குடா வந்தீங்க என்றான். சத்தியமா சாப்பி டத்தான் சார் வந்தோம். அப்புறம் எதுக்கு ஓடுன? தெரியாம... பயந்து தான்... என்று உளறியதும், முகத்தில் ஒரு குத்து விட்டான். கண்ணாடி நெளிந்து விட்டது. உடனே கூட வந்த இன்னொருவன் சார் இங்க எதுவும் வேணாம், ஸ்டேஷனுக்குப் போயி டலாம் என்றான். அவன் அடித்ததில் எனக்குக் கண்கள் கலங்கி அழுகை வந்துவிட்டது. போய் ஆட்டோல ஏறுங் கடா என்றான். ஏறினோம். வண்டி வட பழனி சிக்னலில் நின்றது. பக்கத்தில் நின்ற ஆட்டோ, பைக், கார்களில் உள்ள வர்கள் அனைவரும் பார்ப்பது போலி ருந்தது. சீக்கிரம் ஸ்டேஷனுக்குப் போய்த் தொலையக் கூடாதா என்றி ருந்தது.

●●●

www.padippakam.com

அந்த இன்ஸ்பெக்டர், அவர்கள் கேட்டதையே கேட்டான். நான் சொன்னதையே சொன்னதும் கன்னத்தில் அறைந்தான். கேட்கும் கேள்விகளுக்கு நிதானமாக, மரியாதையோடு, சரியாகத் தடுமாறாமல் பதில் சொன்னால் தப்பிடலாம் என்று எண்ணினேன். எங்கள் மீது கருணை ஏற்படும்படி உண்மையிலேயே அப்பாவியான நாங்கள் மேலும் அப்பாவிகளாகக் கெஞ்சவேண்டியிருந்தது. ஆனால் கருணை என்றாலே தெரியாத அவன் பச்சை, பச்சையான கெட்ட வார்த்தைகளைப் பேசி மரியாதையா உண்மையச் சொல்லு உண்மையச் சொல்லு என்று திட்டினான். அதற்கு மேல் என்னால் நிரூபிக்க முடியவில்லை.

சற்று நேரத்தில் ஒரு பெரியவர் அழைத்து வரப்பட்டார், அதே மண்டபத்தில் சாப்பிட்டதற்காக. அவரை விசாரித்தான். திரைப்படத் துறை ஊழியர் சங்கமான ஃபெப்சியில் இருப்பதாகக் கூறினார். பையனுங்க, பொண்ணுங்க இருக்காங்களா என்றான். ஒரு பொண்ணு கல்யாணமாகி விட்டது என்றார். ஏன்யா ஒனக்கெல்லாம் அறிவில்ல, கல்யாணமான ஒரு பொண்ணுக்கு அப்பன், அறுபது வயசாகுது, திருட்டுத்தனமா திங்க வெக்கமாயில்ல? தலை குனிந்திருந்தவர் ''இன்னிக்கு ஷூட்டிங் வேல இல்ல சார் அதான்...'' என்று இழுத்தார். அவர் முகத்தில் வெட்கப்பட்டதற்கான அறிகுறியே இல்லை, சங்கடமாய்ச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

அவரைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. ஃபெப்சி கார்டை வாங்கிப் பார்த்தவன் பெரிய கார்டு என்று மேசையில் விட்டெறிந்துவிட்டு ''இனிமே இப்படி கண்டகண்ட இடத்துலயும் நொழஞ்சி திங்காத போ'' என்றான். அவர் போய்விட்டார்.

பின்பு என்னிடம் முழு விபரங்களும் வீட்டு முகவரியும் வாங்கப்பட்டது. ஊரில் வீட்டிற்குத் தகவல் கொடுத்து விடுவார்களோ என்று பயமாக இருந்தது. என்ன வேல செய்யிற என்றான். உதவி இயக்குனர் என்று சொன்னாலாவது கொஞ்சம் மதிப்பும், நம்பிக்கையும் ஏற்படும் என்று நம்பி, அசிஸ்டென்ட் டைரக்டர் சார், பாக்கியராஜ் சார் கிட்ட டிரை பண்றேன் என்றேன். பாபு அப்போது டிபனோடு வந்துவிட்டான் அவனிடம் சில விவரங்களும், முகவரியும் வாங்கிகொண்டு அவனை அனுப்பி விட்டான். பாபு போனதும் ஒரு ஆளைக் கூப்பிட்டு இவன் ரெண்டு கை ரேகையையும் எடுங்க என்று சொல்லிவிட்டு நீ அசிஸ்டென்ட் டைரக்டரா, இல்ல திருட்டுப் பயலான்னு சாயந்தரம் ரிப்போர்ட் வந்ததும் தெரிஞ்சிடும், அப்ப பேசிக்கிறேன் ஓங்கிட்ட, போ என்றான். ரேகை எடுக்கும் போது கைகள் நடுங்கியது. ரேகை எடுப்பவன் விரல்களிலேயே இரண்டு போட்டான் மேலும் நடுங்கியது. ரேகை எடுத்து முடித்தவுடன் ஒரு ஓரமாக உட்கார விட்டார்கள்.

தேம்பித் தேம்பி அழுதேன். அழுகையை நிறுத்த நானே விரும்பவில்லை. மேலும் நன்றாக வாய்விட்டு அழவேண்டும் என்று நினைத்தேன். வீட்டைப் பற்றிய நினைவு வந்தது.

> **''நான் திருடப் போகல, சாப்பிடத்தான் போனேன் என்று சொல்ல முடியுமா? இப்படித் திருட்டுத்தனமாகச் சாப்பிடப் போனதை வீட்டில் சொன்னால் கூடக் கேவலம். வீட்டிலும் கூட உண்மையைச் சொல்ல முடியாது என்று நினைத்தபோது மேலும் அழுகை வந்தது.''**

வீட்டிற்குத் தகவல் சொல்லி அவர்கள் பதறியடித்துக் கொண்டு வந்து என்ன என்று கேட்டால் திருடப் போனான், பிடித்துவிட்டோம் என்பார்கள். இல்ல நான் திருடப் போகல, சாப்பிடத்தான் போனேன் என்று சொல்ல முடியுமா? இப்படித் திருட்டுத்தனமாகச் சாப்பிடப் போனதை வீட்டில் சொன்னால் கூடக் கேவலம். வீட்டிலும் கூட உண்மையைச் சொல்ல முடியாது என்று நினைத்த போது மேலும் அழுகை வந்தது.

சுமார் ஒன்றரை மணிக்கு ஒரு போலீஸ்காரர் எனக்கருகில் ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். பையிலிருந்து டிபன் பாக்சை எடுத்தார். சாப்பிடத் தயாரானார். என்னிடம் பேசினார். நீ ஏம்பா அங்க போன, தேவையா இதெல்லாம்... ஆறுதலாக வந்த குரலால் கொஞ்சம் தெம்பாக இருந்தது. இல்ல சார், நான் சத்தியமா சாப்பிடத்தான் போனேன். அங்க போய் என்னத்த திருடுவேன், எனக்கு அதெல்லாம் பழக்கமில்ல சார் என்றேன். சரிப்பா நீ சொல்றது எனக்குப் புரியுது, அவங்களுக்குப் புரியுமா? அந்த மண்டபத்துல இந்த ஒரு வருஷத்துல மட்டும் நாலஞ்சி தடவ திருட்டு போயிருச்சி என்றார். என்ன சார் திருடு போச்சி என்று கேட்டேன். விளக்கினார்.

சில பேர் சாப்பிடப் போற மாதிரி உள்ள போறானுங்க. கல்யாண வீட்டுக்காரங்க அவங்க வசதியைக் காட்ட குழந்தைகளுக்கு செயின், மோதிரம், கம்மல், எல்லாத்தையும் மாட்டி விடுறாங்க. இவனுங்க குழந்தைகள பாத்ரூம் பக்கமா கூட்டிப் போய் நகைய கழட்டிட்டு ஓடிடுவானுங்க. இது வரை இந்த மாதிரி நாலஞ்சி டைம் நடந்துடுச்சி. நீ வேற பிடிச்சதும் ஓடிருக்க, அதான் உன் மேல இவ்வளவு சந்தேகப்படுறாங்க என்றார். அப்பொழுது தான் எனக்கு 'திருட வந்தான் திருட வந்தான்' என்று மண்டப வாட்ச்மேன் சொன்னதையும், எதை என்பதும் புரிந்தது. அவர் சாப்பிடுவதைப் பார்த்ததும் பசி ஞாபகம் வந்தது. அவர் சாப்பிடச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன், சொல்லவே இல்லை.

அவர் போனதும் நன்றாகத் தூங்கி விட்டேன். மீண்டும் போலீஸ் என்னை எழுப்பும் போது மணி ஏழு. மறுபடியும் அந்த இன்ஸ்பெக்டர் முன்பு நின்றேன். என்னைப் பார்த்தான். ரிப்போர்ட் வந்துடுச்சி, உன் கைரேகை எங்கேயும் மாட்டல. அதனால தப்பிச்ச, அடுத்த தடவ மாட்னா '...' என்றோ அல்லது வேறு என்னவோ ஒரு வார்த்தை சொன்னான். இவனுக்கு என்ன என் மீது இவ்வளவு வெறுப்பு, சரியான முரடனாக இருக்கிறானே என்று நினைத்துக் கொண்டு பேசாமல் நின்றேன். தினமும் வந்து கையெழுத்துப் போட வேண்டும் என்றான். சரி என்று கூறிவிட்டு மாடியிலிருந்து இறங்கினேன்.

காவல் நிலையத்தை விட்டு வெளியே வந்தேன். எப்படியோ வெளியே வந்தது ஒருவகை மகிழ்ச்சியாக இருந்தது. உண்மையிலேயே அப்பொழுதுதான் மூச்சு விடுவது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. மறுபடியும் விஜய சேஷமகால் முன்பு உள்ள நிறுத்தத்தில் வந்து நின்று கொண்டு மண்டபத்தைப் பார்த்தேன். அங்கே வாட்ச்மேன்கள் இல்லை. ஒரு வேளைச் சோற்றுக்கா இப்படி? முதல் முறையாக சென்னை மீது வெறுப்பு வந்தது.

● மூர்த்தி

www.padippakam.com

# எப்படிக் கிடைக்கும் அந்த இனிய ஏழு?

நீளும் மனதின் நினைவுகளில்
ஏழின் பதிவுகள்தான் எத்துணை விதமாய்?
ஏழுகடல் தாண்டிப் பாழுங்கிணற்றில் பதுங்கியிருக்கும்
மந்திரவாதியின் உயிர்க்கருவைப்
பறித்துக் கொணர்ந்தால்
எந்திரித்துக் கொள்வாள் தாய் என்று -
சின்ன வயசில் கேட்ட பேய்க்கதையால்
பயங்கரமாய்ப் பதிந்தது ஒரு ஏழு.

பச்சை வயல்பரப்பில்
இச்சை தீர ஓடி விளையாட எத்தனித்த வயதில்
''ஏய் அது பண்ண வயலு''
என தாய் தடுத்த போதும்,
களத்துமேட்டில் ஒத்தையாய் நிற்கும்
பப்பாளி மரத்தின் மேல் ஆசை கூடுகட்ட
''அடேய்! அத அணில் தின்னா அபராதமில்ல
நீ கைய வச்சிடாத!'' என
அம்மா அதட்டிய போதும்,
அய்ப்பசி மாத அடைமழையில்
ஆட்டுக்கிடாயுடன் பாட்டியின் பழங்கதைகளும்
நனைந்தும், நடுங்கியும் ஒண்டிக்கொள்ள
''அந்த வீட்டுத் திண்ணைபோல ஒன்றிருந்தால்...''
எனக் கூறும் போதே
''அது, நாட்டாமக்காரது, போகக் கூடாது'' எனத்
திரும்பவும் தாய் தடுக்கையிலும்
''ஏனம்மா நமக்கெல்லாம்
அதுபோலக் கிடைக்காதா?''
என ஏக்கமாய் வாயெடுக்க
''ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் கிடைக்காது''
என அழுத்தமாய்த் தாய் சொல்ல
ஏக்கமாய்ப் பதிந்தது ஒரு ஏழு.

வேலை நிமித்தமாய் வெளிநாடு போய்
ஆண்டுக்கொரு முறை வரும் அப்பாவிடம்
''இன்னுமொரு நாள் இருந்துட்டுப் போப்பா''
எனக் கெஞ்ச,
கையின் சொரசொரப்பை
என் கன்னத்தில் வருடி, வர்க்கம் காட்டி
''நாம என்ன ஏழு தலைமுறைக்கு
சொத்து சேர்த்தா வச்சிருக்கோம் உக்கார்ந்து திங்க?''
விடை காணாக் கேள்வியால் வெறுப்பாய் ஒரு ஏழு.

நினைவு தெரிந்ததும், விவரம் புரிந்ததும்
அனைவருக்கும் இன்பமாய்
அறிந்தேன் ஒரு ஏழு.
அதுதான் நவம்பர் 7!
அந்த அழகே 'தனி' என்றல்ல
அந்த ஏழே 'பொது' எனப்
பேச வைத்த சோசலிசம் அல்லவா
நாம் எழுதத் துடிக்கும் இனிய கவிதை.
மனிதன் உலகத்தைக் கண்டுபிடித்தான்
ஆனால் கம்யூனிஸ்டுகள்
மனிதர்களைக் கண்டுபிடித்தார்கள்.
பிறர்க்கெனத் தான் வாழும் அந்த மனிதர்களைப்
பிரசவித்து ஊட்டி வளர்ப்பது எது?
தாய்ப்பாசமா? கம்யூனிசமா?

அன்னை வயலின் தல்கோளனசைப் போல
ஒரு அன்னையில்லையே என ஏங்கிடும்
உங்கள் பிள்ளை மனம்;
தாய்நாவலின் பாவெல்லைப் போல
ஒரு பிள்ளை இல்லையே என ஏங்கிடும்
உங்கள் தாயுள்ளம்.
கருவைச் சுமப்பது வெறும் மகப்பேறு
கம்யூனிசத்தைச் சுமந்து பாருங்கள்
அது மனிதகுலத்தின் பேறு.

மனித குலத்தின் அமிழ்தை மறுத்து நிற்கும்
இந்துமதவெறி நஞ்சை முறிக்காமல்
எப்படிக் கிடைக்கும் நமக்கு அந்த இனிய ஏழு?
நஞ்சையே நாமறிவோம். அமுதை ஆரறிவார்?
சோற்றையே அமுதென்று
சொன்னார்கள் நம் முன்னோர்கள்.
வெறும் சோறு மட்டுமா அது?
ஏகாதிபத்திய மலைகளை மத்தாக்கி
ஆளும் வர்க்கத்தின் குடலை உருவிக்
கடலைக் கடைந்தால்
புரட்சியின் அமிழ்தத்தை இனி
சுரண்டலின் கைகளால் பிடுங்க முடியாது.
அமுதின் சுவையறியா அருமை மக்களே
அதற்கேற்ப இந்து மதவெறியின்
நால்வர்ணத் தோலுரித்து நஞ்சை முறிப்போம்!

வேதம் படித்தால்தான்
நாக்கு அறுபடும் அப்போது
இன்றோ —
வேறெவனும் படிக்கக் கூடாது என
ஆரம்பக் கல்வியே அறுக்கப்படுகிறது.
மீண்டும் பிரம்மதேயங்கள்
பன்னாட்டுக் கம்பெனிகளுக்குக்
கைமாற்றியதற்குக் கைக் கூலியாய்
அவாளுக்கு அமெரிக்க மோட்சம்;
டாலர் கடாட்சம்;

தலையிலிருக்கும் கங்கையை
அக்குவாஃபினாவுக்குக் கூட்டிக் கொடுத்துவிட்டு
மகாசக்தி உமையவளை
என்ரானிடம் இழந்துவிட்டு
ஆலன்சோலி கச்சையுடன்
நாட்டையே சுடுகாடாக்கி ஆடுகிறான் சிவன்.
எவன் கேட்பது?
சிவமயமே... உலகமயம் என
இருக்கு வேதத்தால் ஒரு இறுக்கு இறுக்கலாம்.

இந்து என்று எழுதிய இடமெல்லாம்
நீலம் பாரித்துக் கிடக்கிறது
நம் இனிய மொழி.

***ஒரே வழி***
***இந்த நஞ்சுக் கொடி பறித்து***
***நவம்பர் ஏழில் நாமும் பிறப்போம்.***

● **துரை. சண்முகம்**

*(சென்னையில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. இணைந்து நடத்திய நவம்பர் 7 புரட்சிநாள் விழாவில் படிக்கப்பட்ட கவிதை).*

www.padippakam.com

*லெனின் வாழ்க்கைச் சம்பவம்:*

# பக்கோமோவ்கா கிராமத்திலிருந்து ஒரு தூதுவர்

புரட்சி முடிந்த ரசியா. மப்பும் மந்தாரமுமான அக்டோபர் நாள். அதோ ஒரு விவசாயி. வயதானவர். பழந்துணியால் தைத்த மேல் கோட்டு, இடுப்பில் இறுகக் கட்டிய நைந்துபோன கயிறு. சிறு புதர்போல புருவ மயிர் தொங்க அவரது விழிகள் நிதானமாக, கவனமாகச் சுற்றுமுற்றும் ஆராய்ந்தன. அவரது தோளில் கோணிப்பை.

அவர் மாஸ்கோவுக்கு வந்ததற்கு ஒரு காரணம் உண்டு - புரட்சியின் நாயகன் லெனினைப் பார்க்க வேண்டும். அவரது ஸ்மோல்னி அலுவலகத்தை விசாரித்தபோது சிலர் கேலியாகச் சிரித்தார்கள்; துப்பாக்கி ஏந்திய மூன்று தொழிலாளிகள் பொறுப்போடு வழி சொன்னார்கள்.

ஒரு வழியாக ஸ்மோல்னியைக் கண்டுபிடித்து லெனினது செயலாளரையும் பார்த்துப் பேசி, அவர் சந்திக்க வேண்டிய விவசாயத் துறைத் தலைவரது அறைக்கும் அனுப்பப்பட்டார்.

அந்த விவசாயி பக்கோமோவ்கா கிராமத்திலிருந்து வருகிறார். 'பக்கோமோவ்' என்ற பெயர்கள் கொண்ட குடும்பங்களே அங்கு அதிகம். அவர் பெயரும் பக்கோமோவ் - எவ்கார் பக்கோமோவ். சோவியத் வெளியிட்டுள்ள 'நில ஆணை' பற்றி அவருக்குப் பல சந்தேகங்கள் - அதையெல்லாம் தெரிந்து கொண்டபிறகு தான் கிராமம் திரும்ப வேண்டும். முக்கியமாக, அவர் லெனினைப் பார்க்காமல் ஊர் திரும்பக் கூடாது.

●●●

பரபரப்பான சோவியத் தலைமை அலுவலகத்தில் அவர் மட்டும் வித்தியாசமாகத் தெரிந்தார். ஒரு கையில் தொப்பி. மற்றொன்றில் கோணிப்பை. அவரது கோட்டிலிருந்தும், கோணிப் பையிலிருந்தும் வெந்த ரொட்டி மணமும், புகை மணமும் கலந்து வீசியது.

கோதுமை தூற்றும் களத்து மேடுகள்; காய்ந்த உருளைச்செடியைப் போட்டுத் தீமூட்டி எரியவிடும் வயற்புறம், இலையுதிர்கால நீலவானில் கதகதப்பான தெக்கத்திச் சூழல் தேடிப் பறந்து செல்லும் நாரைகள் - இது போன்ற சித்திரத்தை உங்கள் மனக்கண் முன்னால் கொண்டுவர அந்தக் கலவையான மணம் போதும்.

அடக்கமும் மரியாதையும் தோன்ற ஒரு பெண் அவரிடம் வந்து பேசினாள். ''விவசாயத்துறைத் துணைக் கமிசார் (கமிசார் என்றால் தலைவர்) அதோ அந்த மேசைக்கு வருவார். அதுவரை இங்கே நாற்காலியில் உட்காருங்க'' என்று ஓரமாக அமர வைத்தாள்.

பெரிய கூடம். அதில் பல சோவியத் துறைகள் இயங்கின. ஒவ்வொரு துறைக்கும் ஒரு கமிசார், துணைக் கமிசார். அவர்களுக்குத் தனித்தனி மேசைகள். பக்கோமோவுக்கு அது பிடிக்கவில்லை. அவரவர்களுக்குத் தனி அலுவலகம், பல அறைகள், வேலைக்குப் பல ஆட்கள் இல்லாமல் எல்லாருக்கும் சேர்த்து ஒரே ஒரு பெரிய கூடமா? நிர்வாகம் என்று இதை எப்படி நம்புவது? புரட்சி செய்து அதிகாரம் வைத்திருக்கும்போது நம்பிக்கை ஊட்டும், ஏன் அச்சமூட்டும் விதமாக அடக்கி ஆளுகிற விஷயங்கள் கூட தேவைதானே?

பக்கோமோவ் தொடைமீது தாளம் போட்டவாறு யோசித்தார். ''என்னதான் புதுசுன்னாலும் அரசாங்கம், அரசாங்கம் தானே? அதிலும் லெனின் நடமாடக் கூடிய, கமிசார்கள் நிறைந்த இடம் இப்படி இருக்கக் கூடாது.

அவரவர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சில பெண்களும் சுறுசுறுப்பாக ஓயாது வேலை செய்தார்கள். தொலைபேசி அவ்வப்போது அலறிக் கொண்டிருந்தது. செய்திகள் வந்தன - கட்டளைகள் வெளியே சென்றன.

கொஞ்சநேரத்தில் பெரிய புத்தக அலமாரியைப் பலர் சேர்த்து தூக்கி வந்தார்கள். ஒருவர் அவசரமாக வந்து ''புகை பிடிக்காதீர்கள்'' என்றாரு பல கையைச் சுவரில் பொருத்திவிட்டுப் போனார்.

அதை ஒருமுறை படித்துத் தலை அசைத்துக் கொண்ட பக்கோமோவ் கோட்டுப் பையிலிருந்து புகையிலை உறையை எடுத்தார். நிதானமாக சிகரெட் தாள் ஒன்றை எடுத்து நன்றாக நீவிவிட்டு அதில் கொஞ்சம் புகையிலைத் தூளை விரவிச் சுருட்டினார். சுருட்டிய உருளையின் ஒரு ஓரம் நாவினால் பசைப்படுத்தி மூடினார். சிகரெட் தயார்; பற்ற வைத்துக் கொண்டு நாற்காலியில் நன்றாகச் சரிந்து உட்கார்ந்து புகையை ஆழமாக இழுத்தார்.

அதேசமயம் லெனின் தன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். பக்கோமோவைத் தாண்டிப் போக முயன்றவரால் முடியவில்லை, நின்றார்.

''மன்னிக்கணும் தோழரே'' என்று அழைத்தார் லெனின்.

''மன்னிச்சிட்டேன் சொல்லுங்க'' என்று சொல்லவிட்டு பக்கோமோவ் சிகரெட்டில் மேலும் ஒரு இழுப்பை இழுத்துக் கொண்டார்.

''அங்கே என்ன எழுதி இருக்குதுன்னு பார்த்தீங்களா?'' - லெனின் சுவற்றில் காட்டினார்.

''பார்த்தேன் பார்த்தேன்'' - பக்கோமோவ் நிதானமாகவே பதில் சொன்னார்.

''அப்புறம் எதற்காகப் புகை பிடிக்கிறீங்க?''

''நம்ம நாட்டில் கூட எத்தனையோ சட்டங்கள் இருக்குது. ஒரு மனுசன் அதுல பாதியக் கடைப்பிடிக்கணும்னு ஆரம்பிச்சான்னாக் கூட, அவன் ஆயுசு முடிஞ்சிடும்.''

''ரொம்பச் சரி. நான் முழுசா ஒத்துக்கறேன். ஆனா நிறைய சட்டம் இருந்தது பழைய ஆட்சியில. இப்ப இருக்கிறது புது அரசாங்கம் அல்லவா?''

''ஆமாம், புது அரசாங்கம்தான்...'' பேச்சை முடிக்காமலேயே பக்கோமோவ் சிகரெட்டை அணைத்து, பத்திரமாகப் புகையிலை உறையில் வைத்துக் கொண்டார்.

''இது எப்படி? நல்ல அரசாங்கமா, கெட்ட அரசாங்கமா?'' லெனின் மேலும் விளக்க முயற்சித்தார்.

''நல்ல அரசாங்கம் தான்னு நெனய்க்கிறேன். நிலத்தை எல்லாம் வினியோகிச்சுட்டாங்கல்ல...'' - அவர் இழுத்தார்.

''வேற என்ன சொல்லுங்க.''



படிப்பகம்

www.padippakam.com

பக்கோமோவ் கேள்வி கேட்டவரை ஒரு கணம் பார்த்தார்; திரும்பி அறை முழுக்க ஒரு கண்ணோட்டம் விட்டார்.

''ஆனால்... ஆனால் எதிர்பார்க்கிற அளவு திடமா இல்லே. இதச்செய், அதச் செய் என்று கட்டளை போட்டா போதுமா?''

''மன்னிக்கணும் விளாடிமிர் இலியிச், கிரான்ஸ்டாட் உங்களைக் கூப்பிடறார், ஏதோ அவசர மாகப் பேசணுமாம்....'' ஊழியர் ஒருவர் ஓடிவந்து லெனினைக் கூப்பிட, ''இதோ வருகிறேன்'' என்று பக்கோமாவுக்கும் ஊழிய ருக்கும் சேர்த்து ஒரே பதிலைச் சொல்லிவிட்டு அவர் விரைந்தார். லெனி னது வாய்மட்டும் ''அர சாங்கம் இன்னமும் திடமாக இல்லைங்கிறாரே'' என்று சொல்லிக் கொண்டிருந்தது.

●●●

**து**ணைக்கமிசார் வந்தார். பக்கோமோவோடு கைகுலுக்கினார். அவரும் லேசுப்பட்டவர் அல்ல. நிதா னமாக, ஆனால் திட்டவட்ட மாக மாணவனுக்கு வாத்தியார் விளக்கு வது போல 'நில ஆவணம்' பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தார்.

பாவம். அவரை ஒரு அதிகாரிக் குரிய அந்தஸ்தும் தராமல் அவரது மேசையையே தள்ளி வைத்து விட்டு இடத்தை ஒழுங்குபடுத்தி னார்கள் சில ஆட்கள். துணைக்கமிசார் பக்கோமோ வுக்கு அருகில் காகிதக் கட்டுக்கள் மேலேயே அமர்ந்து விளக்கிக் கொண்டேயிருந்தார். ஒரு மரியாதை நிமித்தம் கொஞ்சம் பேசிக் கொண்டி ருந்து விட்டு துணைக் கமிசாரிடமிருந்து 'நிலம் பற்றிய ஆவணம்' முழுசாக ஒரு புதுப் பிரதியும் வாங்கிக் கொண்டு வெளியே வந்தார் பக்கோமோவ்.

●●●

**இ**தோ பக்கோமோவ் மறுபடி லெனினது செயலரின் முன்னால் வந்து நின்றார்.

''தோழரே, துணைக்கமிசார் விளக் கியது போதுமல்லவா?''



*ரசிய ஓவியம் : செம்யோன் டிரோஃபிமோவ்*

''ஆங்... பேசினேன்...'' பக்கோமோவ் குத்துமதிப்பாகப் பதில் சொன்னார்.

''நான் நாற்காலியில உட்கார்ந்தி ருந்தேன். அவர் காகிதக் கட்டுமேலே உட்கார்ந்திருந்தார்... இப்படியே பேசினோம்...'' அவரது லேசான கிண்டலை செயலர் ரசித்துச் சிரித்தாள்.

கொஞ்சம் இடைவெளிவிட்டு அந்த விவசாயி ஆற்றாமையோடு கேட்டார்; ''தோழரே நான் லெனினைக் கட்டாயம் பார்க்கணும். இந்தக் கிராமத்தானோட ஆசையைப் புரிஞ்சிக்குங்க.''

அவர் அசைவதாகத் தெரியவில்லை. செயலருக்கு லெனினது வேலைகள் பற்றி முழுக்கவும் தெரியும். கடந்த சில நாட்களாகவே ஒருநாளைக்கு இரவில் 2 அல்லது 3 மணி நேரமே உறங்கினார்.

''கொஞ்சம் இருங்க. அவர் உங்க ளோட பேசமுடியுமான்னு கேட்டுச் சொல்றேன்.''

''ஓ, நன்றி தோழரே!'' - அவர் மகிழ்ச்சியில் கை தட்டினார்; ''முதல் லேயே அதைச் செஞ்சிருக் கணும் தோழரே!''

லெனின் அறை அது தான் என்று செயலர் அறை ஒன்றைக் காட்டினார். வெளியே காத்திருக்கச் சொன்னார்; பக்கோமோவ் காத்திருந்தார்.

''தோழர் அடுத்து உங்களைக் கூப்பிடுவார். கொஞ்சம் இருங்க'' - செயலர் வந்து அவரிடம் சொல்லிவிட்டு எங்கோ வேகமாகப் போனார்.

ஐந்து நிமிடம் நகருவது முப்பது நிமிசமாகத் தெரிந் தது பக்கோமோவுக்கு; பொறுமையிழந்து எழுந்து நின்றார். யாருமே இல்லாத அறைவாசலில் நிற்பது வேடிக்கையாகத் தோன் றவே, உடனே உட்கார்ந்து கொண்டார். ஒரு நிமிடம் போயிருக்கும், தன்னை அறியாமல் தான் எழுந்து நிற்பதையும், அறைக்கு முன் மேலும் கீழும் நடப்ப தையும் தானே கவனித்தார்.

நேரம் பறக்கிறதே? அந்தச் செயலர் ஏன் திரும்ப வரவில்லை? உள்ளே லெனின் தனக்காகக் காத்தி ருப்பாரோ? - கடைசியில் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு லெனினது அறைக்குள் நுழைந்துவிட்டார் பக்கோமோவ.

●●●

**க**ட்டையான நடுத்தர உயரம். சாதா ரண காற்சட்டை, மேல்சட்டை. ஒரு பெரிய மேசை. மேசைக்குப் பின்னால் இரு நாற்காலிகள். ஒரு நாற்காலி அருகே ஒரு சிறு மேசை. அதிலிருந்து ராணுவ வீரர் சாப்பிடும் கேன்டீன் உணவு அடைத்த டப்பா ஒன்றைத் திறந்து ஸ்பூனில் அவர் ஏதோ சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அவர்தான் லெனினாக இருக்க வேண்டும்.

''ஆ, நீங்களா தோழர், வாங்க வாங்க.'' - லெனின் வரவேற்றார். புகை பிடிப்பது பற்றிக் கேட்ட அதே நபர். ஓ, இவர்தானா லெனின்?

''உங்க பேர் என்ன?'



படிப்பகம்

www.padippakam.com

''பக்கோமோவ். எவ்கார் பக்கோமோவ்.''

''நீங்கள் ஏன் இங்கே உட்காரக் கூடாது?'' - தனக்கு அருகிருந்த ஒரு நாற்காலியைக் காட்டினார் லெனின்.

''நீங்க கிராமத்துலேருந்து நில ஆணைப்பற்றித் தெரிஞ்சிக்கணும்னு வந்திருக்கீங்க. அரசாங்கம் போதுமான அளவு 'திடமா' இல்லேங்கிறீங்க, சரி தானே? ரொம்ப சுவாரசியமான கேள்வி'' - அவர் முகத்தில் புன்சிரிப்பு.

பக்கோமோவ் அந்த நாற்காலியில் தொற்றியதுபோல அமர்ந்தார். லெனினையும், அவர் கையிலிருந்த டப்பா உணவையும் மாறி மாறிப் பார்த்தார். வெண்ணெய் இல்லாத ஓட்ஸ் கஞ்சியைச் சாப்பிட்டு இப்பேர்ப்பட்ட தலைவர் எப்படி ஒரு தேசத்தையே தாங்க முடியும்? வந்த வேலையை விட்டுவிட்டு லெனினை விசாரித்து விட அவர் முடிவு செய்தார். ''வெண்ணெய் கூட இல்லாமயா சாப்பிடறீங்க?'' என்றார்.

''இப்போதைக்கு அப்படித்தான் தோழர் பக்கோமோவ்'' என்றார் லெனின்.

''ம்...ம்...'' விவசாயி வாய்க்குள் முனகினார்.

''மன்னிக்கணும் தோழரே...'' லெனின் திடீரென்று கேட்டார். ''கொஞ்சம் சாப்பிடறீங்களா?... ஸ்பூன் வெச்சிருக்கீங்களா? நீங்களே எடுத்துக் கங்க...''

''நன்றி தோழர்... எனக்கு வேண்டாம்'' - பக்கோமோவ் மறுத்தார்.

சுற்றிலும் எல்லாவற்றையும் ஊன்றிக் கவனித்தார், லெனினையும் சேர்த்து.

''சரி முதல்ல உங்க கிராமத்தப் பத்திச் சொல்லுங்க. விவசாயிங்க என்ன சொல்றாங்க? ஆணை பற்றி என்ன பேசிக்கிறாங்க?''

சோவியத்தின் முதல் ஆவணமான நில ஆவணம் - தான் தயாரித்து முன்மொழிந்து இறுதியான ஆவணம் - அவர் நினைவில் வந்திருக்க வேண்டும். விவசாயிகள் அதை எப்படி வரவேற்றார்கள் என்று தெரிந்து கொள்ள லெனினுக்கு ஆர்வம். கற்றுக் கொள்கிற மாணவன் போல ஆசையோடு ஊன்றிக் கேட்கலானார்.

பக்கோமோவ் ''நில ஆணை பற்றி என்ன சொல்றாங்கன்னு கேக்கறீங்க. என் வாழ்க்கையிலேயே மக்கள் அந்த மாதிரிப் பரவசம் அடைஞ்சத நான் பார்த்ததே இல்லை. அப்படி ஒரு சந்தோசம்'' என்றார். இப்போதும் அதன் ஒளி அவர் முகத்தில் மினுங்கியது.

''கிராமத்தையே ஒரு கலக்குக் கலக்கிட்டுதுன்னு சொல்லலாமா?'' - லெனின் கேட்டார்.

''எங்கப் பார்த்தாலும் அதே பேச்சு. தேனீ போல இங்கேயும் அங்கேயும் சனங்க போயி வராங்க. அங்க அங்க கூட்டமா நின்னு விவாதிக்கிறாங்க. ஏ... அப்பா...''

''என்ன விவாதிச்சிக்கிட்டாங்க...?'' லெனின் விவசாயியின் முகத்தைப் படித்தார்.

**''தோழரே, சோவியத் அரசாங்கத்தைக் காப்பாற்ற மற்றவங்க எப்படில்லாம் சண்டை போடுறாங்கன்னு ஓரமா நின்னு வேடிக்கையும் பார்க்கலாம்; கூடவே வந்து ஆயுதம் எடுத்து நீங்களும் காப்பாற்றலாம். ஆனால் நம்ம அரசாங்கம் திடமா இருக்கணும்; உங்களுடையதாகவும் இருக்கணும்.''**

''எல்லா நிலத்தையும் எடுக்கலாமா, அதுல கொஞ்சம் கொஞ்சம் எடுக்கலாமா?... இப்படி...''

''எல்லா நிலமும், எல்லா நிலமும்... கடைசி அங்குல இம்மி அளவு நிலம் உட்பட எல்லாம்தான்... அப்புறம் வேற என்ன சொன்னாங்க?''

''கொஞ்சம் கூட ஒரு விலை இல்லாம இலவசமாவா நிலம் கொடுப்பாங்க அப்படீன்னு ஒரு சந்தேகம் அவங்களுக்கு. ஒருவேளை, கொஞ்சமா ஒரு விலை இருக்கும், அப்பத்தானே பழைய மொதலாளி பசியால சாகாம இருக்க முடியும்? - இப்படியும் பேசிக்கிட்டாங்க...''

''அப்படீன்னா ஈட்டு விலை குடுக்காம நீங்க சும்மா நிலத்தை வாங்க விரும்பலே. உங்களோட அரசாங்கம் திடமா இருக்கணும். விவசாயிகளை அது சவுக்கால அடிக்கணும், காசப் பிடுங்கணும். அப்ப சரியா இருக்கும், அப்படித்தானே தோழரே? நான் மறுபடி சொல்றேன், நிலத்துக்குப் பைசா காசு கிடையாது. நிலம் யாருக்கு உரிமையோ அவங்களுக்குச் சேரணும் - அதுல ஓழக்கிறவங்களுக்குத் தான் சொந்தம். சரி, அப்புறம்... அப்புறம்...''

''அப்புறமா அவுங்க வேற ஒரு விசயத்தைப் பேசறாங்க'' - பக்கோமோவ் முக்கியமான விசயத்தைத் தொட்டு விட்டார்.

''அதான் வேணும், சொல்லுங்க.''

பக்கோமோவ் நீண்டபெரு மூச்சு விட்டார். எதற்கோ தயங்கினார். ''தயங்காம சொல்லுங்க தோழர்'' - லெனின் ஊக்கப்படுத்தினார்.

''ஒருவேளை இப்போ சும்மா நிலத்தை உட்டுப்புட்டு, பின்னாடி அடிச்சு ஒதச்சிப் பிடுங்கிட்டாங்கன்னா - அப்புறம் எத்தன தலைமுறை ஆனாலும் நிமிர முடியாது பாருங்க. அதான் சந்தேகம்.''

ஒரு நொடிக்குள் லெனின் கோபாவேசமானார். ''இதெல்லாம் யாரு பேசினாங்க. கொஞ்சம் சொல்லுங்க...''

பக்கோமோவ் கையை விரித்தார்.

''அவங்களுக்குப் பின்னால நிச்சயமா ஏதோ ரகசியம் இருக்குது...'' லெனின் எடுத்துக் கொடுத்தார்.

''ரொம்பப் பயங்கரம் தோழர்'' என்றார் பக்கோமோவ்.

''ஆனால் யாரைப் பார்த்து எதுக்காகப் பயப்படணும்?''

பக்கோமோவ் இப்போது பதில் சொல்லவில்லை.

''பலநூறு வருசமா கொட்டமடிச்ச பண்ணையாருங்களும், மடாலய மாமிச மலைகளும் நிலத்தைச் சும்மா கொடுத்துருவாங்களா? நிச்சயமா மாட்டாங்க. அவுங்க மிரட்டுவாங்க. அதமட்டும்தான் அவுங்க செய்ய முடியும். அவுங்களுக்காக யாரு அடிதடில இறங்கி உதவுவாங்க?'' என்றார் லெனின்.

''அதுக்கும் சில ஆளுங்க உண்டு தோழரே''

''இருப்பாங்க... இருப்பாங்க... ஆனால் அவுங்க அடிக்க அடிக்க சும்மா வாங்கிக்கிட்டு நாம அழிஞ்சு போகணுமா? அது எப்படிச் சரி?'' - லெனின் சூடேற்றச் சூடேற்ற பக்கோமோவ் கறி பிரட்டுவதுபோல வாகாக விசயங்களை எடுத்து வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

''இல்ல தோழரே, அவுங்க வலுவான ஆளுங்க.''

''எதிரிகளத்தானே சொல்றீங்க.'' - லெனின் இறுக்கிப் பிடித்தார். பக்கோமோவ் ஆமாம் என்று தலையாட்டினார்.

''இப்போ புரியுது தோழர். இப்போ நிலத்தை எடுத்துக்கிறீங்க. பிறகு புது அரசாங்கம் சிதறிப் போகலாம். போல்ஷ்விக்குகளும், கமிசார்களும் ஓடிருவாங்க. நிலத்தை எடுத்ததற்காக விவசாயிகளை எதிரிங்க தண்டிப்பாங்க. அடிப்பாங்க. கொல்லுவாங்க. அதனாலதான் சோவியத் அரசாங்கம் திடமாக இல்லைன்னு சொன்னீங்க, அப்படித்தானே தோழரே! சோவியத் அரசாங்கத்த, நம்ம அரசாங்கத்த யாராலயும் அசைக்க முடியாது. அது உயிரோடு வாழணும்னா நம்ம கையில இருக்குது... உங்களையும் சேர்த்துத் தான் தோழரே...''

லெனினது கடைசிச் சொற்கள் புதிராக இருந்தது. அவர் கேட்டார்: ''என் கையில என்ன இருக்குது லெனின் தோழர்?''

''தோழரே, சோவியத் அரசாங்கத்தைக் காப்பாற்ற மற்றவங்க எப்படில்லாம் சண்டை போடுறாங்கன்னு ஓரமா நின்னு வேடிக்கையும் பார்க்கலாம்; கூடவே வந்து ஆயுதம் எடுத்து நீங்களும் காப்பாற்றலாம். ஆனால் நம்ம அரசாங்கம் திடமா இருக்கணும்; உங்களுடையதாகவும் இருக்கணும்.''

பக்கோமோவ் தலைகுனிந்தவாறு யோசித்தார்.

●●●

மேசையிலிருந்த தொலைபேசி ஒலித்தது. லெனின் பேசி முடித்தார். இதற்குள் கோணிப்பையைத் திறந்து கொஞ்சம் பன்றிக் கொழுப்பு, ஒரு பெரிய ரொட்டித் துண்டு, கொஞ்சம் உப்பு, வெங்காயம் எல்லாவற்றையும் எடுத்து மேசை மேல் வைத்தார் பக்கோமோவ். லெனின் வாங்க மறுத்தார்.

''கிராமத்துல போய் இதச் சொன்னா என்னைக் கொன்னுடுவாங்க.'' என்று கெஞ்சினார் பக்கோமோவ். லெனின் சிறிய அளவு ஏற்க ஒப்புக் கொண்டார்.

''நன்றி தோழரே. உங்களிடமிருந்து இதற்கு மேலும் கேட்கலாமா?''- லெனின் கேட்டார். பக்கோமோவ் திகைத்தார்.

''கொழுப்பு - ரொட்டி சாப்பிடறீங்க. ஆனால் தொழிலாளி, ராணுவம், நம்ம படிப்பாளிங்களுக்கு என்ன கிடைக்கிறது தெரியுமா? கொஞ்சம் ஓட்ஸ் கஞ்சிதான்'' என்றார் லெனின்.

பக்கோமோவ் தலை நிமிரவேயில்லை. லெனினது விமரிசனத்தை அவர் ஏற்றுக் கொண்டார்.

''தோழரே... தொழிலாளிகளுக்கு நாங்க நல்ல ரொட்டி கொடுக்க முடியும். எப்படியாவது சேர்த்து அனுப்புவோம்..'' என்று பதில் சொன்னார்.

''அற்புதம் தோழரே, உங்க கிராமத்துலயே இருக்கட்டும். தொழிலாளர் பிரதிநிதி வந்து பெற்றுக் கொள்வார். இப்படித்தான் புதுத்திட்டம் வேணும் தோழரே.''

**''ஏன் நம்ப முடியாது தோழர்? இதோ பாருங்க. உங்களை சோவியத்துக்குத் தேர்ந்தெடுத்தால் நீங்கள் தானே அரசாங்கம். தோழரே, நைந்துபோன மரப்பட்டையாலான ஷூ காலணி, கிழிந்த துணிக் கோட்டு, கயிறு பெல்ட்டு போட்ட நீங்கள்தான் அரசாங்கம். அது என்ன வகையான அரசாங்கம்?''**

லெனின் உடனே அதையே ஒரு திட்டமாகத் தனித்தாளில் குறித்துக் கொண்டார்.

''சரி. நிலம் எடுத்துக்கிறப் போறீங்களா, இல்லையா?''

''நிலம் தானே... அந்த ஆணை வந்து ஒரு மணி நேரத்துல எப்பவோ பிரிச்சிக்கிட்டோம்.''

அறையில் ஒரு நிமிடம் ஆழமான அமைதி. அடுத்த நொடி அதை உடைத்து எறிவதுபோல லெனின் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

''மொத்த நிலத்தயும் பிரிச்சிட்டீங்க, அப்புறம் எதுக்குத் தோழர் இப்ப ரெண்டாவது யோசனை?''

''ரெண்டாவது யோசனை எனக்கில்லை தோழர். ஆனால் இன்னொரு கேள்வி?''

''ரொம்ப முக்கியமோ?'' - லெனின் கண்கள் குறும்பாய்ச் சிமிட்டின.

''நம்ம அரசாங்கம் நிரந்தரமா இருக்கும்னீங்க. ஆனால் இது என்ன வகை அரசாங்கம்? ஒரு அதிகாரிக்கு மேசை கூட இல்ல. இன்னொருத்தர் ஒரு தலைவர் வெண்ணெய் இல்லாம வெறும் கஞ்சி குடிக்கிறார்...''

''அதுவும் அந்தத் தலைவர் ஒரு வழுக்கைத் தலையர்...'' தன் தலையைக் கையால் தடவியவாறு பக்கோமோவ் குரலில் பேசிக் கேலி செய்தார் லெனின்.

''வெறும் கஞ்சி குடிக்கிறவர் மொத்த சோவியத் அரசாங்கத்தை நடத்துகிறார் என்றால் நம்ப முடிகிறதா?''

சளைக்காமல் லெனின் எதிர்க் கேள்வி போட்டார்: ''ஏன் நம்ப முடியாது தோழர்? இதோ பாருங்க. உங்களை சோவியத்துக்குத் தேர்ந்தெடுத்தால் நீங்கள் தானே அரசாங்கம். தோழரே, நைந்துபோன மரப்பட்டையாலான ஷூ காலணி, கிழிந்த துணிக் கோட்டு, கயிறு பெல்ட்டு போட்ட நீங்கள்தான் அரசாங்கம். அது என்ன வகையான அரசாங்கம்? ஆனால், உங்க கிராமத்துல ஒவ்வொருத்தரும் சொல்வாங்க, எகோர் பக்கோமோவ் தான் சோவியத் பிரதிநிதி. இப்படிச் சொன்னாங்கன்னா, அது என்னாய்யா அரசாங்கம்?''

பக்கோமோவின் உள்ளம் உருகி ஓடியது.

அவரை வாயில்வரை அழைத்துச் சென்று கைகுலுக்கி வழியனுப்பினார் தோழர் லெனின்.

அடுத்த சில நொடிகளில் வரவேற்பறைக் கூடத்தில் நின்ற பக்கோமோவ் சுற்றி ஒரு நோட்டம் விட்டார். இப்போது அந்தக் கூடம் போர்க்களத்துக்கான ஆயுதம் தயாரிக்கும் உலைக்களமாக உருமாறி பிரம்மாண்டமாகத் தெரிந்தது. தன்னையே அவர் ஒரு கணம் பார்த்துக் கொண்டார். மரப்பட்டைக் காலணி, கிழிந்த துணிக் கோட்டு, கயிறு பெல்ட், கோணிப்பை...

''நானா சோவியத் அரசாங்கத்தின் பிரதிநிதி?'' - அவர் யோசித்தார். அழகான புன்முறுவல் அவர் முகத்தில் பூத்தது.

*லெனினது வாழ்க்கைச் சம்பவங்களை வைத்து எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'தொலைவில் ஒரு நம்பிக்கை ஒளி' என்ற நூலிலிருந்து.*

*ஆசிரியர் : செர்க் ஆன்டோனோவ்*

படிப்பகம்

www.padippakam.com

## த.மு.எ.ச.:

# கோமாளி வள்ளல்கள்

திருச்சியில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் (த.மு.எ.ச.) மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இதில் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் நடித்த பிரகாஷ்ராஜ், 'அழகி' பட தயாரிப்பாளர் உதயகுமார் மற்றும் இயக்குநர் தங்கர்பச்சான் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் த.மு.எ.ச. பொறுப்பாளர்கள் மேலாண்மை பொன்னுச்சாமி, நந்தலாலா அனைவரும் 'அழகி' படத்தைப் பாராட்டியும், வியந்தும் பேசினர்.

ஆனால் அடுத்துப் பேசிய இயக்குநர் தங்கர்பச்சானின் உரை விருது கொடுத்தவர்களையும், அதைக் குறிப்பெடுக்க வந்த பத்திரிகையாளர்களையும் நெளிய வைத்துவிட்டது. அவர் பேசியதாவது:

''இன்றைய தினம் நாடு கடும் வறட்சியில் செல்கிறது. இளைஞர்கள் விட்டேற்றியாய் இருக்கிறார்கள். நான் பழனியில் படப்பிடிப்பு நடத்தும்போது கூடும் 5000 இளைஞர்களைப் பார்க்கும்போது படக்கதையின் நினைப்பையே மாற்றி விடுகிறது. இந்த நிலையில் படப்பிடிப்பில் பாம்பு புகுந்து விட்டதாகப் பத்திரிக்கைகள் செய்தி போடுகின்றன. பத்திரிக்கைகள் இன்று உண்மைச் சம்பவம் எதையும் வெளியிடுவதில்லை. காசு சம்பாதிப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர். இந்தக் கருத்து உங்களைப் பாதிக்குமெனில் எனக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது.

''அடுத்து, 'அழகி' படம் பற்றி பேசியவர்கள் நான் ஏதோ ஒரு அற்புதமான படம் இயக்கியதைப் போலப் பேசினீர்கள். 'அழகி' படத்தை இப்படியும் எடுக்கலாம் என்றுதான் காண்பித்தேன். நான் எடுத்த படத்தினால் சமூகத்தில் மாற்றம் ஏற்படுமா என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். இன்றைய தமிழக அரசியல் சூழ்நிலையில் விவசாயம் இல்லை, வேலையில்லாத் திண்டாட்டம் எனப் பல்வேறு வகையான பிரச்சினைகள் இருக்கும் போது இப்படி ஒரு விழா தேவையா? நிகழ்ச்சியாளர்கள் வருத்தப்பட வேண்டாம். நான் இந்த விருதை வருத்தத்துடன்தான் ஏற்றுக் கொள்கிறேன். நாம் நம்முடைய இலக்கை மாற்ற வேண்டும். இந்த வருடம் தமிழ்த் திரைப்படங்களுக்கு விருது இல்லை என்று அறிவிக்க வேண்டும். நாம் இப்படிக் கண்மூடித்தனமாகத் திரைப் படங்களுக்கு மட்டும் விருது வழங்குவதால் என்ன மாற்றம் வரப்போகிறது?

''இந்தக் கடும் வறட்சியிலும் விவசாயம் செய்த விவசாயிக்கு விருது கொடுங்கள். வேலை இன்றி தொழிற்சாலைகள் மூடி வரும் நிலையில் நல்ல தொழிலாளிக்கு விருது கொடுங்கள். தமிழ்த் திரையுலகத்துக்கு மட்டும் என்ன வருடா வருடம் விருது கொடுக்கும் விழா? நிறுத்துங்கள் இந்தப் போக்கை! இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும்போது இந்தப் பத்திரிக்கைகளும் திரைப்படத்துறையினரைப் பற்றி மட்டும் எழுதுவது, மட்டமான விசயங்களைப் பெரிதுபடுத்திப் பேசுவது என்று உள்ளனர்.

''இதை நான் சொல்வதனால் இடது கம்யூனிஸ்டா, வலது கம்யூனிஸ்டா, எந்தக் கம்யூனிஸ்டு என்றெல்லாம் ஆராய்கிறார்கள். நீங்கள் எதுவாக நினைத்தாலும் நான் மக்கள் கலைஞன் என்றுதான் சொல்வேன். அதன் பார்வையிலேதான் விமரிசனங்களை வைத்துள்ளேன். இதனால் என்மீது உங்களுக்கு வருத்தம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். 'அழகி' படத்திற்கான விருதை வருத்தத்துடனே ஏற்றுக் கொள்கிறேன்.''

தங்கர்பச்சான் பேசி முடித்தபோது மேடையில் இருந்த த.மு.எ.ச. தலைவர்கள் தர்மமும் - சங்கடமும் கலந்த அசட்டுத்தனத்தில் வழிந்தனர். அதைச் சரிக்கட்ட இரண்டு துரிதகதித் தீர்மானங்களையும் கொண்டு வந்தனர். அதிலொன்று 'காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாகத் தண்ணீர் திறந்து விட வேண்டும்' என்று முழங்கியபோது அரங்கிலிருந்த கூட்டம் கேலியாகச் சிரித்தது.

— செய்தி:
கே. மாரியப்பன், திருச்சி.

### வாசகர் கடிதம்:

## பாரதி அவலம்

'பாரதி அவலம்' கட்டுரை சாராம்சத்தில் இந்தியச் சமூகப் பொருளாதர விடுதலைக்குப் பாடுபட்ட, குரல் கொடுத்த புரட்சிகரப் பாரம்பரியத்தை, ஜனநாயகப்படுத்துவதன் அவசியத்தை உணர்த்தியது. உப்பு, புளிப் பிரச்சனைக்குக் கூட மாகாளி பராசக்தியிடம் புலம்புகிற 'மகாகவி' பாரதியின் நடைமுறைகளும், எழுத்துக்களும் 'இந்து மீட்புவாதக் கனவு' என்ற முட்டுச்சந்தில் திணறுவதை வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆய்வுப்படி விளக்கியிருப்பது அருமை.

இதைத் தொடர்ந்து, த.மு.எ.ச.வினர் ஆங்காங்கே 'பஜனை மண்டலி'கள் நடத்தி, பாரதியிடம் நல்லிணக்கமாகப் போங்கள் என்றும், ''கம்யூனிஸ்டுகள் எல்லோரும் முற்போக்காளர்கள். ஆனால் முற்போக்காளர் எல்லோரும் கம்யூனிஸ்டுகள் இல்லை.'' என்று கூறி ''என் கவிதை எந்த அளவிற்குச் சரியோ அந்தளவிற்கு மட்டுமாவது பரிசு கொடுங்கள்'' என திருவிளையாடல் தருமி ரேஞ்சிற்குச் சென்றுவிட்ட பரிதாபம் நடந்தது.

பாரதியின் சமரசவாத மதிப்பீட்டை முன்வைப்பவர்கள், அநேகமாக, பார்ப்பனப் பாசிசம் குறித்தும், அத்தகைய போக்கையே கடைப்பிடிக்க இயலும் என்று கட்டுரையாளர் குறிப்பிட்டதை நிருபிக்கும் வகையில், சமீபத்தில் இடது, வலதுகளின் தலைமையில் டெல்லியில் நடைபெற்ற 'வேலைநிறுத்த உரிமைப் பாதுகாப்பு' மாநாட்டில் கலந்து கொள்ள ஏகாதிபத்தியங்களின் கைக்கூலி பார்ப்பன ஜனதா கட்சியின் தொழிற்சங்கப் பிரிவான பாரதிய மஸ்தூர் சங்கத்தை (BMS) அழைத்ததில் அம்பலப்பட்டனர்.

பாரதியிடம் மண்டிக்கிடந்த வர்ணாசிரமக் கருத்தியலுக்குப் பதில் சொல் எனக் கேட்டால் ''தீண்டாமை இந்து மதத்தில் இல்லை; இந்துச் சமூகத்தில் தானிருக்கிறது'' என்று சங்கராச்சாரியார் போல் பதில் பேசி வார்த்தைகளில் ஒளிந்து கொள்கிறார்கள்.

● திலீபன்,
திருப்பரங்குன்றம்.

www.padippakam.com

## நூல் அறிமுகம்:













### தண்ணீரை தனியார்மயமாக்காதே

**ரூ. 5.00** **பக். 42**

அரசு, அதிகார வர்க்க அமைப்புகள் ஆகிய வற்றை இடித்துரைக்கும் இந்நூல், தண்ணீர் மனித குலத்தின் பொதுவுடைமை, மக்களது உரிமை என படிப்பவர் உணரும்படி எளிதாக விவரங்களை எடுத்து வைக்கும் இந்த நூல் தீர்வு என்ற வகையில் சரியான சட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்று கூறுவதன் மூலம் அரசின் வர்க்கத் தன்மையைச் சிரமப்பட்டு மறைத்து விடுகிறது.

தண்ணீர், குளிர்பானம் என்ற இரண்டு விஷயங்களில் பன்னாட்டுக் கம்பெனிகளின் ஆக்கிரமிப்பைத் தெரிந்து கொள்ள இந்நூல் உதவும்.

ஆசிரியர் : **சேது**

வெளியீடு : **ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி சொசைட்டி** (SIRD)
மதுரை-625 002.

### ஒரு சாண் மனுஷன்

**ரூ. 40.00** **பக். 79**

சிறுவர்களுக்கான நாட்டுப்புறக் கதைத் தொகுப்பு என்ற பெயரில் வந்திருக்கும் இந்நூல் மிகவும் சாதாரணமான நீதி - உண்மை - விசயங்களை காக்கா, குருவி, கதைகள் மூலம் அம்புலி மாமா பாணியில் சொல்கிறது. இயற்கை, விலங்குகள், கற்பனை கலந்து குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டிய கதைகளின் மூலம் சமூகப் பொறுப்பும், அவலமும், இயற்கை மற்றும் சமூக அறிவும் கற்றுத் தரமுடியும். அந்த நோக்கம் இந்நூலில் இல்லை.

ஆசிரியர்: ***கம்பீரன்***

வெளியீடு: ***செம்புலம்,***
50, 5வது தெரு,
அச்சுதன் நகர்,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 97.
தொ. பேசி: 22346473.

### மரணதண்டனைக்கு மரண தண்டனை

**ரூ. 60.00** **பக். 158**

மரண தண்டனை - அணு மின் நிலையம் - போபால் விபத்து - புகையிலை ஊழல் - தடா - பொடா ஆகியவற்றுக்கு எதிராகவும், ஈ.எம்.எஸ் - சங்கர் குகா நியோகி - அம்பேத்கர் ஆகியோர் நினைவாகவும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் எழுதிய கட்டுரைகள், பேசிய உரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்: ***வி.ஆர். கிருஷ்ணய்யர்***

தமிழாக்கம்: ***டாக்டர். வெ. ஜீவானந்தம், பொன். கிருஷ்ணசுவாமி***

வெளியீடு:
***சோக்கோ வாசகர் வட்டம்***
ஜஸ்டிஸ் பகவதி பவன்,
143, ஏரிக்கரை சாலை,
கே.கே. நகர்,
மதுரை-20,
தொ.பேசி: 0452 - 2583962.

### பண்டிதரின் தமிழிசைத் தொண்டு

**ரூ. 50.00** **பக். 131**

நெல்லையில் சில தமிழார்வலர்கள் அடங்கிய 'குறிஞ்சி' எனும் அமைப்பினர் சென்ற ஆண்டு நடத்திய ''ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசைத் தொண்டு - தமிழிசை ஆய்வரங்கம்'' எனும் கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. இதில் தமிழிசை குறித்தும், பண்டைய தமிழிலக்கியங்களில் உள்ள இசைக்குறிப்பு - இலக்கணம் பற்றியும், ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை ஆய்வுகளை விளக்கியும் பல அறிஞர்கள், முனைவர்களது கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்கள் இசை விழாக் கருத்தரங்குகளை ஆர்வமுடன் கவனிக்கும் வாசகர்களுக்கு இந்நூலும் தேவைப்படும்.

வெளியீடு: ***குறிஞ்சி***
25, காந்தி நகர்,
திருநெல்வேலி - 627 008.

### வாக்கு மூலங்கள்

**ரூ. 5.00** **பக். 42**

தேசிய மனித உரிமை ஆணையத்தால் நிறுவப்பட்ட (வீரப்பனைப் பிடிப்பதற்காகச் செயல்படும் அதிரடிப்படையின் அட்டூழியத்தை அறிய) நீதிபதி சதாசிவா விசாரணைக் குழுவின் முன் சித்திரவதையால் குதறப்பட்ட 190 அப்பாவிகள் மற்றும் குதறிய 37 போலீசுக்காரர்களின் வாக்கு மூலங்கள் நூலில் இருக்கின்றன. சித்திரவதையால் பார்வையிழந்தோர், செவிடானவர், ஊனமுற்றோர், நடைப்பிணமானோர், கும்பல் கற்பறிப்பு, மின்சார சித்திரவதை என எல்லையற்ற கொடூரங்களை அந்த அப்பாவிகள், குறிப்பாக பெண்கள் விவரிப்பது எவரையும் கலங்க வைக்கும். குற்றமிழைத்த போலீசோ இவற்றை பொய்யுரை என்று ஒரு வார்த்தையில் எந்தக் கவலையுமின்றி மறுப்பது எவரையும் ஆத்திரம் அடைய வைக்கும்.

வெளியீடு:
***சித்ரவதைக்கு எதிரான பிரச்சாரம்,***
மக்கள் கண்காணிப்பகம் - தமிழ்நாடு
6, வல்லபாய் சாலை,
சொக்கிகுளம், மதுரை-2.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/PMG (CCR)/239/03-05
www.padippakam.com

## வாழ்க்கையே கவிதையாய்!

கணக்கிட்டுப் பார்த்தால்
உங்களோடு நான் பேசியது
ஒருசில மணித்துளிகள் மட்டுமே!
புரியாத உங்கள் கவிதையின்
பூடகத்தன்மை குறித்தும்
எழுதாத என் கவிதைகளின்
இயக்கமின்மை குறித்தும் சில மணித்துளிகள்!
விரியாத கவிதைத்தளம் குறித்தும்
வினையாக்கும் முயற்சிகள் குறித்தும்
சில மணித்துளிகள்!

அப்பொழுதும்,
அதற்குப் பின்னரும்
தங்களைக் காண நேர்ந்தபொழுதெல்லாம்
சிநேகபாவம் கண்களில் தொனிக்க
மௌனம் கசியும் புன்னகை
விரிந்து நிற்கும்.
அந்த மௌனத்தின் பின்னே
இரத்தம் கசிந்ததை...
தோழரே,
இன்றுதான் அறிந்தேன்.

இன்று உணர்கிறேன்,
தங்களை மேவியிருந்த மௌனம்
சகலமும் அறிந்த செருக்கின் விளைவல்ல...
சற்றும் நிலைகுலையாமல்
மரணத்தின் நிழலில்
மக்களுக்கான வெளிச்சம் தேடிய நிதானம்.

இடையூறிழைத்த இரத்தத்தாலும்,
விடையளித்த கவிதைகளாலும்,
புரட்சியின் ஊழியராய்
இயக்கம் சுமந்த உறுதியினாலும்
நீங்கள் நெய்து போட்ட
உங்கள் வாழ்க்கை
கவிதையாய் மிளிர்கிறது...!

நீங்கள் தொடர்ந்து சென்ற பாதையில்
கட்டுக்கடங்காத உங்கள் குருதியைப் போல
பல நூறு தீபன்கள்
அணிவகுத்து வருகிறார்கள்.
உங்கள் புன்னகை
வெளியெங்கும் நிறைந்து
மௌனமாய் வாழ்த்துகிறது!

- பால்ராஜ்



தோழர் தீபன் கடந்த 12.10.03 அன்று மறைந்து விட்டார். ஹீமோஃபீலியா என்ற கொடிய நோயினால் அவருக்கு மரணம் ஏற்பட்டது.
தோழர். தீபனுக்கு சிவப்பஞ்சலி!

படிப்பகம்